(ALL RIGHTS RESERVED.)
இந்தப் பத்ரிகைக்குரிய விஷயங்களை அநுமதியின்றி ஒருவரும் ப்ரசுரிக்கக்கூடாது.

# பிழைக்கும் வழி

வித்யா விஹாரிணியும் சேர்ந்தது.

119

# PRACTICAL LIFE.

WITH WHICH IS INCORPORATED THE VIDYA VIHARINI.

ஜி. ஏ. வைத்யராமன், பி.ஏ.,
பத்ராதிபர்.

G. A. VaidyaRaman, B.A.,
EDITOR.

புஸ்தகம் 5. Vol. 5. — பரீதாபி௵ பங்குனி௴ — MARCH 1913. — ஸஞ்சிகை 3. No. 3.

## பொருளடக்கம்.

விசேஷ வ்யாஸங்கள்.— பக்கம்.
ஒட்டுக்கட்டுதல்.
—டி. வி. வி. ரமணய்யர் ... 114
தமிழ் அகராதி வேலையின் விவரம்.
—ஜெ. எஸ். சாண்ட்லர் ... 117
தேன் சேகரிக்கு மொரு விதம்.
—ராயலு ... 118
வ்யாபாரம்.
—தே. சடகோபபிள்ளை ... 120
கதையும் ஜீவ்ய சரித்ரமும்.
—கனம். வி. க்ருஷ்ணஸ்வாமி அய்யர் அவர்கள் ஸி. எஸ். ஐ. ... 122
விசேஷத்திரட்டு.—
கொசுக்களின் கெடுதியும் அதை நிவர்த்திக்கவேண்டிய வழியும் ... 130
குள மராமத்து வேலைகள் ... 131
நெல் பயிருக்கு நீர்ப்பாய்ச்சல் ... 132
ஆயுஸை நீடித்திருத்தல் ... 135
மிஸ்டர் மதோல்காரின் பேச்சு ... 136
பத்ரிகை ஆராய்ச்சி. ... 137
பையன்கள் பகுதி ... 141
ஸ்த்ரீகள் பகுதி ... 143
பகுதிக்குறிப்புகள்
விவஸாயம்—வ்யாபாரம்--கைத்தொழில்--பொருளாதாரம் — கோவாபரேஷன்—இன்ஷ்யூரென்ஸ்—வித்யாவிஷயம்—விலையுள்ளபொருள்கள்—வ்யாபார முறைகள் சாஸ்த்ரமும், யந்த்ரங்களும், நூதன கற்பிதமும்—சட்டம்--வைத்யம்—வேடிக்கையும் துக்கடாக்கதைகளும்—விநோதங்கள்--யுக்திகளும் முறைகளும் — தமிழ்க் கல்வி ...145—161
தினவர்த்தமானம் ... 162
காலஸ்திதி . 166
பஞ்சாங்கம் ... 167

## CONTENTS.

**Special Articles—** PAGE.
GRAFTING
—T. C. V. Ramanaiyar ... 114
THE PROPOSED TAMIL DICTIONARY
—Rev. J. S. Chandler ... 117
A METHOD OF GATHERING HONEY
—Rayalu ... 118
BUSINESS
—T. Sadagopa Pillai ... 120
**Story and Biography—**
—HON. MR. V. KRISHNASWAMI AIYAR, C.S.I. ... 122
**Selections—**
Mosquitoes and a Remedy ... 130
Tank Restoration Work ... 131
Paddy Irrigation ... 132
Longevity ... 135
Mr. Mudholkar's Speech ... 136
**Review of the Press.** ... 137
**Boys' Section.** ... 141
**Ladies' Section.** ... 143
**Departmental Notes.—**
Agriculture ... ... ... ... 145
Commerce ... ... ... ... 147
Industry ... ... ... ... 148
Economics ... ... ... ... 149
Co-operation ... ... ... 150
Insurance ... ... ... ... 151
Education ... ... ... ... 152
Economic Products ... ... ... 153
Business Methods ... ... ... 154
Science, Machinery and Invention ... 155
Law ... ... ... ... 156
Medicine ... ... ... ... 157
Fun and Anecdote ... ... ... 158
Curiosities ... ... ... ... 159
Hints and Recipes ... ... ... 160
Tamil Literature ... ... ... 161
**Diary of the Month** ... ... 162
**Season** ... ... ... ... 166
**Calendar** ... ... ... ... 167

G. A. VaidyaRaman & Co., 3 & 4, Sunkurama Chetti Street, Georgetown, Madras.
ஜி. ஏ. வைத்யராமன் அண்டு கம்பெனி, 3 & 4. சுங்குராம செட்டித் தெரு, ஜார்ஜ்டவுன், மதராஸ்.

# ஒவ்வொரு இந்தியரும்

தம் தேசத்தவர்களில் ஆபிரக் கணக்கானவர்களுக்குத் தொழில் கொடுப்பனவும் தம் தேசத்தின் க்ஷேமாபி வ்ருத்திக்கு ஸாதகமா யிருப்பனவுமான கைத்தொழில்களை ஆதரிக்கவேண்டியது கடமையாகும். அடுத்த தடவை எப்போதாவது உடுப்புகள் தைக்க நீங்கள் ஆர்டர் கொடுத்தால்

## லா லி ம் லி

கலப்பில்லாத கம்பளித்துணி

இந்தியாவிலேயே, இந்தியர்களுடைய உபயோகத்துக்காக செய்யப்படுகிற தென்பதையும், லாலிம்லி உடுப்புகளை உடுத்திக்கொள்வதால் உங்கள் தேசத்தவர்களுக்குச் செய்யவேண்டிய கடைமையைச் செய்கிறீர்கள் என்பதையும் தேசத்தின் க்ஷேமாபி வ்ருத்திக்கு காரணமா யிருக்கிறீர்கள் என்பதையும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள்.

லாலிம்லி ஸூட் தைக்கும் துணிகள், சட்டைத்துணிகள், ட்வீட்கள், கம்பளிகள், உள் சட்டை முதலியவைகளுக்குத் துணிகளின் மாதிரியும், விலையும் எழுதிக் கேளுங்கள். இனாமாய் அனுப்பப்படும்.

கான்பூர் உல்லன் மில்ஸ் கம்பெனி, லிமிடெட், கான்பூர்.

**CAWNPORE WOOLLEN MILLS Co., Ld.**

**Cawnpore.**

12

# பிழைக்கும் வழி

வித்யா விஹாரிணியும் சேர்ந்தது.

## PRACTICAL LIFE.

WITH WHICH IS INCORPORATED THE VIDYA VIHARINI.

ஜி. எ. வைத்யராமன், பி. எ.,
பத்ராதிபர்

G. A. Vaidya Raman, B.A.,
EDITOR.

ஸ்தகம் 5. Vol. 5. | பரீதாபி௵ பங்குனி௴, MARCH 1913. | ஸஞ்சிகை 3 No. 3.

## Practical Life.

popular illustrated Tamil monthly magazine of al information and instruction devoted largely riculture, trade, industry, economics, story, bio- y, citizenship, and popular, scientific and technical ion.

ctical Life ' is subscribed for by Government for the agricultural stations and by several Local and Municipalities for the use of the teachers pils in the schools under their control.

TES OF SUBSCRIPTION POST FREE.

| | *Inland.* | | *Foreign.* |
|---|---|---|---|
| | Rs. A. P. | | Rs. A. P. |
| m ... | 4 0 0 | ... ... | 6 0 0 |
| py ... | 0 6 0 | ... ... | 0 8 0 |
| opy ... | 0 2 0 | ... ... | 0 3 0 |

RATES OF ADVERTISEMENT.

| | | |
|---|---|---|
| ... | 5 0 0 | per month. |
| ... | 2 8 0 | do |
| ... | 1 4 0 | do |

ve rates are all *net* and subject to no discount Orders should be accompanied with advance.

**to Contributors** :—The Editor solicits on subjects relating specially to agriculture, y and popular, scientific and technical edu- es should be written in plain colloquial e side of the paper only and on half pted articles will be paid for on publica- be understood that the publishers may tion republish in book form articles which aid for at the time of publication in the

hould be paid to any Agent. All remit- should be addressed to the Publishers, idyaRaman & Co., 3 &4, Sunkurama rgetown, Madras.

## பிழைக்கும் வழி.

முக்யமாய் விவஸாயம், வ்யாபாரம், கைத்தொழில், பொருளாதாரம், கதை, ஜீவ்ய சரித்ரம், ப்ரஜா லக்ஷணம், வித்யா விஷயங்கள் அடங்கிய ஸகலருக்கும் உபயோகமான ஒரு மாஸாந்தரத் தமிழ்ப்பத்ரிகை.

விவஸாயப் பண்ணைகளின் உபயோகத்துக்காக கவர்ன்மெண்டாரும், ஸ்கூல்களில் உபாத்யாயர்கள், மாணுக்கர்கள், இவர்களுடைய உபயோகத்துக்காக, பல லோகல் போர்டுகளும் முனிஸிபாலிட்டிகளும் 'பிழைக்கும் வழி'யை வாங்கிவருகிறார்கள்.

தபால் சார்ஜ் உள்பட சந்தா விவரம்.

| | உள் நாடு. | | அந்நிய நாடு. |
|---|---|---|---|
| வருஷம் 1 க்கு ... | 4 0 0 | ... | 6 0 0 |
| தனிப்ரதி ... | 0 6 0 | ... | 0 8 0 |
| மாதிரி காபி ... | 0 2 0 | ... | 0 3 0 |

சந்தாப்பணத்தை ஒரு ஏஜெண்டினிடத்திலும் கொடுக்கக்கூடாது. ஸகல பணத்தையும் எங்களுக்கு நேரில் அனுப்பிவிடவேண்டும்.

விளம்பர விகிதங்கள்.

| | | |
|---|---|---|
| 1 பக்கத்திற்கு | மாஸம் ஒன்றுக்கு | 5 0 0 |
| ½ பக்கத்திற்கு | „ „ | 2 8 0 |
| ¼ பக்கத்திற்கு | „ „ | 1 4 0 |

வ்யாஸம்எழுதுகிறவர்கள்கவனிக்கவேண்டியவை

விவஸாயம், வ்யாபாரம், கைத்தொழில் விஷயங்களைப்பற்றி வ்யாஸங்கள் தேவை. அவைகள் ஒப்புக்கொள்ளப்பட்டால் ப்ரசுரமானதும், எழுதினவர்களுக்கு தக்க ஸம்பாவனைசெய்யப்படும். ஒவ்வொரு வ்யாஸத்தையும் கடுதாசியின் ஒரேபக்கத்தில் ஒருபாதியை விட்டு மறுபாதியில் மட்டும் எழுதவேண்டும். பேசும் தமிழ்தான் தேவை. கடினமான தமிழ் உதவாது.

ஸம்பாவனை செய்திருக்கும் வ்யாஸங்களை நாங்கள் எங்கள் இஷ்டப்படி எந்த விதம் வேணுமானாலும் மறுபடி ப்ரசுரிக்க அதிகாரமுண்டு என்பதை நிருப நேயர்கள் அறியவேணும்.

ஜி. எ. வைத்யராமன் அண்டு கம்பெனி,
3, & 4, சுங்குராம செட்டித் தெருவு, ஜார்ஜ் டவுன்
மதராஸ்.

# SPECIAL ARTICLES.

## விசேஷ வ்யாஸங்கள்.

### GRAFTING

BY

T. C. V. RAMANAIYAR.

### ஒட்டுக்கட்டுதல்.

மரம், செடி, கொடி முதலியவைகள் வைத்து வளர்ப்பவர்கள் விதைகளையும், கொம்புகளையும், நாற்றுகளையும் நட்டுப்பயிரிடுவது வழக்கம். மா, கொய்யா, மாதுளை, எலுமிச்சை, பொம்படிமாஸ், பலா முதலியவைகளை வைத்துப் பயிர் செய்கிறவர்கள் அநேகமாய் விதைகளையே நட்டு, நாற்றான பிறகு வேறு இடங்களிற் பெயர்த்து வைத்து வளர்க்கிறார்கள். பூவரசு, அத்தி, ஆல், இச்சி, உதியமரம், கிலுஞ்சி முதலிய சில மரங்கள் கொம்புகளை நட்டுப்பயிராக்கப்படுகின்றன. இப்படியே ஆப்பிள், பேரீ முதலிய சில பழந்தரும் மரங்களையும் நட்டு வளர்க்கிறார்கள். மல்லிகை, ஜாஜி, வள்ளி, வெற்றிலை முதலிய பல கொடிகள் கணுக்களோடு கூடிய கொடிகளை நட்டுபயிராக்கப்படுகின்றன.

இப்படிப்பட்ட மரம், செடி, கொடி முதலியவைகளுக்கு மறுஜன்மம் கொடுத்து விசேஷமான நல்ல பலனை சீக்ரத்தில் அடையத் தகுந்த வழியிருக்கிறது. அதாவது, மா, கொய்யா, பலா, நாவல், எலுமிச்சை முதலிய பழந்தரும் மரங்களுக்கு ஒட்டுக்கட்டுவது. கிடைதத மா, கொய்யா முதலிய விதைகளை நட்டு இரண்டு மூன்றடி உயரம் வளர்ந்த பிறகு ச்ரேஷ்டமான அந்தந்த ஜாதிமரக் கொம்புகளை அக்கன்றுகளுடன் சேர்த்துக் கட்டிப் பயிராக்குவதே. இப்படிக் கட்டுவதில் இரண்டுவித முண்டு.

கன்றின் அடித்தண்டின் பருமனுக்கு ஸரியான அளவுள்ள ச்ரேஷ்டமான மரத்தின் கொம்பை ஸம்பாதித்து வைத்துக்கொண்டு, கன்றின் அடித்தண்டையும், கொம்பின் அடி நுனியையும் சாய்வுவாட்டத்தில் கூர்மையான கத்தியால் அறுத்து, கன்றின் தண்டினுடைய மேல் தோலை மூன்று கூறாக காலங்குலம் அல்லது அரையங்குலம் கீறிப் பிரித்து, நடு தண்டை சீவி எறிந்து, அந்த அளவு வைத் துக்கட்டும் கொம்பின் நுனியில் மேல் தோலைப் போக்கி, தோல் போக்கிய கொம்பி பாகத்திற்கு கன்றின் தோல் மூடும் பொருத்தி, மெல்லிய நூலால் கட்டி, சா யையும் செம்மண்ணையும் கலந்து ஒரு து யில் கனதியாய்ப்பூசி, அத்துணியால் பொ திய விடத்தைச் சுற்றிக்கட்டி, மேல் பாக லும் மேற்படி கலப்புச் சாந்தைப்பூசி, ஒ ரம் வரையில் கட்டியதுணி வரண்டு போ மல் ஜலம் தெளித்துக்கொண்டே வர டும். இப்படி ஒட்டுக்கட்டுவதற்கு மு கன்றின் அடித்தண்டைச் சுற்றி ஓரடி தோண்டி எருவிட்டு மண்மூடப்பட இரண்டு கொம்புகளையும் சீவிக் பொழுது வெட்டுவாயின் ஈரம் வரண் தற்குமுன் சரேலென்று கட்டவேண்டு

மற்றொருவிதம்.—கன்றின் அடித் ஒரு பார்சத்தில் ஓரடி உயரத்திற்கு டின் கனத்தில் முன்றிலொருபாக மையான கத்தியால் இரண்டங்குல நீ சீவி யெடுத்து விட்டு, கட்டவேண் பையும் அடிப்புறத்தில் இரண்டங் அவ்விதமே சீவி இரண்டும் பெ செய்து முன் சொன்னமாதிரி க இரண்டும் செவ்வையாகப் பொ யாகவும் வைத்துக்கட்டும் கொ யிற்கும்படியாகவும் சீவிக்கட்ட விதமே மாதுளை, எலுமிச்சை

படிமாஸ், பலா முதலிய மரங்களுக்குக் கட்டி நல்ல பலனை யடையலாம்.

ஒட்டுக்கட்டுவதற்கு மாலை வேளையே தகுந்த தென்று எண்ணப்படுகிறது. நீலகிரி மலையின் மேல் இவ்விதம் பல மரங்களுக்குக் கட்டி நல்ல பலனையடைகிறார்கள். ஒட்டுக்கட்டும் தொழிலில் மைஸூரிலிருந்து நீலகிரிக்கு கூலி வேலை செய்யவருகிற கன்னடியர்கள் மிகுந்த ஸமர்த்தர்கள். இவர்களிடமிருந்து சில படுகர் களும் இத்தொழிலைக் கற்றுக்கொண்டு செவ்வையாய்ச் செய்கிறார்கள்.

இவ்விதம் பூவரசு, ஆல், அத்தி, இச்சி, உதியமரம் முதலியவைகளுக்குக் கட்டி வளர்ப்பதில் உபயோகமில்லையாதலால் கட்டுவதில்லை. ஆனால் அத்திக் கன்றுடன் சீமை அத்திக் கொம்பைக் கட்டிப்பார்க்கலாம்.

ஆப்பிள், பேரி, பிச்சஸ், ப்ளம்ஸ் முதலிய ஐரோப்பாக்கண்டத்து மரங்களுக்கு நீலகிரி, சேர்வராயன்மலை, பெங்களூர், பழனிமலை, முதலிய குளிர்ச்சியான விடங்களில் மேற் கண்டவிதம் ஒட்டுக்கட்டுவது வழக்கம். நாட்டு ஆப்பிள் கன்றுகளுக்கு ச்ரேஷ்டமான சீமை ஆப்பிள் கொம்புகளை கட்டுகிறார்கள். ஆப்பிள் கன்றும் கிளைகளை நட்டே உண்டாக் கப்படுகின்றன. இக்கன்றுகள் ஒட்டுக்கட் டப்பட்ட மறுவருஷத்திலேயே புஷ்பிக்கின் றன. ஆனால் இரண்டு வருஷம் வரையில் விடும் புஷ்பங்களை கழித்து விடுகிறார்கள். அப்படிக் கழிக்காவிட்டால் மரம் அடர்ந்து வளர்ந்து தழைப்பதில்லை யென்று எண்ணப் படுகிறது.

ஜூன், ஜூலை மாஸத்திலடிக்கிற அடை மழைகாலத்தில் ஆப்பிள் சிம்புகளை வெட்டி நன்றாக எருவிடப்பட்ட பாத்திகளில் அடிக்கு ஒன்றாக நட்டு விடுகிறார்கள். நல்ல ஜாதிக் கொம்புகளை நட்டுப் பயிர் செய்தாலும் பிறகு ஒட்டுக் கட்டினாலன்றி சீக்ரத்தில் நல்ல பலனைக்கொடுக்கிறதில்லை. ஆகையால் எந்த ஆப்பிள் நாற்றுக்கும் ஒட்டுக்கட்டியே வளர்க் கப்படுகிறது. இரண்டு பெரிய மரத்தொட்டி கள் அல்லது பெட்டிகளை ஒன்றுக்குள் ளொன்று வைத்தால் மத்ய பாகம் சுற்றியும் முக்காலடியிருக்கும்படி தயாரித்து, பெரிய தொட்டியின் அடிப்பாகத்தில் சில சிறிய கற் களையும் சோலை மண்ணையும் அரையடியுயரத் திற்குப் போட்டு, சிறிய தொட்டியை அதன் பேரில் வைத்து, சுற்றிய இடைவெளியில், பெரிய மரங்களின் அடியில் தானாக உதிர்ந்து மட்கிய இலைகளையடைத்து, அதில் ஆப்பிள், பேரி, ப்ளம்ஸ், ரோஜா முதலிய கொம்புகளை நட்டு, நடுவிலிருக்கிற தொட்டியில் தண்ணீர் ஊற்றிவைக்கப்படுகிறது. இந்த சிம்புகள் ஒருமாஸ காலத்திற்குள் வேர்விட்டு மேல் பாகத்தில் இரண்டு மூன்றிடங்களில் அரும்பு கள் விட்டு தளிர்க்கின்றன. அவைகளை எடுத் துவேண்டிய இடங்களில் நட்டுப் பயிராக்கு கிறார்கள். இவைகளே ஆப்பிள் முதலிய நாற்றுகளென்று சொல்லப்படுகின்றன. இவை களுக்குத்தான், பிறகு ஒட்டுகள் கட்டப்படு கின்றன. ஒரு நாற்றுக்கு மூன்று நான்கு ஒட்டுகளும் கட்டுவதுண்டு.

அடித்தண்டு பருத்தவுடன் அநேகமாய் பிப்ரவரி மாஸத்தில் ஒட்டுகள் கட்டப்படுகின் றன. மார்ச்சு மாஸத்தில் கட்டப்பட்ட கொம்புகளில் புஷ்பங்களைப் பார்க்கலாம். மறுவருஷத்தில் காய்கள் பருத்துப்பலன் கொடுக்கும்.

இவ்விதம் பேரிக்கொம்புகளுக்கு அநேக மாய் செய்கிறவழக்கமில்லை, ஆனால் கனதி யான பேரிக்கொம்புகளை மழைகாலத்தில் வேண்டிய இடங்களில் குழிகள் தோண்டி எருவிட்டு நட்டுவிடுகிறார்கள். தழைத்த பிறகு சீமை பேரிக்கொம்புகளை கட்டிவிடுகிறார் கள். அல்லது அப்படியே விட்டுவிட்டாலும்

ஓங்கி வளர்ந்து நான்கு வருஷத்தில் பலன் கொடுக்கின்றன.

பிச்சஸ் விதைகளை நட்டு நாற்றான பிறகு வேண்டிய இடங்களில் பெயர்த்து நட்டு, அடித்தண்டு ஒரு அங்குல சுற்றளவான பிறகு ப்ளம்ஸ் கொம்புகளை ஒட்டுக்கட்டுகிறார்கள். பிச்சஸ் கொம்புகளை நட்டால் தளிர்ப்பதில்லை. கட்டப்பட்ட கொம்புகள் இரண்டு வருஷத்தில் காய்க்கத் தொடங்குகின்றன. இப்பழங்கள் அநேகமாய் ஜம்புநாவல் பழங்கள் போன்றவை. இப்பழங்கள் செடிகளில் அபரிமிதமாய்ப் பிடிக்கின்றன. இம்மாதிரி கொட்டை நாவல் கன்றுகளுக்கு ஜம்புநாவல் அல்லது வெள்ளை நாவல் கொம்புகளைக் கட்டி வ்ருத்தி செய்யலாமென்று நம்பப்படுகிறது.

ரோஜாச்செடிகளுக்கு இம்மாதிரி உயர்ந்த ஜாதிக் கொம்புகளை ஒட்டுக் கட்டுவதுடன் அரும்பு கட்டுதல் என்ற ஒரு வழக்கமும் நடப்பிலிருக்கிறது. முதலில் ஏதோ ஒரு ரோஜாக்கொம்பை நட்டு, அல்லது தொட்டிகளில் நட்டுப்பயிர் செய்த நாற்றை நட்டு வளர்ந்த பிறகு, நன்றாய் முதிர்ந்த ஒரு கிளையை மட்டும் மத்தியில் விட்டு மற்ற சிம்புகளை வெட்டி யெறிந்து விடப்பட்ட கிளையையும் ஒன்றரையடி உயரம் விட்டு மேற்பாகத்தையும் கழித்து விடுகிறார்கள். அப்படி செய்யப்பட்ட தண்டில் கால்பாகம் மேல்புறம் விட்டு ஒரு கூர்மையான கத்தியால் ஒரு அங்குல நீளத்திற்குமேல் தோலைக் கிழித்து, கிளையை வளைக்க பிளவையுண்டாகிறது. அப்பிளவையில் அரும்பை வைத்து மெல்லிய நூலால் கட்டி மேல்புறத்தில் சாணியைப்பூசி விடுகிறார்கள். மேற்படி பிளவையில் காற்றுப்புகுந்து வரண்டு போவதற்குமுன் அரும்பைத் தயார்செய்து வைத்துக்கொண்டிருந்து கட்டவேண்டும். அரும்பு ஒரு அங்குல நீளமுள்ளதாயும் அடிப்புறத்தில் அரையங்குல நீளமாவது மேல் தோலிருக்கும்படி தயார் செய்துவைத்துக்கொள்ளவேண்டும். அத்தோல் பிளவையின் அடிப்புறத்தில் மடியாமல் நுழைக்கப்படவேண்டும். அரும்பு அடிக்கட்டையிலிருந்து தளிர்த்ததாயும், கனத்ததாயும், பூச்சி புழுக்கள் அரிக்காததாயுமிருக்க வேண்டும். கட்டப்பட்ட அரும்பு இரண்டங்குலம் வளர்ந்தால் கட்டை அவிழ்த்து விடலாம். இப்படிக் கட்டப்பட்ட ஒவ்வொரு மரம் செடி முதலியவைகளின் அடிக்கட்டையிலிருந்து சிம்புகள் தளிர்த்துவந்தால் அவைகளை அப்போதைக்கப்போது கிள்ளி எறிந்து விடவேண்டும். கட்டப்பட்ட ஒட்டிலிருந்து தளிர்க்கப்பட்டவைகளை மட்டும் வளரும்படி விடவேண்டும்.

மல்லிகை, ஜாஜி, இருவாக்ஷி முதலியகொடிகளில் பல வாஸனையற்றவைகளாயும் சில அதிக வாஸனை யுள்ளவைகளாயு மிருக்கின்றன. வாஸனை யில்லாதவைகளுக்கு வாசனையுள்ள கொடிகளைக் கட்டி வளர்க்கலாம். சீக்ரத்தில் அதிக பலனை யடையலாம்.

மாதுளங்கன்றுகளுக்கு இவ்விதம் ஒட்டுக் கட்டினால் தகுந்த பலனை யடையலாம். ஒட்டுக்கட்டிய மரத்திலிருந்து உண்டான பழங்கள் ஒவ்வொன்றும் இரண்டு ராத்தல் கனமுள்ளவையாயும், விதைகள் பெரியவைகளாயும், அதிக சிவந்த நிறமுள்ளவைகளாயும், மிகுந்த மதுரமானவைகளாயு மிருப்பதுடன், டஜன் இரண்டு ரூபாய்க்கு ஸாதாரணமாய் விற்கக்கூடியவைகளாயு மிருக்கின்றன. ஆனால் இந்த மரங்களில் உண்டாகிற புஷ்பங்களில் பலவற்றைக் கழித்து பார்வைக்குத் திறமானதாகக் காணப்படுகிற சில புஷ்பங்களை மட்டும் பருக்கும்படி விடப்படுகிறது.

ஸாதாரணமாய் எலுமிச்சை, ஆரஞ்சி, கொய்யா, மாதுளை, மா, ஆப்பிள் முதலிய மரங்களில்

கொம்புகளுண்டாய் பக்கச் சிம்புகள் நுங்கி மரம் பார்வைக்கு அதிக அடர்த்தி ப் வளருகின்றன வென்பது யாவருக்கும் தரிந்த விஷயம். இவைகளை அநேகமாய் புப்படியே வளரும்படி விட்டு விடுகிறார்களே பன்றி அவைகளுக்கு யாதொரு பக்வமும் செய்வதில்லை. ஆகையால் வரவர மரத்தி லுண்டாகிற பழத்தின் பருமன் குறைந்து கொண்டும் பலன் குறைந்து கொண்டும் வருகிறது. கிளைகள் ஒன்றுக்கொன்று விசாலமாயிருக்கும்படியாகவும், ஒரு சிம்பு மற்ற சிம்பின்மேல் மோதாமலும் இலைகளுக்கு காற்று செவ்வையாகப் படும்படியாகவும், நெருக்கமாயிருக்கப்பட்ட கிளைகளையும் சிம்புகளையும், புஷ்பிக்கும் காலத்திற்கு முந்தி கழித்துவிட வேண்டும். அப்படி கழித்து விடுவதால் பலன் குறைந்துபோகக் கூடுமென்று பலர் எண்ணக்கூடும். அது தப்பிதம். கழித்து விட்ட கொம்புகளிலும் சிம்புகளிலு முண்டாகக்கூடிய பலனையும் சேர்த்து, விடப்பட்ட கொம்புகள் கொடுக்கு மென்பதில் தடையில்லை. இதை ஒவ்வொருவரும் பரீக்ஷை செய்து பார்க்கலாம்.

ஸாதாரணமாய் மரங்களிலும் செடி கொடிகளிலும் உண்டாகக்கூடிய பலனைவிட ச்ரேஷ்டமானதாயும் ருசி, வாஸனை, பருமன் முதலிய குணங்களில் மிகுந்ததாயும், அதிக சீக்ரத்தில் பலனைக் கொடுக்கிற ஸாதனம் ஒட்டுக்கட்டிப் பயிர் செய்வதுதான்,

டி. ஸி, வி, ரமணய்யர்.

## THE PROPOSED TAMIL DICTIONARY

BY

REV. J. S. CHANDLER.

### தமிழ்-அகராதி வேலையின் விவரம்.

தமிழ் அகராதிக் கமிட்டியில் சேர்மனாகிய ரெவரெண்டு ஜெ. எஸ். சாண்ட்லர் எழுதுகிறார்.—

இந்த அகராதியில், தமிழ்ப் பாஷையில் வழங்கும் எல்லாச் சொற்களும், அவற்றின் எழுத்துச் சேர்க்கை உற்பத்தி, வெவ்வேறான பொருள்களுடனும், பிரயோகங்களுடனும், ஆராய்ச்சி செய்யப்படும்.

விஷயங்களுக்கு விரிந்த விவரங்கள் காட்டிச் செல்வது, "என் ஸைக்லோ பீடியா" போன்ற நூல்முறைக்கே உரியதாம். ஆதலால், பதப்பொருள்களையே பெரும்பான்மை விளக்குதற்குரிய அகராதிமுறைக்கு அவ்விவரங்கள் ஏற்றன ஆகா.

இவ்வகராதி சித்தப்படுத்துவதில் எங்கள் நோக்கக்கள் அடியில் வருமாறு:—

(*a*) தற்காலத்தில் கிடைக்கக்கூடிய நூல்கள் முதலிய சாதனங்களை நன்கு ஆராய்ச்சி செய்து அவற்றை உபயோகித்தல்.

(*b*) இதுவரை கிடைக்கப்பெறாத கையெழுத்துப் பிரதிகளிற் கண்ட அருஞ்சொற்களைச் சேர்த்தல்.

(*c*) இதுகாறும் கவனிக்கப்படா திருந்த பழைய உயர்தரக் காவியங்களினின்றும் பொருள்களை விளக்கிக் காட்டுதல்.

(*d*) தவறாகக் கண்ட பொருளமைதிகளைத் திருத்தஞ்செய்தல்.

(*e*) தமிழ் நாட்டாரது தற்காலப் பேச்சு வழக்கில் உள்ள புதிய பதங்களைச் சேர்த்துக் கொள்ளுதல்—என்பவைகளாம்.

மேற் கூறியவற்றைச் செய்து முடிப்பதில் தமிழ்ப்பண்டிதர் அனைவரும், தமிழ்ப்பாஷை

யின் அபிவிருத்தி கருதி ஸ்தாபிக்கப்பட்டுள்ள சங்கங்களும் ஒத்துழைத்து, இவ்வரிய பெரிய காரியத்தை நிறைவேற்றி வைக்க விரும்புகிறோம்.

இவ்வாறு உதவிவேண்டி, மதுரை, தஞ்சை, சிதம்பரம், சென்னை, யாழ்ப்பாணம்—இந்நகரங்களிலுள்ள தமிழ்ச் சங்கங்களையும், பாளையங்கோட்டைச் சைவ சபையையும்,—தத்தம் பக்கங்களில் வழங்கும் கீழ்க்குறித்த விஷயங்கள் பற்றிய பதங்களை, அவற்றின் சரியான பொருள் விவரங்களுடன், சேகரித்து எங்கட்கு அனுப்பும்படி கேட்டுக் கொள்ளுகிறோம். அவ்விஷயங்களாவன:—

(1) ஜாதிகளும் அவற்றின் வெவ்வேறு உட்பிரிவுகளும், வழங்கும் விசேடபதங்கள்.

(2) குலாசாரங்கள், அவ்வவ் இடங்கட்குச் சிறப்பாகவுள்ள வழக்கங்கள்.

(3) தொழில்கள், ஆயுதவகைகள், பாத்திரங்கள் முதலியன.

(4) மருத்துவ முறைகள், மூலிகைகள் முதலியன.

(5) சங்கீத சம்பந்தமாகவும், ஏனையசாஸ்திர சம்பந்தமாகவும், உள்ள விசேஷ பதங்கள்.

(6) மதங்களின் பல்வகை விரதாநுஷ்டானங்கள், மதக்கொள்கைகள்.

(7) கையெழுத்துப் பிரதிகளிலும் மற்றவைகளிலும் கண்ட அகராதி யமைப்பிற்கு வேண்டிய ஏனைய சாதனங்கள்—என்பவைகளாம்.

இவற்றோடு, தமிழ்ப் பாண்டித்தியத்திற் சிறந்தவித்வான்கள் சிலரை, இக்கமிட்டியின் "கௌரவ-வித்வத்-அங்கத்தவர்" ஆகத்தேர்ந்தெடுத்து உரிய காலங்களில் அவர்களுடைய ஆலோசனையைக் கேட்டுக்கொள்ளவும் தீர்மானமாயிருக்கிறது.

அவ்வண்ணமாக, வின்ஸ்லோ, ராட்லர், போப், கதிரைவேற்பிள்ளை முதலிய பண்[டிதர்]களால் முன்னமே செய்யப்பட்டுள்ள பெ[ரிய] காரியங்களை மேலுந் தொடர்ந்து நடத்[திச்] சிறப்பிப்பதில், தமிழ் நாட்டார் எல்லா[ரும்] தங்கட்குப் பாத்திய முள்ளதாகவே எண்[ணி] வேண்டிய உதவி செய்வார்கள் என்று நம்[பு]கிறோம்.

---

## A METHOD OF GATHERING HONEY

BY

RAYALU.

### தேன் சேகரிக்கு மோரு விதம்.

'பிழைக்கும்வழியின்' சென்ற கார்த்திகை மாஸத்து ஸஞ்சிகையில் தேன் சேகரிக்கும் விதத்தைப்பற்றி ஒரு விஷயம் எழுதப்பட்டிருந்தது. அதை வாசித்து நான் மெத்தவும் உளம் பூரித்தேன். அங்கு எடுத்துக்காட்டாத இரண்டொரு வேறு விதங்களை எடுத்துக்கூறி உலகத்தார்க்கு நன்மை புரியவேண்டுமென்று எண்ணி இதை எழுதத்துணிந்தேன். இதை மற்றவர்களும் வாசித்து அதன் பலனை அடையவேண்டுமென்பது எனது நோக்கம்.

தேன்சேகரிக்கும் விதத்தைப்பற்றிக்கூறப் புகுமுன், தேனீக்களின் வகை, பிற இடங்களில் தேன் சேகரிக்கும் விதம், முதலியவைகளைப் பற்றிச் சற்றுப் பேசுவோம்.

தேனீக்கள் கதண்டுத்தேனீ, கொசுத்தேனீ, பொந்துத்தேனீ, கொம்புத்தேனீ, என நால் வகைப்படும். அவைகளில் கதண்டுத்தேனீக்கள் பெரிய மரங்களடர்ந்த மலைகளிலும், பாறைகளிலும், கெபிகளிலும், மற்றும் மனுஷஸஞ்சார மில்லாத இடங்களிலும் ஒரே ஒரு பெரிய விராட்டுக்கட்டி ஜீவிக்கின்றன. பொந்துத் தேனீக்கள் மரப்பொந்துகள், பாறைப்பிளவுகள், பூமி அடிவெடிப்புகள் முதலியவைகளில் அடுக்கடுக்காய் அனேக விராட்டுகள் கட்டுகின்றன. கொம்புத் தேனீக்கள் மரக்கொம்பு

களிலும் செடிகளிலும் ஒரு சிறு விராட்டுக் கட்டி வவிக்கின்றன. கொசுத்தேனீக்கள் பூமியின் அடி த்வாரங்களிலும், மரப்பொந்துகளிலும் கரையான் கூடுபோல் கட்டுகின்றன. கதண்டுத்தேனீக்கள், கொசுத்தேனீக்கள், கொம்புத்தேனீக்கள், ஆகிய இவைகளைப் பிடித்து வளர்த்து ஒருவரும் தேனெடுத்ததாக இது பர்யந்தம் கேள்விப்பட்டதில்லை. ஏனெனில் மேற்சொன்னதேனீக்கள் ஒரே ஒரு விராட்டுக்கட்டுமாகையால் அவைகளைப் பெட்டிக்குள் அடைத்துவைப்பது அஸாத்யம். அவைகளைப் பிடித்துவைத்தாலும் அவைகளிரா.

நிற்க, நீலகிரி, கொடைக்கானல், ஆனைமலை, பெரியாறு முதலிய ப்ரதேசங்களில் தேனும் தினைமாவிலுமே ப்ரதானமாய் ஜீவிக்கிறதாகச் சொல்லப்பட்ட நாகரீகமற்ற மண்ணார், வேடுவர், புலையர் முதலிய ஜாதியார்கள் கதண்டுத்தேனெப்படி சேகரிக்கிறார்களென்று கவனிப்போம். அவர்கள் மரமேறுவதில் நிபுணர்களாகையால் ஆகாயமளாவ எவ்வளவு உயர்ந்த மரமாயினும் தங்கள் தேகத்தைக் கம்பளியால் போர்த்திக்கொண்டு மரமேறி, தேன் கூடிருக்குமிடத்தில் ஒருபந்தம் கொளுத்திப் புகை போட, தேனீக்களெல்லாம் கூட்டை விட்டு ஓடவே, விராட்டைப் போர்த்துக்கொண்டு கீழிறங்கி விடுகிறார்கள். தேன்கூடு ஏறமுடியாத அவ்வளவு உயர்ந்த கொம்புகளிலிருக்குமானால் அவர்கள் ஒரு அம்பின் அடியில் கயிற்றைக் கட்டி வில்லில் பூட்டி குறிப்பாய்த் தொடுக்கிறார்கள். இவ்வம்பு விராட்டில் குத்தினதும் தேன் அவ்வம்பின் காரணமாக கயிற்றின் வழியாய் வடிகிறது. மேலிருந்துவடியும் தேனை அடியில் குடம் வைத்தெடுக்கிறார்கள். பெரிய கெபிகளிலிருக்கும் தேன்கூடுகளை ஒருவனிடுப்பில்கயிற்றைக்கட்டி ஐந்தாறுபேர் அவனைக்கீழிறக்க, அவன் முற்கூறியது போல தேன் கூட்டண்டை பந்தம் கொளுத்திப் புகைபோட்டு தேனீக்கள் ஓடவே, விராட்டைப்போர்த்துக்கொண்டு மேலே நிற்கிறவர்கள் உதவியால் விராட்டோடு வந்து சேருவான். இன்னுஞ் சிலர் ஆறு இலையைக் கசக்கிச் சாற்றைக்கையில் பிழிந்து கையெங்கும் தடவிக்கொண்டு கூட்டண்டைப்போய் தம் கைகளை வைக்கவே இலை நாற்றத்தை ஸஹிக்கமுடியாமல் ஈக்கள் கலைந்து போனவுடன் தேனை எடுத்துக்கொண்டு வருகிறார்கள். இப்படியாக பற்பல இடங்களிலுள்ள வெவ்வேறு ஜாதியார் பற்பல விதமாய்த்தேன் சேகரிக்கிறார்கள்.

பிற இடங்களில் தேன் சேகரிக்கும் விதத்தைப்பற்றி நிரம்பக்கூறியாய் விட்டது. நாம் ஆரம்பத்திலே தேன் சேகரிக்கும் வேறு விதத்தைப்பற்றிப் பேசுவோமென்று சொன்னோமாகையால் அது எப்படி யென்றும் அவ்வுபாயம் எங்கு ப்ரயோகப்படுத்தப்ப[டு]கிறதென்றும் தட்சணமே கவனிப்போம். பொந்துத்தேனீக்கள் பெருகி பிப்ரவரி மாதம் முதல் ஸெப்டம்பர் மாதம் வரையில் தங்களுக்குக் கூடுகட்டும்படியாய் ஸௌகர்யமான இடங்களைத் தேடித்திரியும். ஆதலால் தேன்சேகரிக்க விரும்புவோர், பனைமரத்தையோ, தென்னைமரத்தையோ வட்டவடிவமான பலசிறு துண்டுகளாக அறுத்து, உள்ளிருக்கும் சோற்றைப் போக்கிவிட்டு, அவற்றின் இருபக்கங்களிலும் பலகைகள் தைத்து, துண்டத்தினிருபக்கங்களிலும் அனேக த்வாரங்கள் செய்து மா, நாவல் முதலிய உயர்ந்த மரக்கொம்புகளில் கட்டிவிடவேண்டும். கூடுகட்ட ஸௌகர்யமான இடந்தேட அனுப்பப்படுகிற தேனீக்கள் மரக்கொம்புகளில் தொங்கும் கட்டைகளைப் பரிசோதித்துத் தகுந்த இடமென்று கண்டவுடன் மற்ற ஈக்களையும் அழைத்துக்கொண்டுவரும். அவைகளும் இவை தகுந்த இடமென நிதானித்து விராட்டுக்கட்ட ஆரம்பிக்கின்றன. சிலநாள் சென்று இரவிற் போய்

மரக்கொம்புகளில் தொங்கும் கட்டைகளின் த்வாரங்களை அடைத்து, அவற்றை எடுத்துக் கொண்டு வீடு திரும்பி, அக்கட்டைகளின் அடிப்பலகையை நீக்கி அதில் உள்ளிருக்கும் விராட்டை வெட்டிச் சதுரமான பல சட்டங் களில் வைத்து, அச்சட்டங்களை தேனீவளர்ப் பதற்கென்று செய்யப்பட்ட ஒரு பெட்டியில் அடுக்கி, இராணி ஈயை அப்பெட்டியிற் பிடித் துப்போட்டு தேனீக்களையும் அப்பெட்டியில் துரத்தி பெட்டியைமேல் மூடியால் சாத்திவிட வேண்டும். அப்பெட்டியின் அடிப்பாகத்தில் அனேகத்வாரங்கள் துளைத்துவைக்கவேண்டும் ஈக்கள் அந்த த்வாரங்களின் வழியாக வெளி யே சென்று தேன் சேகரித்துவரும். தேன் பூரணமாய் வைத்ததென்று தெரிந்தவுடன் இதற்கென்று செய்யப்படும் ஒரு யந்த்ரத்தால் விராட்டிற்கு ஒரு மோசமும் நேராவண்ணம் தேனெடுக்கலாம். விராட்டிற்கு ஒரு சேதமு முண்டாகாதாகையால் அதையே திரும்ப வும் வைத்துப் பலதடவை தேனெடுக்கலாம். இப்படியே அர்ச். சூசையப்பர் காலேஜியில் (திருச்சினுப்பள்ளி ஸெயின்ட் ஜோஸெப் காலேஜில்) தேனெடுக்கிறார்கள். வெயிற் காலத் தில் அனேக தடவை தேனெடுக்கிறார்கள். ஆனால் மழைகாலத்தில் ஒரு தடவையேனும் எடுப்பதில்லை. ஏனெனில் அக்காலங்களில் மலர்களில் அமுது சுருக்கமாகையால் தேன் வண்டுகள் தேனை அவ்வளவாய் சேகரிப்ப தில்லை.

பிற்க, யந்த்ரங்கள் ப்ரயோகித்து தேனெ டுப்பதால் உள்ள விசேஷ மென்னவென்றால் முற்காலங்களில் தேன் கையினால் பிழிந்து எடுத்தார்க ளாதலால் அப்பொழுது தேன் அவ்வளவு சுத்தமானதாக இருக்கவில்லை. இப் போது யந்த்ரங்களை உபயோகிப்பதால் தே னில் ஒரு மாசுகூடக் கிடையாது.

ராயலு.

## BUSINESS

BY

T. SADAGOPA PILLAI.

### வ்யாபாரம்.

பொருள்களை வாங்கியும் விற்பனை செய்தும் லாபம் அடைதலையே வ்யாபாரம் என்பர். அதற்குக் கல்வி, நம்பிக்கை, கூட்டுறவு இவை வேண்டும். கல்வி யில்லாவிட்டால் வர்த்த கம் நடவாது. கல்வி என்பது மனிதனுக்கு அத்யாவச்யமாக வேண்டிய பொருளே. கல் வியில்லாதவன் அறிவுடையவனாகமாட்டான். ஒவ்வொருவருக்கும் இன்ன பொருளை இன்ன இடத்தில் இன்ன விதமாய் வாங்கவேண்டும், இன்ன விதமாய் விற்கவேண்டும், என ஊகித் தறிதற்கு கல்வியறிவே முக்ய ஸாதன மல் லவா? நம்பிக்கை என்பது உயர்ந்த பொருள். அதை ஸம்பாதித்தவன்தான் வ்யாபாரி. நம் பிக்கை யற்றவனிடத்தில் எவ்வளவு செல்வம் இருக்கினும் பயனில்லை. நம்பிக்கை யென் னும் நாணயம் உள்ளவன் எளியனாயினும் செல்வவானே. ஜனங்களுடைய வறுமை யென் னும் பிணியை நம்பிக்கை யென்னும் ஔஷ தந்தான் போக்கும். வர்த்தகம் நீடித்து நடப்ப தற்கும் பெருகுவதற்கும் நம்பிக்கை என்பது அடிப்படை.

ஒருவர்க்கொருவர் கொடுக்கல் வாங்குதல் செய்வதற்கு நம்பிக்கை அவச்யமானது. தன் னுடைய பணம் போகாது என்று கொடுத்தவ னுக்கு நம்பிக்கை இருத்தல் வேண்டும். எப்ப டியாயினும் வாங்கிக்கொண்ட பணத்தை திரும் பக் கொடுக்கவேண்டுமென்று வாங்கினவன் கொடுத்தவனுக்கு நம்பிக்கை உண்டாக நடக் கவேண்டும். இதுதான் பரஸ்பர நம்பிக்கை. இதை தற்காலத்தார் நாணயம் என்று வழங்கு கிறார்கள். நமது தேசத்தார் நாணயத்தினது அருமை பெருமைகளை தொன்று தொட்டு வழங்கி வந்தார்களாயினும் சில காலமா

அது மழுங்கத் தலைப்பட்டது. அதற்குக் காரணம் ஒற்றுமையின்மை, ஒருவர் பொருளை ஒருவர் அபகரித்தல் இவையாம். அயலார் பொருள் தம் கையிற் சிக்கினவுடனே நம்பிக்கை யென்னும் நாணயத்தை மறந்து விடுகிறார்கள். இன்ஸால்மெண்ட் மனு தயார் செய்கிறார்கள். பின்னும் சிலநாள் சென்று கைப்பொருளையு மிழந்து தவிக்கிறார்கள். உண்மையாகவே வ்யாபாரத்தில் தெய்வ கதியாக நஷ்டம் நேர்ந்தவர்களைப்பற்றி சொல்ல வரவில்லை. நாகரீக பழக்க வழக்கங்களுடைய இக்காலத்தில் நாணயமென்பதுதான் பெரும் பொருள். நாணயமென்பதுதான் கூட்டுறவை யுண்டாக்கும். மேனாட்டார் கல்வியும் கூட்டுறவும் வறுமை நீங்குவதற்கு உபாயம் என்று கண்டுபிடித்து அவைகளினாலேதான் முன்னுக்கு வந்தார்கள். அவர்களைப்போல நாமும் கல்வியும் கூட்டுறவும் பெற்றால் ஏன் முன்னுக்கு வரக்கூடாது? ஒவ்வொருவரும் கூட்டுறவினாலே புத்தி விசாலமடைந்து ஒற்றுமையுடையவர்களாவார்கள். பிறதேச விஷயங்களையும் இக்கூட்டுறவினாலே பெறவேண்டும்.

இத்தேசத்தார் முன்னுக்கு வருவதற்கு கவர்ன்மெண்டார் உதவி வேண்டுமென்பதும் பெரும்பொருள்கள் வேண்டு மென்பதும் வேண்டுவதில்லை. பின்னை எது வேண்டுமெனில் கல்வியும் கூட்டுறவும் நம்பிக்கையுந்தான் வேண்டும். இவைதான் இந்தியருக்கு பெருங் குறைகள். இவைகளை நீக்கவேண்டுமென்று திருவுள்ளங்கொண்டே நமது மகௌதார்ய, மகைச்வர்ய, காருண்ய, சக்ரவர்த்தியார் டில்லி தர்பாரிலும் பிறவிடங்களிலும் தமது இந்திய ஜனங்களுக்குக் கல்வியும் கூட்டுறவும் அவச்யமானவை யென்று அறிந்து கொண்டு அவை பரவுவதற்கான முயற்சிசெய்ய வேண்டுமென்று விரும்பியருளினார்கள். அவர்கள் நீடூழியாயிருந்து நமது விருப்பங்களை நிறைவேற்றியருளுவார்கள் என்பது நிச்சயம். நாமும் கூட்டுறவையும், நம்பிக்கையையும் உணர்ந்து ஸம்பாதிக்கக்கடமைப்பட்டா லொழிய நமது சக்ரவர்த்தியார் எண்ணம் பூரணமாகாது. நாம் நமது சக்ரவர்த்தியார் திருவுள்ளத்தோடு ஒத்துழைத்துக் கல்வியையும் கூட்டுறவையையும் பெறுவோமாக!

ஜாதிமத வேறுபாட்டினாலே இத்தேசத்தில் கூட்டுறவு கைகூடவில்லை என்று சிலர் சொல்லுகிறார்கள். ஜாதியென்னும் பேய் தலை யெடுத்தாடினால் கூட்டுறவென்பது ஓடி ஒளிக்கும். ஜாதிமதம் என்பவைகளை அவரவர்கள் தங்கள் வரையில் வைத்துக்கொள்ளவேண்டும். ஜாதிமத விரோதம் பெருந்தீங்குதரும். ஜாதிமதங்களை அவரவர்கள் அநுஷ்டானமாக வைத்துக்கொண்டு தங்கள் ஜாதி மதங்களை விடாமலும் பிறஜாதிமதங்களை இகழாமலும் இருந்தால் ஜாதிமதக் கட்டுபாடுகள் கூட்டுறவை என்ன செய்யும்? இவை கூட்டுறவுக்கும் நம்பிக்கைக்கும் கெடுதலானவை என்பது நியாயமல்ல. இத்தேசத்தார் வறுமையடைகிறதற்கு வேறொரு காரணமும் சொல்லலாம். அதாவது யாதொரு தொழிலுமின்றியிருத்தல். ஒருவன் விவஸாயமோ, வ்யாபாரமோ, கைத்தொழிலோ, செய்து ஜீவிக்க அவனது வரும்படியைக் கொண்டே அண்ணன் தம்பிமார்களும் பிள்ளைகளும் மற்றவர்களும் பெருங் குடும்பங்களாகச் சேர்ந்து ஜீவிக்கிறார்கள். அதனாலே அந்தக் குடும்பத்தலைவன் ஏழையாய்ப் போகிறான். ஆகையினாலே ஒவ்வொருவரும் முயற்சி உடையவர்களாய் உறக்கத்தையொழித்து கல்வியையும் கூட்டுறவையும் நம்பிக்கையும் பெற்று வ்யாபாரத்தைச் செய்ய முயலவேண்டும்.

தே. சடகோபபிள்ளை,

# STORY AND BIOGRAPHY.

## கதையும் ஜீவ்ய சரித்ரமும்.



**HON. MR. V. KRISHNASWAMI AIYAR, C.S.I.**

கனம். வி. க்ருஷ்ணஸ்வாமி அய்யர் அவர்கள், ஸி. எஸ். ஐ.

தற்காலம் இந்தியாவிலே புருஷ ச்ரேஷ்டர்களும், ஸ்த்ரீரத்னங்களும் அநேகம் பேர் இருப்பது நமக்கு ரொம்ப பெருமையாக இருக்கிறது. ராஜரீக விஷயமாகவோ, பொதுஜன விஷயமாகவோ பாடு பட்டாலும் ஸரி, ஸர்க்கார் உத்யோகத்திலிருந்தாலும் ஸரி, அல்லது வேறு உத்யோகம் செய்து வந்தாலும் ஸரி, இந்தியாவின் க்ஷேமாபிவ்ருத்தியை அதிகரிக்கும்படி உழைத்து வருகிறவர்கள் பலர் இருக்கிறார்கள். அப்படியிருப்பவர்களில்காலஞ்சென்ற வி. க்ருஷ்ணஸ்வாமி அய்யர், ஸி. எஸ். ஐ யும் ஒருவர் ஆவர். சென்ற சில வருஷங்களாக தென்னிந்தியாவிலே, சோபிக்கும் குணங்களுக்கும் எல்லா விஷயங்களிலும் உள்ள ஸாமர்த்தியத்திற்கும் இவர் நிகரற்றவரா யிருந்தாரென்று சொல்லவேண்டும். தாம் அமர்ந்துள்ள உத்யோகத்தில் ரொம்ப சுறுசுறுப்பாய் உழைத்து வந்தாலும் தேச நன்மைக்கு விடாமல் ரொம்பவும் பாடுபட்டு வந்தார். தேச நன்மையை உத்தேசித்து ஏராளமான பணம் உதவிசெய்து வந்தார். ஆத்ம த்யாகமானது, அனுபவத்தில் ஸாத்யமானதாகவும், நமது தேசத்தின் முன்னேற்றத்துக்கு ஸாதகமானதாகவு மிருக்கவேண்டிய இக்காலத்தில் இந்த மஹானுடைய சரித்ரமானது எல்லா உண்மையான இந்தியர்களுக்கும் ப்ரயஜோனகரமானதா யிருக்குமென்றெண்ணுகிறோம்.

க்ருஷ்ணஸ்வாமி அய்யர் தஞ்சாவூர் ஜில்லா திருவிடை மருதூரில் 1863-ம் வருஷம் ஜூன் மாஸம் உத்தம ப்ராமணகுலத்தில் ஜனனமானார். அவர் தகப்பனாரின் பெயர் வெங்கட்டரமணய்யர். வெங்கட்டரமணய்யர் ஜூடிஷ்யல் டிபார்ட்மெண்டில் (நீதி இலாகா) வேலைக்கமர்ந்து அதிலேயே நன்றாய் உழைத்துக் கடைசியில் டிஸ்ட்ரிக்ட் முன்ஸீப் உத்யோகம் பெற்றார். அவருக்கு இரண்டு மனைவிகள் உண்டு. முதல் மனைவியால் 4 புத்ரர்களும் இரண்டாவது மனைவியால் 2 புத்ரர்களும் பிறந்தார்கள். மூத்தபுத்ரராகிய ஸ்வாமிநாதய்யர் காலக்ரமத்தில் பி. ஏ. பரீக்ஷையிலும் பி. எல். பரீக்ஷையிலும் தேறி ஜூடிஷ்யல் டிபார்ட்மெண்டில் உத்யோகத்தில் அமர்ந்து ஸப் ஜட்ஜானார்.

க்ருஷ்ணஸ்வாமி அய்யர் முதலில் திருவிடை மருதூர் பள்ளிக்கூடத்தில் இங்கிலீஷ்படிக்கத் தொடங்கினார். 7-வது வயதில் தஞ்சாவூரில்

எஸ். பி. ஜி. பள்ளிக்கூடத்தில் சேர்க்கப்பட்டார். அப்பொழுது அந்தப் பள்ளிக்கூடத்தில் டாக்டர் மார்ஷ் என்பவர் தலைவராக (ப்ரின்ஸ்பல்,) இருந்ததால் அந்த வித்யாசாலை ரொம்ப கீர்த்தி பெற்றதாக இருந்தது. அந்த பேர் பெற்ற தென்னிந்திய ஆசிரியரின் உன்னதமான நோக்கங்கள் நமது பால்யரான க்ருஷ்ணஸ்வாமியின் மனஸில் ரொம்ப பதிந்திருந்தன வென்று தோன்றுகிறது. பிற்காலம் தாம் அவ்வாசிரியருக்குக் கடமைப்பட்டிருப்பதைக் காட்டுவதற்காக அந்த ஆசிரியரின் பெயரால் ஒரு ஸ்காலர்ஷிப் ஏற்படுத்துவதில் நமது க்ருஷ்ணஸ்வாமி அய்யர் முக்ய காரணமாயிருந்தார். மெட்ரிகுலேஷன் வகுப்புக்கு வந்து கொண்டிருக்கையில் க்ருஷ்ணஸ்வாமி அய்யர் கும்பகோணம் காலேஜில் சேர்க்கப்பட்டார். அப்பொழுது அந்த காலேஜானது பேர்பெற்ற ஆசிரியர்களான போர்டர், கோபாலராவ், இவர்களுடைய முயற்சியால் ரொம்பவும் மேன்மையாய் விளங்கிக்கொண்டிருந்தது. இவர்களில், கோபாலராவ் அவர்களால்தான் க்ருஷ்ணஸ்வாமி அய்யருக்கு இங்க்லீஷ் இலக்கியங்களில் ப்ரியம் உண்டாயிற்று. 1877-ம் வருஷத்தில் மெட்ரிகுலேஷனில் தேறினர். 1879-ம் வருஷத்தில் சென்னை ப்ரெஸிடென்ஸி காலேஜில் ஸீனியர் எப். ஏ. வகுப்பில் சேர்ந்தார். 1882-ம் வருஷத்தில் பி. ஏ. பட்டம் பெற்றார். அவர் இங்லீஷ், ஸம்ஸ்க்ருதம், தத்வசாஸ்த்ரம், இவைகளில் தேர்ச்சி யடைந்திருந்ததற்காக அநேக வெகுமதிகள் பெற்றார். இவருக்கு சாஸ்த்ரத்தில் (ஸயன்ஸ்) ரொம்ப ப்ரீதியிருந்ததால் பி. ஏ. வகுப்பில் அந்தப் பாடம் சில காலம் வாசித்தார். ஆனால் சட்டப் பரீக்ஷைக்குப் படிக்கவேண்டி யிருந்ததால் சாஸ்த்ரப் படிப்பை விடவேண்டியதாயிற்று. இரண்டு வருஷம் படித்து, இப்பொழுது சென்னை நிர்வாக ஸபையில் இந்திய மெம்பராயிருக்கும் ஆனரபில், மிஸ்டர் பி. எஸ். சிவஸ்வாமி அய்யருடன் கூட, 1885-ம் வருஷத்தில் பி. எல் பட்டம் பெற்றார்.

பிறகு சென்னையில் ஒரு ப்ரபல வக்கீலாக இருந்த காலஞ்சென்ற மிஸ்டர் ஆர். பாலாஜி ராவ் அவர்களிடம் அப்ரெண்டிஸாக அமர்ந்து 1885-ம் வருஷம் வக்கீலாக ஆனார். ஆனால் மற்றபெரிய மனிதர்கள் போலவே நல்ல கேஸுகளுக்கு அதிக காலம் காத்திருக்கவேண்டி யிருந்தது. இதனால் அவர் ஒரு ஸமயம் சென்னையைவிட்டு வெளியூர்களில் போய் உத்யோகம் செய்து ஸுலபமாய் ஸம்பாதிக்கலாம் என்று எண்ணினது முண்டு. ஆனால் இது ஒருபோதும் நேரவில்லை. இந்த ஸமயத்தில் ப்ரபல வக்கீல்களில் ஒருவரான மிஸ்டர் (இப்பொழுது ஸர்) எஸ். ஸுப்ரமணியஐயரிடம் பரிச்யம் ஏற்பட்டது. அப்பொழுது தான் இவர் தாம் எப்பெயர்பட்டவர் என்பதைக் காட்டிக்கொள்ள ஸமயம் வாய்த்தது. ஸர் எஸ். ஸுப்ரமண்ய அய்யர் தமக்கும் க்ருஷ்ணஸ்வாமி அய்யருக்கும் எப்படி பரிச்யம் ஏற்பட்டதென்பதைப்பின்வருமாறு விவரிக்கிறார்.

"எனக்கும் க்ருஷ்ணஸ்வாமி அய்யருக்கும் 25 வருஷத்துக்கு முன்னால் பரிச்யம் ஏற்பட்டது. வக்கீலாவதற்காக என்னிடம் அப்ரெண்டீஸாக இருந்த, எங்களிருவருக்கும் ஸ்நேகிதராகிய மிஸ்டர் ஜஸ்டிஸ் ஸுந்தரய்யரோடு அவரை முதலில் ஸந்தித்தேன். அது முதல் ஸுமார் பத்துவருஷகாலமாக நாங்கள் ஒருநாளாவது காலையில் ஸந்திக்காமலிருந்ததில்லை. அப்படி ஸந்தித்ததை நான் ஒருபோதும் மறக்கமாட்டேன், அப்படி ஸந்தித்தது எனக்குரொம்ப ப்ரயோஜனமும் லாபகரமுமா யிருந்தது. சட்ட முள்பட அநேக விஷயங்களைப்பற்றிப் பேசுவோம். சட்டஸம்பந்தமாய் நான் இதற்கு முன்னால் அதிககாலம் வக்கீலுத்

யோகம் செய்து அறிந்திருந்ததைவிட அதிக மாக இவர்களிடமிருந்து அநேக விஷயங்கள் தெரிந்து கொண்டிருக்கிறேன் என்று சொல்வது மிகையாகாது. க்ருஷ்ணஸ்வாமி அய்யரின் ஸ்வபாவம் பிறருக்கும், தனது தேசத்தாருக்கும் நன்மை செய்யவேண்டுமென்பதே என்று ஆதிமுதற்கொண்டே அறிந்திருந்தேன்."

தமது ஸாமர்த்யத்தைக் காட்டுவதற்குத் தக்க ஸமயம் வாய்க்கவே இவர் தமது உழைப்பினுலும், விஷயங்களை சீக்ரம் க்ரகிப்பதனுலும், சட்ட ஸம்பந்தமான வ்யவகாரங்கள் எவ்வளவு கடினமாயிருந்தாலும் அவைகளுக்குத் தகுந்தபடி ஆதாரங்களை ஸுலபமாய் எடுத்துக் காட்டுவதாலும், அந்தப் பெரிய நீதிவல்லவர் மனவில் தம்மைப்பற்றி ஒரு நல்ல அபிப்ராயத்தை உண்டு பண்ணிவிட்டார். அவர்களுடைய ஸ்நேகிதம் அதிகரிக்கவே அந்த அபிப்ராயமும் பல மடைந்தது. 1890-ம் வருஷம் இன்னம் 3-வக்கீல்களுடன் சேர்ந்து "மட்ராஸ் லா ஜர்னல்" என்னும் உயர்ந்த சட்டப் பத்ரிகையை ஸ்தாபித்து, அது விஷயமாய் ரொம்பவும் பாடுபட்டார். அவர் அதில் கூட்டுப் பத்ராதிபராக இருந்து 18 வருஷகாலம் எழுதிய வ்யாஸங்களைப் பார்த்தால் அவருடைய ஆழ்ந்த கல்வியறிவும், குணதோஷங்களை விசாரிக்கும் தன்மையும், சட்டத்தின் ப்ரதம ந்யாயங்களை அறிந்து எழுதும் தன்மையும் நன்றாய் விளங்கும். இப்படிப்பட்ட வ்யாஸங்களால் இந்த பத்ரிகைக்கே ஒரு கீர்த்தி ஏற்பட்டது. இவருடைய கீர்த்தி அதிகரிக்கவே அதிகாரிகள் இவரை லா காலேஜில் ஒரு போதகராக நியமித்தார். அங்கே அவர், எல்லாம் கலந்தகட்டியாயிருக்கும் பாடமாகிய ஸிவில் ப்ரொஸீஜர் கோட் கற்பித்துவந்தார். இவருக்கு ஹிந்து லாவும் அது ஸம்பந்தமான ஸ்ம்ருதிகளும் நன்றாய்த் தெரியும். இவர் ஸம்ஸ்க்ருதத்தில் ரொம்ப வித்பன்னராகையால் ஸம்ஸ்க்ருத பண்டிதர்களுடனும் உரையாசிரியர்களுடனும் சாஸ்த்ர விசாரம் செய்து வந்தார்.

1892-முதல் 1895-வரையில் அவருக்கு வக்கீல் உத்யோக ஸம்பந்தமாய் வேலை ரொம்ப அதிகரிக்கவே இவர் 1895-ம் வருஷத்தில் லாகாலேஜில் உள்ள தமது ஆசிரியர் ஸ்தானத்தை விட்டுவிட வேண்டியதாயிற்று.

கேஸுகளை எடுத்துக் காட்டுவதில் இவர் ரொம்ப ஸாமர்த்யம் வாய்ந்தவர். கேஸுகளில் லாபாயிண்டை எடுத்துக்காட்டுவதற்காக ரொம்ப ச்ரமம் எடுத்துக்கொள்ளுவார். கோர்ட்டில் கேஸைப்பற்றிச் சொல்லும்போது, பூர்த்தியாயும் ஒரு விஷயமும் விடாமலும் சொல்லுவார். தமது எதிர்க்கக்ஷிக்காரர் எடுத்துச் சொல்லக்கூடும் ஆக்ஷேபணைகளை முன்னமே தெரிந்து கொண்டு அவைகளுக்கு ஸமாதானம் சொல்லுவார். கேஸில் எதிர்வக்கீல் எந்த பாயிண்டை எடுத்துச் சொன்னாலும் அதற்கு ஸமாதானம் தயாராய் வைத்திருப்பார். ஒரு ஸமயம் கேஸில் எதிர்க்கக்ஷிக்காரர் இவர் எதிர்பாராத புதிய அம்சம் எடுத்துச்சொன்னாலும், அல்லது கேஸே ஒரு புதிய வழியில் திரும்பி விட்டாலும் அல்லது சில ஸமயம் கேஸை வழக்கம்போல் ஸரியானபடி கவனிப்பதற்கு சாவகாசமில்லாமல் போனாலும் அதற்காக அவர் விட்டுக் கொடுப்பவரல்லர். ஸமயத்துக்குத் தகுந்தபடி சாதுர்யமாய் பதில்சொல்லி அப்பொழுதைக்காவது எதிர்க்கக்ஷி வக்கீலைப் பதில் பேசமுடியாதபடி செய்து விடுவார்.

க்ருஷ்ணஸ்வாமி அய்யர் தமது கக்ஷிக்காரர்களின் கேஸுகளை ஸரிவரப் பாதுகாப்பதில் எப்பொழுதும் அக்கறையுள்ளவர். எப்பொதாவது வெளியூருக்குப் போக நேரிட்டு தாமே கேஸை நடத்த முடியாவிட்டால் தக்கவக்கீலிடம் ஒப்புவித்துப் போவார். அந்த வக்கீலும் தாமும் ஸ்நேகமில்லாவிட்டாலும் கூட அதை

கவனிக்காமல் தமது கக்ஷிக்காரர்களின் கேஸுகளுக்குப் பாதகம் ஏற்படக்கூடாதென்று தக்க வக்கீலிடம் தமது ஸொந்த வ்யவகாரங்களில் மனஸ்தாபம் இருந்தாலும் அதைப் பாராட்டாமல் ஒப்புவிப்பார். இவரிடம் நேசம் பாராட்டாத, இவர் இறந்த பிறகுங்கூட இவர் மேல் க்ஷாத்ரம் காட்டிய ஒரு வக்கீலிடம்தமது கேஸுகளை அதிக பீஸுடன் அநேகந்தடவை கொடுத்து வந்தார். இப்படி இவர் எல்லாரையும் போலல்லாமல் நடந்துகொள்வதற்கு என்ன காரணம் என்று கேட்டதற்கு இவர், தமது கக்ஷிக்காரர்களின் கேஸுகளைப்பற்றிய விஷயங்களில் அவர்களுக்கு பாதகம் ஏற்படாமல் பார்த்துக்கொள்வதே தமது கடமை பென்றும், ப்ரஸ்தாப வக்கீலிடம் கேஸுகளைக் கொடுத்தால் அவைகள் எப்போதும்மற்ற வக்கீல்களிடம் கொடுப்பதைவிட பத்ரமாய் நடத்தப்படும் என்றும், அதனால் தங்களுக்குள் என்ன மனஸ்தாபங்கள் இருந்தாலும் அவைகளைப் பாராட்டாமல் அந்த வக்கீலிடமே கொடுத்து வந்ததாகவும் சொன்னார்.

1910-வருஷம் க்ருஷ்ணஸ்வாமி அய்யருக்கு ஹைகோர்ட்டு ஜட்ஜ் உத்யோகம் கிடைத்தது. ஆனல் அந்த உத்யோகத்தைக் கொஞ்சகாலந்தான் வகித்தார். தாம் ஜட்ஜாயிருந்த காலத்தில் வ்யவகாரமுள்ள சில சட்டவிஷயங்களை ஸாமர்த்யமாய்த் தீர்த்து, ஜட்ஜ்மெண்டுகளில் எழுதியிருக்கிறார். வக்கீல் வேலையில் அமர்வதற்குமுன் அப்ரெண்டிஸ்களாயிருப்பவர்களுக்கு வக்கீல் உத்யோகநடத்தையைப் பற்றி ப்ரஸங்கங்கள் செய்யும்படி ஏற்பாடு செய்ய ஹைகோர்ட்டைத் தூண்டிவிட்டார்.

அவர் சிறுவயதிலேயே மதராஸ் வக்கீல்ஸ் அஸோஸியேஷன் என்னும் சென்னை வக்கீல் ஸங்கத்தை ஸ்தாபிக்க ரொம்ப உழைத்தார். அவருக்கு ஹைகோர்ட்டில் ஜட்ஜ் வேலையான வரையில் அதன் ஸெக்ரெடரியாக விருந்தார். இவர் ஸுலப நடையாயும் வேகமாயும் எழுதக்கூடியவர். பால்யத்திலேயே ப்ரபல சென்னை தினஸரிப்பத்ரிகை ஒன்றுக்கு வ்யாஸங்கள் எழுதி வந்தார்.

இவர் ரொம்ப காலமாக சென்னை மஹாஜன ஸபையில் ஒரு மெம்பராக இருந்தார். மேலும் சென்னை ப்ரொவின்ஷ்யல் காங்க்ரெஸ் கமிட்டிமுதலில் 1908-ம் வருஷத்தில் ஏற்பட்டபோது முதலில் சேர்ந்த மெம்பர்களில் இவரும் ஒருவர். இவர் அநேக காங்க்ரெஸ் மீட்டிங்குகளுக்கும் போய் வந்தார். 1890-ம்வருஷத்தில் லெஜிஸ் லெடிவ் கௌன்ஸில்களை சீர்திருத்திப் பெரியவைகளாக்க வேண்டுமென்ற தீர்மானத்தைப் பற்றி நன்றாய்ப் பேசினர். 1894,1898-ம் வருஷங்களில் காங்க்ரெஸில் இவர், சென்னை, பம்பாய் கவர்னர்களுடைய நிர்வாக ஸபையில் ஒரு இந்திய மெம்பர் நியமிக்கப் படவேண்டுமென்ற தீர்மானத்தைப் பற்றிப் பேசுகையில் பின்வருமாறுசொன்னர். "நான் ஏற்கனவே சொன்னபடி நிர்வாக ஸபைகளில் ஸ்வதேச மெம்பர்கள் இருக்க வேண்டியது ரொம்ப முக்யமானது. பத்ரிகைகள் ஆளுவோருக்கும், ஆளப்படும் ஜனங்களுக்கும் மத்திமமாயிருந்து ஒருவர் எண்ணங்களை மற்றவருக்கு எடுத்து விவரிப்பவைகள் என்று சொல்லுகிறீர்கள். காங்க்ரெஸும் இந்த மாதிரி ராஜாங்கத்தாருக்கும், ப்ரஜைகளுக்கும் நடுவில் த்விபாஷியாக இருக்கிறதென்று சொல்கிறீர்கள். நமக்கு இன்னதுவேண்டும் என்பதை கவர்ன்மெண்டிடம்சொல்லிக்கொள்வதற்காக நாம் இங்கே கூடுகிறோம். கவர்ன்மெண்டாருடைய அபிப்ராயம் இன்னவென்பதை மற்றஜனங்களுக்குத் தெரிவிப்பதற்காக நாம் இங்கே கூடுகிறோம். ஒரு இந்தியர், ஜனங்கள் நம்பிக்கைவைக்கக் கூடியவராயும், அதனோடு கவர்ன்மெண்டாரும் நம்பிக்கை

வைக்கக் கூடியவராயும் இருந்து, நம்முடைய எண்ணங்களை கவர்ன்மெண்டாருக்குத் தெரிவித்து, நாம் (ஜனங்கள்) ஒரு ஸமயம் தவறுதலாய் நடந்தாலும், கெட்ட எண்ணத்துடன் அப்படி நடக்கவில்லை என்று கவர்ன்மெண்டாருக்குச் சொல்லக் கூடியவராயும், கவர்ன்மெண்டும் தவறி நடந்தால் அவர்களும் கெட்ட எண்ணத்துடன் நடக்கவில்லையென்று நமக்கு எடுத்துச் சொல்லக்கூடியவராயும் இருந்து நிர்வாகஸபையில் ஒரு மெம்பராயிருந்தால், நம்முடைய (அதாவது ஜனங்களுடைய) விருப்பங்களையும் நோக்கங்களையும் கவர்ன் மெண்டாருக்குஎடுத்துச் சொல்லுபவர் அவரைவிட தகுதியானவர் யாராவது உண்டா? துரைத்தனத்தாரையும், ஜனங்களையும் ஒன்று சேர்த்து, இருதிறத்தாருக்கும் ஒற்றுமை யுண்டாக்குவதில் அவரைவிட மேலானவர் உண்டா? ஆகையால் கனவான்களே, இந்தத் தீர்மானத்துக்கு நீங்கள் ஸம்மதிக்கும்படி வேண்டுகிறேன்."

1903-வருஷம் சென்னையில் காங்க்ரெஸ் நடந்தபோது உபசரணைக் கமிட்டியின் ஸெக்ரெடரியாகத்தெரிந்தெடுக்கப்பட்டார். 1906-ம் வருஷம் இவருடைய புகழ் உன்னத தசையை அடைந்திருந்தது. அந்த வருஷம் ஜூன் மாஸம் திருநெல்வேலியில் சென்னை ப்ரொவின்ஷ்யல் கான்பரென்ஸ் நடந்தபோது இவர் ப்ரெஸிடெண்டாக தெரிந்தெடுக்கப் பட்டார். இவர் அப்பொழுது செய்த ப்ரஸங்கம் யாவராலும் ச்லாகித்துப் பேசப்பட்டது.

இவர் காங்க்ரெஸ் விஷயமாய் மாத்ரம் உழைக்கவில்லை. கல்வி விஷயத்தில் ரொம்ப ச்ரத்தையாகப் பாடுபட்டார். இவர் யூனிவர்ஸிட்டி ஸெனேட்டில் ரொம்ப ஊக்கத்தோடு உழைத்துவந்தார். இவர் செய்தவேலை த்ருப்திகரமாக இருந்ததால் ஐரோப்பியர்களும், இந்தியர்களும், இவர் செய்த வேலைக்கு மெச்சி, அடுத்த ஸமயம் நேர்ந்தவுடன் இவரை லெஜிஸ்லெடிவ் கௌன்ஸிலில் யூனிவர்ஸிட்டி மெம்பராகத் தெரிந்தெடுத்தார்கள். நமது நாட்டில் பெண்கல்வி வ்ருத்தியாக வேண்டுமென்றும் சிறுவர்களுக்கு ஸாதாரண படிப்போடு தொழில்கல்வி கற்பிக்கவேண்டுமென்றும் அவர் அபிப்ராயம் கொண்டிருந்தார்.

சென்னை லெஜிஸ்லெடிவ் கௌன்ஸிலில் யூனிவர்ஸிட்டி விஷயமாகவும் பொது விஷயமாகவும் ரொம்ப உழைத்து வந்தார். எஸ்டேட்ஸ் லாண்ட் ஆக்ட் என்னும் சட்டத்தைத் திருத்தம் செய்வதில் ரொம்ப ஊக்கங் காட்டினார். இவர் கௌன்ஸில் ஸ்வல்பகாலமே மெம்பராக இருந்தாலும், கவர்ன்மெண்டாரிடம் தாம் இப்பேர்ப்பட்டவர் என்பதை சீக்ரம் காட்டி விட்டார். இரண்டு வருஷங்களுக்குப் பிறகு இவருக்கு நிர்வாகஸபையில் மெம்பர் உத்யோகமானதற்கு ஒரு காரணம் லெஜிஸ்லெடிவ் கௌன்ஸிலில் இவர் செய்த வேலையினால் கவர்ன்மெண்டாருக்கு இவர்மேல் நல்ல அபிப்ராயம் ஏற்பட்டதேஎன்று சொல்லவேண்டும்.

1911-ம் வருஷத்தில் சென்னை நிர்வாக ஸபையில் பொப்பிலி மகாராஜாவுக்குப் பதிலாக வி. க்ருஷ்ணஸ்வாமி அய்யர் மெம்பராக நியமிக்கப்பட்டார். அவருக்கு அந்த உத்யோகம் கொடுத்ததில் இந்தியாவிலுள்ள எல்லாருக்கும் த்ருப்தியைக் கொடுத்தது. "கல்கத்தா வீக்லி நோட்ஸ்" என்னும் பத்ரிகை அவருக்கு உத்யோகம் கிடைத்ததைப் பற்றிப் பின் வருமாறு எழுதிற்று. "லார்ட் மார்லியின் கௌன்ஸில் திருத்தம் அனுஷ்டானத்துக்கு வந்த பிறகு செய்த உத்யோக நியமனங்கள் எல்லாவற்றிலும் மிஸ்டர் க்ருஷ்ணஸ்வாமி அய்யரை சென்னை கவர்னரின் நிர்வாக ஸபையில் மெம்பராகச் செய்தது தான் ரொம்ப மேலான நியமனம். அவரைப் போன்றவர்களையே தவறு

மல் நிர்வாக ஸபைகளில் நியமித்து வந்தால் தான் சீர்திருத்தங்கள் நன்ருய் அனுஷ்டிக்கப் பட்டு நிச்சயமாய் ப்ரயோஜனம் விளைவிக்கும்.'' இவர் நிர்வாக ஸபையில் எப்படி வேலை செய் தாரென்பதை அதே ஸபையில் மெம்பராகிய ஸர். ஜான், அட்கின்ஸன் அவர் இறந்துபோன வுடனே பின்வருமாறு தெரிவித்தார். "உத் யோக ஸம்பந்தமான விஷயங்களில்தான் எங்களுக்குள் பழக்கம் ஏற்பட்டது. அவர் கவர்ன்மெண்டில் ஒருவராகச் சேர்ந்தபோது அவருக்கு உத்யோக அனுபோகம் இல்லை. உத்யோகத்தில் சேர்ந்த இரண்டொரு நாளுக் குப் பிறகு அவரே தெரிவித்தபடி அவர் முத லில் விஷயங்களைக் கற்றுக் கொள்பவராகவே இருந்தார். புதிதாய்க் கற்றுக் கொள்பவரென் ருல் என்ன! ஸெக்ரிடேரியட்டின் உத்யோக முறைகளை மாத்ரமல்ல; தம்மிடம்வரும் அநேக சிக்கலான கேள்விகளினுடைய விஷயங்களை யுங் ஸூக்ஷ்மங்களையும் வெகு சீக்ரத்தில் தெரிந்து கொண்டது ரொம்ப ஆச்சரியமாக வே இருந்தது. அவருடைய குணத்துக்கு ஏற்றபடியே, அவர் எந்த விஷயத்திலும் வெகு சீக்ரமாய் தமது அபிப்ராயத்தைத் தீர்மானித் துக்கொண்டு அதை மாற்ருமல் அதை நிலை நிறுத்துவதில் ரொம்ப ஊக்கம் காட்டுவார். ஆனல் அவர் தாம் கொண்ட அபிப்ராய விஷயமாய் எவர்சொல்வதையும் கேட்பதற்குத் தயாராயும், விஷயத்தின் எல்லா அம்சத் தையும் நோக்குபவராயும், பாரபக்ஷமாயா வது, குறுகலான நோக்கத்துடனுகவாவது விஷயங்களை கவனிக்கும் ஸ்வபாவம் இல்லாத வராயும் இருந்தார். நிர்வாக ஸபையில் அவர் செய்த வேலையைப்பற்றி நான் அதிகம் சொல்ல வேண்டுவதில்லை. அவருடையவேலை ரொம்ப உயர்ந்ததாயிருந்ததினல்தான் நமக்கு இன்று நேர்ந்த நஷ்டம் ரொம்ப பெரியதாக இருக் கிறது. துரைத்தனம் ஸரிவர நடப்பதற்கு வேண்டிய குணங்கள் நிறைந்துள்ள உத்யோ கஸ்தரை நாங்கள் இழந்துவிட்டோம். அவ ரைப் போன்றவர் அந்த ஸ்தானத்துக்கு அமை வது ரொம்பவும் ச்ரமமாகவே யிருக்கும்.''

க்ருஷ்ணஸ்வாமி அய்யர் வக்கீலாக இருந்த போது, அதிக வரும்படி வந்து கொண்டிருந் தது. அதைக்கொண்டு பொது நன்மைக்கு ரொம்ப தாராளமாய்ச் செலவழித்தார். இவர் காசி, ஸெண்ட்ரல் ஹிந்து காலேஜுக்கு ரொம்ப பணம் கொடுத்துதவினர். அதைப் போலவே தென்னிந்தியாவிலும் ஒரு வித்யா சாலை ஸ்தாபிக்க வேண்டுமென்று விரும்பி யிருந்தார். ஷை காசி காலேஜுக்காக ஜட்ஜ் ஸுந்தரய்யருடன் கூட உழைத்து நாட்டுக் கோட்டை செட்டிமார்களை அதிக பண உதவி செய்யும்படி தூண்டினர். வெங்கட்டரமண டிஸ்பன்ஸரி யென்று வைத்யசாலை யொன்று ஸ்தாபித்து அதற்கு 15,000ரூபாய்பெறுமான நிலமும் கட்டிடமுந் தவிர 30,000-ரூபா மான் யம் ஏற்படுத்தி வைத்தார். மைலாப்பூரில் ஒரு மெடிகல் ஸ்கூல் (வைத்ய பள்ளிக்கூடம்) ஒன்றை 1905-ம் வருஷம் ஸ்தாபித்தார். அதற்கு 25,000ரூ. ரொக்கமாகவும், 12,500ரூ. கட்டிடமாகவும் கொடுத்து உதவினர். மே லும் மைலாப்பூர் ஸம்ஸ்க்ருத காலேஜுக்கு 40,000-ரூபாயும், அதற்கு நிலமும் கட்டிட முமாக 20,000-ரூபாயும் கொடுத்துதவினர். அந்த காலேஜுக்கு வெளியிலிருந்து பண வுதவி ஏற்பட்டு தானுக நன்ருய் நடந்துவரும் வரையில் முதலில் இரண்டு மூன்று வருஷத் துக்கு வருஷம் 4000 ரூபாய் வீதம் பண உதவி செய்தார். இவர் இந்தியாவின் கைத் தொழிலபிவ்ருத்தியில் ரொம்ப அக்கறை யுள் ளவர். இவர் இண்டியன் இண்டஸ்ட்ரியல் அஸோஸியேஷன் விஷயமாய் ரொம்ப ஊக்கம் காட்டி வந்தார். பூனுவிலுள்ள ஸர்வண்ட்ஸ் அப் இந்தியா ஸொஸைடி என்னப்படும்

இந்திய ஊழிய ஸங்கத்துக்கு 10,000-ரூபாய் கொடுத்து உதவினுர். இவர் சென்னையில் உள்ள இந்தியன் பாங்கியை ஸ்தாபித்தவர் களில் ஒருவர். மதஸம்பந்தமான மான்யங்களை வைத்து நடத்துவதில் இப்பொழுதுள்ள ஏற்பாட்டை ரொம்ப மாற்றவேண்டுமென்று விரும்பியிருந்தார். இது விஷயமாய் இன்னம் சிலருடன் சேர்ந்து "தர்ம ரக்ஷண ஸபை" என்று ஒரு ஸபையை ஏற்படுத்தினுர். ரானடே புஸ்தகசாலை (லைப்ரரி)க்கு ரொம்ப பணம் கொடுத்துதவினுர். ஏழையான வித்யார்த்திகளுக்கும் ப்ராமணர்களுக்கும் ரொம்ப உதவி செய்துவந்தார். மைலாப்பூரில் "பூர் பாய்ஸ் பண்டு அண்ட் போர்டிங்க் ஹௌஸ்" என்னும் ஏழைப் பையன்கள் நிதியும், சாப்பாட்டு விடுதியும் ஸ்தாபித்து அதற்கு வருஷத்து 600-ரூபாய் வீதம் கொடுத்து வந்தார். வலதுகை கொடுத்தது இடதுகை அறியாது என்பது இவரிடம் நன்ருய்ப் பொருந்தும் என்று சொல்லலாம். ஒருவர் இறந்தபின் தர்மம் செய்வதில் இவருக்கு நம்பிக்கையில்லை. ஒருவர் உயிரோடிருக்கும் போதே தர்மங்கள் செய்து அந்த தர்மங்கள் எப்படி நடந்து வருகின்றன என்பதை தர்மம் செய்தவர் பார்க்கவேண்டும் என்று இவர் சொல்வது வழக்கம். இவர் இறக்கும்போது இவருடைய மொத்த வரும்படி 7-லக்ஷம் ரூபாயென்று கணக்கிடப்படுகிறது. அதில் பாதியளவு தானம் செய்திருந்தார் என்று தெரிகிறது. இது விஷயமாய் ஸர் எஸ். ஸுப்ரமண்ய அய்யர் சொல்லுகிருர்:—"எனக்குத் தெரிந்தமட்டில் தமது பணத்தை தர்மத்தில் செலவழிப்பதில் இவரை விட அதிக ஆவலுள்ளவர் ஒருவருமில்லை. தமது ஜீவ்யகாலத்தில் கடைசி காலம் வரையில் தமது செல்வத்தை தானம் செய்வதற்கு தக்கபாத்ரம் எதுவென்று எப்போதும் கவனமாயிருந்தார்"

ஸ்ரீமான் க்ருஷ்ணஸ்வாமி அய்யர் தமது வாழ்நாள் முழுவதும் ஒரு வித்யார்த்தியாகவே இருந்து வந்தார். அவர் தமது ஒழிவு நேரங்களில், மதஸம்பந்தமாகவும் தத்வசாஸ்திர ஸம்பந்தமாகவும் இவைகளை நன்ருய் க்ரந்தங்களில் கற்றறிந்த வித்வான்களுடன் விசாரம் செய்து வருவார். அவர்களை அநேக ஸமயங்களில் வாதங்களில் தோற்கடித்து விடுவார். அவர் கல்வி ஸம்பந்தமான விஷயங்களில் ரொம்ப தேர்ச்சி யடைந்திருந்ததாலும் வித்யாபிமானம் இவரிடம் அதிகமாக இருந்ததாலும், அப்போதிருந்த கவர்னர் ஸர் ஆர்தர் லாலி இவரை யூனிவர்ஸிட்டி கான்வோகேஷன் அட்ரெஸ் கொடுக்கும்படிக் கேட்டுக்கொள்ள நேர்ந்தது. அவர் கேட்டுக் கொண்டபடியே கான்வோகேஷனில் தமது மேலான ப்ரஸங்கத்தைச் செய்தார். அவர் செய்த ப்ரஸங்கத்தில் ஒரு பாகத்தை மொழி பெயர்த்துத் தருகிருேம். "ஞான சூன்யமென்னும் சாபம் நம் தேசத்தார்க்குக் கிடையாது. ஆனுல் பழங்கதையான கீர்த்தியை எடுத்துக் காட்டுவதில் மாத்ரம் ப்ரயோஜனமில்லை. வால்மீகி, வ்யாஸர், காளிதாஸர், துளஸிதாஸர், கம்பர் முதலிய கவி ச்ரேஷ்டர்களும், கபிலர், சங்கரர், ராமானுஜர் முதலிய ஆத்மவிசாரிகளும், பாணினி, பதஞ்சலி, சாரகர், சுச்ருதர், ஆர்யபட்டர், பாஸ்கரர் முதலிய சாஸ்த்ரஞர்களும் இருந்ததும், க்ருஷ்ணர், புத்தர் ஆகிய இவர்களுடைய பாதங்கள் பட்டதுமான இந்த நமது தேசத்தை பூமியில் வேறு எந்த தேசத்துடனும் ஒத்திட்டுப் பார்க்கப் பயப்பட வேண்டியதில்லை. அந்த மேலானவர்களின் ஜாப்தா முடிந்து போகவில்லை. இன்னமும் அதிமேதாவிகளான ஸ்ரீமான்கள் உண்டாகலாம். சில ஸமயம் ஏதோ சில காரணங்களால் அவர்களின் தொகை குறைவாயிருந்தாலும் மறுபடி அவர்கள் அதிகமாக ஆகலாம் என்பதற்கு அடையாளங்கள் இல்லாமலிருக்கவில்லை."

இவருடைய இந்த நேர்த்திபான ப்ரஸங்கந் தான் கடைசி ப்ரஸங்கமாக முடிந்தது. இவர் 1911-ம் வருஷம் டிஸம்பர் மாஸம் நமது சக்ர வர்த்தியைப் பார்த்து வருவதற்காக தமது மற்ற ஸ்நேகிதர்களுடன் டெல்லிக்குச் சென் ளூர். அங்கே இவருக்கு அஸௌக்ய மேற் பட்டு சீக்ரமே சென்னைக்குத் திரும்பி வரும் படியாயிற்று. சிறிது காலம் வ்யாதியா யிருந்து 1911-ம் வருஷம் டிஸம்பர் மாஸம் 28-உயன்று ஸ்ரீமான் க்ருஷ்ணஸாமி அய்யர் சிவபதம் சேர்ந்தார்.

அவர் இறந்ததினம் அநேக பெரிய கன வான்கள் அவரை வந்து பார்த்தார்கள். கவர்னர், நிர்வாகஸபை மெம்பர்கள், சென்னை லார்ட் பிஷப் அவர்கள், ஹைகோர்ட்டு ஜட்ஜி களில் அநேகர் ஆகிய இவர்கள் முதலாகப் பல கனவான்கள் வந்திருந்தார்கள். இவரு டைய மரணத்தைப் பற்றி ஹைகோர்ட்டில் அனுதாபம் காட்டிப்பேசப்பட்டது. அன்றைய தினம் கல்கத்தாவில் நடந்த காங்க்ரெஸிலும் இவரைப்பற்றி ப்ரஸ்தாபம் செய்யப்பட்டது. காங்க்ரெஸின் அந்த வருஷத்து ப்ரெஸிடெண் டவர்கள், க்ருஷ்ணஸ்வாமி அய்யர் இந்தியா வுக்காகப் பாடுபட்டிருப்பதைக் குறிப்பிட்டு, தற்காலம் மேலான இந்தியர்களில் இவர் ஒரு வராவர் என்று சொன்னூர். அன்றையதினம் ஒரு விசேஷ போர்ட் ஸெண்ட் ஜார்ஜ் கெஜட் ப்ரசுரிக்கப்பட்டது. அதில் இவருடைய மேலானகுணங்களைக் குறிப்பிட்டிருந்ததோடு, அவருடைய மரணத்தால், கவர்ன்மெண்டுக் கும், ராஜதானிக்கும், பெரிய நஷ்டம் ஏற் பட்டு விட்டதென்றும் தெரிவிக்கப்பட்டிருந் தது. மேலும் அன்று முதல் ஒரு வாரம் கவர்ன்மெண்டார் துக்கம் கொண்டாடுவதாக வும் தெரிவிக்கப் பட்டிருந்தது.

இவர் பூர்விக இந்தியாவைப் பற்றியுள்ள கதைகளடங்கிய ஆர்ய சரித்ரம் என்னும் புஸ் தகம் ஒன்று ஸம்ஸ்க்ருதத்தில் எழுதி வெளி யிட்டார். இவர் தமது தேசத்தாரால் மிகவும் நேசிக்கப்பட்டு வந்தார். அவர்கள் இவரிடம் ரொம்ப விச்வாஸமும் நம்பிக்கையும் கொண் டிருந்தார்கள். முன்பு "ஹிந்து" பத்ரிகையின் பத்ராதிபரா யிருந்தவரும், தற்போது "சுதேச மித்திரன்" பத்ரிகையின் அதிபராயிருப்பவரு மான மிஸ்டர் ஜி. ஸுப்ரமண்ய அய்யர்மேல் கொண்டுவந்த கேஸை நிறுத்துவதற்கு இவர் செய்த கார்யத்தால் இவருக்கு கவர்ன்மெண்டி னிடம் எவ்வளவு செல்வாக்கு உண்டென்பது தெரியவரும். இவருக்கு சிலவருஷங்களுக்கு முன் முதல்தர கேஸரி ஹிந்து பதக்கம் கொடுக்கப்பட்டது. சக்ரவர்த்தியவர்கள் தர் பார் தினத்தன்று ஸி. எஸ். ஐ. பட்டமும் கொடுத்தருளினூர்.

க்ருஷ்ணஸ்வாமி அய்யர் கடைசிவரைக் கும் உண்மையான ஹிந்துவா யிருந்தார் அவர் மதஸம்பந்தமான அனுஷ்டானங்களை செய்வதோடு மட்டும் நில்லாமல், ஆத்ம பக்தி யும், தர்ம சிந்தனையும், பரோபகாரமும் உள்ள வராக இருந்தார். அவர் தமது மதப்பற்றினூல் ஏனைய மதஸ்தர்களிடம் நேசம் பாராட்டா திருக்கவில்லை. உயர்ந்தஐரோப்பியர்களும் இவ ரிடம் ஸ்நேகம் கொண்டிருந்தார்கள்.

க்ருஷ்ணஸ்வாமி அய்யர் மிகவும் நன்ருய் ப்ரஸங்கம் செய்யக்கூடியவர். வாதத்தில் நிபுணர். முன்னுலேயே ஸரியாய்த் தயார் செய்து கொண்டு வராமல் பேசுவோர்களின் ப்ரஸங்கத்தை வாதம் செய்து சின்னுபின்ன மாக்கக் கூடியவர். க்ருஷ்ணஸ்வாமி அய்ய ருக்கு 2 குமாரர்களும் 4 பெண்களும் உண்டு.

இவர் அதிக வயஸாவதற்கு முன்னமே இறந்து போனது நமது தேசம் செய்த துரத் ருஷ்டமே.

# SELECTIONS.
## விசேஷத்திரட்டு.

### MOSQUITOES AND A REMEDY.
### கொசுக்களின் கெடுதியும் அதை நிவர்த்திக்கவேண்டிய வழியும்.

கொசு என்னும் பெயருக்கே ஓர்வித அல்பமான குணம் பொருந்தியிருக்கின்றது. அதன் உருவம் மிகச் சிறிது. ஆயினும் அதனல் உண்டாகும் கெடுதிகள் அனேகமென்று பலவித ஆராய்ச்சிகளால் தெரிய வருகின்றது. மலேரியா முதலிய விஷச்சுரங்களும் இன்னம் நானுவித வியாதிகளும் மனிதர்களை பீடிப்பது இக்கொசுக்களினுலேயே என்று சாஸ்திரக்ஞர்கள் ஆராய்ச்சியினுல் வற்புறுத்துகிருர்கள். எவ்விதமெனில் கொசுக்கள் மரம், செடி, நீர்த்தாக்குகள் முதலிய எல்லா இடங்களிலும் சஞ்சரிக்கின்றன. அக்கொசுகளுக்கோ விஷப்பூச்சிகளாகிய அதி சிறிய வஸ்துக்களை தன்னிடம் பொருந்தி தாம் சஞ்சரிக்கும் இடங்களிலும், காற்றிலும், குளம், குட்டை, கிணறு முதலிய நீர்தாக்குகளிலும் அவ்விஷப்பூச்சிகளைப் பரவச் செய்வதினுல் அந்தந்த ஸ்தலங்களிலும் காற்றினுல் பரவின இவ்விஷப்பூச்சிகள், அந்தந்த ஜலத்தை உபயோகிப்பவர்களுடையவும் அவ்விடங்களில் வசிப்பவர்களுடையவும் சரீரத்திற்குள்சென்று ஒன்று நூருகி அவர்கள் சரீரம் உடனே பலத்த வியாதிகளினுல் பீடிக்கப்படுகின்றது. காலரா முதலிய ஒட்டு வியாதிகளுக்கும் இக்கொசுக்கள் பெரும்பாலும் காரணமென்று அநேகருடைய அபிப்பிராயம். ஆகவே இவ்வித கெடுதிகளை நிவர்த்திக்க வேண்டுமென்ற எண்ணத்துடன் சிலகாலமாய் கவர்மெண்டார் சாஸ்திரக்ஞர்களைக் கொண்டு ஆராய்ச்சி செய்யத் தலைப்பட்டார்கள். அவ்வித ஆராய்ச்சி முடிந்தபாடில்லை யாகிலும், அப்போதைக்கப்போது ஏற்படும் பரிகாரங்களை வெளிப்படுத்தி ஜனங்கள் அவைகளை அனுஷ்டித்து சௌக்கிய மடையவேண்டு மென்ற மேலான எண்ணத்துடன் கீழ்வரும் கவர்மெண்ட் உத்திரவு வெளிப்பட்டிருக்கிறது:—

நீரோட்டமற்ற குளம், குட்டை, கிணறுமுதலிய ஜலஸ்தாபனங்களில் ஷை விஷ கொசுக்கள் தங்கி ஒன்றுக்கு 100, 1000-மாக விருத்தியாகி அத்தண்ணீரை அறியாமையின் காரணமாக உபயோகிக்கும் ஜனங்கள் வியாதியர்களாய் பீடிக்கப்பட்டு கஷ்டமடையா வண்ணம், ஆங்காங்குள்ள லோகல் போர்டாரும் முனிஸிபாலிடிகளும் அனுசரிக்குமாறு ஒரு முறையை பரீட்சை செய்து கவர்மெண்டார் வெளிப்படுத்தி யிருக்கிருர்கள். சமீபத்தில் சைதாப்பேட்டைக்கடுத்த கிண்டியில் பரீட்சை செய்து பார்த்ததில் "வலிச்சக்கண்டை" என்கிற மீன்களுக்கு இக்கொசுக்களை விருத்தியாசாமால் அழிக்கச் சக்தி யிருக்கிறதாக ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. ஷை மீன்கள் ஒவ்வொரு ஜில்லாவிலும் அகப்படுவதுஎளிதாம். அம்மீன்களை ஒருடத்திலிருந்து மற்ரொரு இடத்திற்குச் செடாமல் கொண்டுபோக ஓர் அதிக சிலவில்லாத வழியுமிருக்கிறதாம். அவ்வழியை சாத்ரக்ஞராகிய மிஸ்டர் எச். வில்சன் துரை அவர்களுக்கு எழுதித் தெரிந்து கொள்ளலாம். சானிடெரி சமிஷனர் அவர்கள் இந்த மீன்களை மேற்கூறிய பிரயோஜனத்திற்கு எவ்விதமாக உபயோகிப்பது என்பதை குறிப்பிட்டிருக்கிருர்கள்.

(1) கிராமங்களுக்கு அருகாமையிலுள்ள குளம், குட்டை கிணறுகள் இவைகளில் கொசுக்கள் அதிகமாயிருக்கும் பட்சத்தில் ஷை மீன்களைப் போடவேண்டும். ஷை மீன்களை அவ்வவ்விடங்களில் மீன் பிடிக்கிறவர்ளிடம் பெற்று அவைகளைச் சிறு சட்டிகளிலாவது அல்லது இதர் வகையிலாவது கொண்டு சேர்க்கவேண்டும்.

(2) ஒவ்வொரு சாதாரண கிணறுகளிலும் சிறு குட்டைகளிலும் சுமார் 50 க்குக் குறையாமல் ஷை மீன்களைப் போட்டால் போதும்.

(3) பெரிய குளங்களிலும், குட்டைகளிலும், அதிகமாய் மேற்படி மீன்களைப் போடவேண்டும். எவ்விதமாயினும் மீன்கள் பெருகக் கூடுமாகையால் ஏருளமான மீன்கள் அவசியமில்லை.

(4) குளம் குட்டைகள் தண்ணீர் வற்றிப்போகும் பட்சத்தில் பிறகு அவைகள் தண்ணீர் பிடிக்கும் பொழுது மறுபடியும் மேற்கண்டவாறு மீன்களைப் போடவேண்டும். அவ்வித நீர்நிலைகளில் மீன் பிடிக்கிறவர்களை வலைபோட்டு மீன்பிடிக்க விடவே கூடாது.

மேற்கூறிய வழிகளை அசுத்தமான நீர்த்தாக்குகளில் அவசிய மிருப்பின் உபயோகிப்பதனுல் ஜனங்களின் சௌக்கியத்திற்குக் காரணமாகுமென்று நம்புகிறேம்.—தேசாபிமானி.

## TANK RESTORATION WORK.

## குளமராமத்து வேலைகள்.

தென்னிந்தியாவில் விவஸாயத்துக்காக ஜலங் கிடைக்கும்படியாய் அநேக குளங்கள் அங்கங்கே வெட்டப்பட்டிருப்பது அநேகமாய் எல்லோருக்குந் தெரிந்த விஷயம். இக்குளங்கள் நாலாயிரம் ஐயாயிரம் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. பெரிய பாசன வேலைகள் எப்படி விவஸாயத்துக்கு அவசியமோ, அப்படியே இந்தக் குளங்களும் நல்ல நிலைமையி லிருந்தால் அவைகளும் அநேக இடங்களில் விவஸாயத்துக்கு இன்றியமையாதவை. இவைகள் நல்ல ஸ்திதியில் இல்லாமலே கவர்ன்மெண்டு ரிவினியூ நஷ்டம் அடைவதோடு கூட, ஜனங்களும் நஷ்டப்படுகிறார்கள். இந்தக் குளங்கள் விஷயமாய் கவர்ன்மெண்டுக்கு வெகு காலமாய்க் கவலையுண்டு. இந்தியாக் கவர்ன்மெண்ட் கொடுக்கும் பணவுதவியையும் சென்னைக் கவர்ன்மெண்ட் தங்கள் ரெவினியூவிலிருந்து வருஷா வருஷம் செய்யும் செலவு தொகையையும் சேர்த்து வருஷம் பத்துலக்ஷ ரூபாய் இந்தக் குளங்களைப் பழுது பார்ப்பதற்காகச் செலவு செய்யப்படுகின்றது. இப்படிச் செலவு செய்யப்பட்டும், இந்தக் குளங்களிற் பெரும்பான்மையும் கவனிக்கப்படாமல் நீர்ப் பாய்ச்சலுக்குப் பிரயோசனப்படாம லிருக்கின்றன. இவைகளின் உபயோகத்தைப்பற்றி கவர்ன்மெண்டுக்காவது ஜனங்களுக்காவது எவ்விதசந்தேகமும் இல்லையாகையால் இவைகளை நல்ல ஸ்திதிக்குக் கொண்டு வரப் பெரும் முயற்சி செய்யவேண்டுமென்று கவர்ன்மெண்ட் நிச்சயித்து, சென்ற வருஷம் செப்டம்பர் மாதம் ஸர் மர்ரே ஹாமிக் ஆக்டிங் கவர்னராயிருந்த போது உதகமண்டலத்தில் சில உத்தியோகஸ்தர்களும் உத்தியோகஸ்தரல்லாதவர்களும் கூடியோசனை செய்தார்கள்.

இந்தக் குளங்களை மராமத்து செய்வதில் விசேஷமாய் நேரிடும் கஷ்ட மென்னவென்றால், கூலி வேலைக்காரர்கள் அகப்படுவதில்லை. கூலி வேலைக்காரர்கள் அகப்படுவதில்லை யென்று இப்போது இந்தியாவில் எங்குப் பார்த்தாலும் புகார் உண்டாயிருக்கிறபடி, இந்தக் குள மராமத்து விஷயத்திலும் கவர்ன்மெண்டுக்கு இந்தக் கஷ்டம் நேரிட்டிருக்கின்றது. முதலாவது குளங்களைப் பழுதுபார்ப்பது அங்கங்கு நடக்கும் சிறு வேலையானதால், அதனால் கண்டிராக்டர்களுக்கு அதிக லாபங்கிடைக்காமல் கண்டிராக்டர்கள் அகப்படுவதில்லை. கிராமாந்தரங்களில் கூலியாட்கள், விவஸாயம் முதலிய தொழில்களில் அமர்ந்துபோகிறபடியால், கிரமமாய்க் கிடைக்காமல் அவர்களை நம்பிக் குள மராமத்துகள் செய்ய ஆரம்பிப்பது கஷ்டமாயிருக்கின்றது. தென்னிந்தியாவில் சமீபத்தில் பெரிய பாசன வேலைகளைக் கவர்ன்மெண்டார் நடத்தவே, வேலையாட்கள் இந்தப் பெரிய வேலைகளில் சம்பாதிக்கப் போய்விடுகிறபடியால், கிராமங்களில் சிறிய வேலைகளுக்குக் கூலியாட்கள் அகப்படுவதில்லை. இப்படி பெரியாறு பிராஜக்ட் என்றும், கண்ணயம்பாடி பிராஜக்ட் என்றும், பெரிய பாசன வேலைகள் நடத்தப்பட்டு அவைகளால் கூலிவேலை செய்வோர் இழுக்கப்படுகிறார்கள். சமீபத்தில் தஞ்சாவூர் மிராசுதார்கள் சேர்ந்து நடத்தின கான்பரென்ஸில் அன்னிய தேசங்களுக்குக் கூலியாட்கள் போய்விடுகிறபடியால், தங்கள் வயல்களில் வேலை செய்யக் கூலியாட்கள் கிடைப்பதில்லை யென்றும், அப்படி அன்னியதேசம் போகுங் கூலியாட்களைக் கவர்ன்மெண்ட் தடுத்துவிட வேண்டுமென்றும், கவர்ன்மெண்டுக்குப் பிரேரித்ததை அறிவோம். இதே காரணங்களால் குளமராமத்து விஷயத்திலும் கவர்ன்மெண்டுக்கு கூலியாட்கள் கிடைக்காமல் அந்த மராமத்து எவ்வளவு சீக்கிரம் செய்யப்பட வேண்டுமோ அவ்வளவு சீக்கிரம் செய்யப்படாமல் தாமசமாய்ச் செய்யப்படுகிறது.

ஆகையால் இந்தக் கூலிவேலை விஷயமாய் உதக மண்டலத்தில் கூடின கான்பரென்ஸில் பின்வருகிறபடி தீர்மானங்கள் செய்யப்பட்டன. முதலாவது, கூலியாட்களைத்திரட்டி அவர்களைக் குள மராமத்தில் வேலைசெய்யும்படி செய்ய, சில தாசில்தார்களை அதே வேலையாய் நியமிக்கிறதென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இரண்டாவது, கூலியாட்களுக்கு தூரவிடங்களிற் கிடைக்கும் கூலி விகிதங்களின்படி கிராமாந்தரங்களிலும் கூலிகொடுக்க வேண்டுமென்று, ஆலோசனை சொல்லப்பட, அந்த விஷயம் கவர்ன்யெண்ட் எஞ்சினீர்கள் சமயத்துக்குத் தக்கபடி செய்ய வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. மூன்றாவது கண்டிராக்டர்களும் கூலியாட்களும் போதுமான காலம் இடை விடாமல் வேலை செய்யும்படியாக முன்னதாக அவர்களுக்குச் சில தொகையை இனாங் கொடுக்க வேண்டும். கவர்ன்மெண்ட் கண்டிராக்டர்களுடைய பில்களுக்குப் பணங் கொடுப்பதில்

தாமசமாகிறபடியால் அவர்களுக்கு உற்சாகம் வரும்படியாய் முன்னதாகவே சில தொகை அட்வான்ஸும் செய்யப்படவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. இந்தத் தீர்மானங்களைக் கவர்ன்மெண்ட் அங்கீகரித்து சில பொறுக்கியெடுத்த கிராமங்களில் தாசில்தாருடைய அனுமதியின் பேரில் எக்ஸிக்கூடிவ் எஞ்ஜினீர்கள் கிராமத் தலைவருக்காவது, வேறு தகுந்த மனுஷருக்காவது, ஒரு மாசச்செலவுக்கு அதிகப்படாமல் முன்பணம் கொடுக்கலாமென்று உத்தரவு செய்திருக்கிறார்கள். இப்படி கவர்ன்மெண்ட் செய்திருக்கும் நிச்சயப்படி நடத்தி, இந்தக் குள மராமத்து வேலைகள் இதுவரையில் தாமசமாய் நடந்து வந்ததைப்போல் நடக்காமல், சீக்கிரம் நடத்தி விவஸாயிகளுக்குள்ளே இந்தப் பெருங்குறையைக் கவர்ன்மெண்ட் நீக்குவார்களென்று நம்புகிறோம்.—சுதேசமித்திரன்

---

## PADDY IRRIGATION

### நெல்பயிருக்கு நீர்ப்பாய்ச்சல்

நீர்ப்பாய்ச்சுவதில் நமது கிருஷிகர் நடத்திவரும் முறை சரியானதுதானாவென்பதைக் கவனிப்போம். பயிர்களுக்குத் தண்ணீர் எப்படி அவசியமோ அதைப்போலக் காற்றும் அவசியம். நிலத்திற்குள் தண்ணீர் தங்கவேண்டியது எப்படி அவசியமோ அதைப்போலவே காற்றும் தங்கவேண்டியது அவசியம். சரியாகச் சொல்லவேண்டுமானால் தண்ணீரும், காற்றும் மாறி மாறி நிலத்தில் புகுந்து வடிந்தும் வெளிப்பட்டும் ஒன்றுக்கொன்று இடங்கொடுக்க வேண்டியது மிகவும் அவசியம். ஒரு நிலத்தில் தண்ணீர் கட்டித் தேங்கி நின்றால் அதில் மண் அணுக்களினூடே காற்றுப் புகுவது அசாத்தியம். மண் அணுக்களினூடே காற்றோட்டமில்லையானால் பயிருணவுப்பொருள்கள் பக்குவமடையாது. மேலும் பயிர்களின் சரியான வளர்ச்சிக்கு மிதமான உஷ்ணம் மண்ணிலிருக்க வேண்டியதவசியம். அப்படியிருக்க வில்லையானால் பயிர்கள் மெலிந்து, வெளுத்து பலவித நோய் நொடிகளுக்குள்ளாகும். மண்ணுக்குள் மிதமான உஷ்ணம் உண்டாகும்பொருட்டு அதிலிருந்து தண்ணீர் கொஞ்சகாலமாவது அப்புறப்பட்டு அதற்குள் காற்றோட்டமுண்டாக வேண்டியது அவசியம். மழைகாலத்தில் சரியானபடி நீர்வடிவு இல்லாத இடங்களில் நட்ட நாற்று அழுகிப்போவதை நாம் பார்க்கிறோம். வயல்களில் அளவுக்கு மிஞ்சிய தண்ணீர் அநேக நாட்களுக்குத் தொடர்ச்சியாய் கட்டி நிற்பதே இவ்வித சம்பவத்திற்கு முக்கிய காரணம்.

நமது கிருஷிகர் நெற்பயிருக்கு இடைவிடாமல் 3 அல்லது 4-அங்குல தண்ணீர்கட்டி நிற்கவேண்டியதவசியமென்று நினைக்கிறார்கள். அப்படிக் கட்டவில்லையானால் பயிரின் வளர்ச்சி குறைவதுமன்றி அதன் மாசூலும் குறைவுபடுமென்று திட்டமாய்ச் சொல்லுகிறார்கள. இந்த அபிப்பிராயம் சரியானதுதானாவென்று கண்டுபிடிக்க சைதாட்பேட்டை சர்க்கார் பண்ணையில் 1872-ம் வருஷம் முதல் சில பரீட்சைகள் செய்து பார்த்ததில் நமது கிருஷிகர் தற்காலத்தில் பாய்ச்சிவரும் தண்ணீரின் அளவு மிகவும் அதிகமென்று கண்டு பிடித்திருக்கிறார்கள். சிலர் உவர், களர் நிலங்களில் சாதாரணமாய் நெல்பயிர் உண்டாவதில்லை என்றும், மழை அதிகமாய்ப் பெய்து அந்நிலத்திலிருந்து தண்ணீர் சுபாவமாயும் சாதாரணமாயும் வடிந்துகொண்டே யிருந்தால் அதில் பயிர் நிலைபெற்று நன்றாய் வளருமென்றும் வியவசாயத்தில் அனுபோகமுள்ளவர்களுக்குத் தெரியும். களர்நிலங்களிலுள்ள உப்பு தினுசுகள் அவைகளில் தண்ணீர் பாய்ச்சியவுடனே பொங்கி மேல் வந்து பயிரின் வேர்களை அழுகச்செய்து பயிரைக் கெடுக்கிறது. இப்படி மேல் வரும் உப்பு தினுசுகளை அப்போது அப்போது பெய்யும் கனமழைத் தண்ணீரில் கரையச்செய்து வடித்து கழித்துவிட்டால் அந்நிலத்தில் பொங்கிய உப்பு அப்புறப்படுகிறது. இதினாலேயே உவர், களர் நிலங்களுக்கு 3-நாளைக்கொரு முறை தண்ணீர் பாய்ச்சிவடிய விடுகிறது வழக்கமாயிருக்கிறது.

இதனால் நெற்பயிருக்கு அதிகத் தண்ணீர் அவசியமென்பது ஏற்படாது. நிலத்தின் சுபாவத்திற்கேற்ப அதிகத் தண்ணீர் உபயோகப்படுத்தவேண்டியதாய் நேரிடுகிறது. அல்லாமல் எல்லா நிலங்களிலும் இவ்வாறு அதிகத் தண்ணீர் உபயோகப்படுத்த வேண்டுவது அவசியமில்லை. களரில்லாமல் செய்கால் பட்ட நல்ல நிலங்களில் நமது ராஜதானியில் எவ்வளவோ இருக்கின்றன. அவைகளுக்கும் நமது கிருஷிகர் மேற்சொன்னவிதமாக அதிகத்தண்ணீர் உபயோகித்துவருகிறார்கள். ஒரு நிலத்திற்கு எவ்வளவு தண்ணீர் அவசியமென்று தீர்மானிக்க அடியிற்கண்ட அம்சங்களை கவனிக்க வேண்டியதாயிருக்கும்:—

(1) மண்ணின் சுபாவமும், ஸ்திதியும்.
(2) அடிமண்ணின் சுபாவமும், ஸ்திதியும்.
(4) நிலத்திலுள்ள மேடு, பள்ளம்.
(5) இடத்தின் சீதோஷ்ணம்.
(5) தண்ணீர் பாய்ச்சுவதின் நோக்கம்.
(6) நீர் பாய்ச்சப்படுகிற பயிர்.

(1) **முதலாவது நிலத்தின் சுபாவமும் ஸ்திதியும்:**—நிலங்கள் மணல்கால், களிக்கால், மண் மணல் மிஸ்ரமம், பசளைமண், என்னும் அநேகவித மாறுபாடுக்குத் தக்கதாக அதில் பெய்யும் மழைத்தண்ணீரையோ அல்லது பாய்ச்சப்படும் தண்ணீரையோ ஏற்று, பிடித்து வைத்துக்கொள்ளும் சக்தியில் அதிகமாக வேறுபடுகின்றன என்பது அடியிற்கண்ட விவரணத்தால் தெரியவரும்.

| மண்ணின் தன்மை. | நூற்றுக்கு எவ்வளவு தண்ணீரைப் பிடித்து வைத்துக் கொள்ளும் சக்தியுடையது. | நான்குமணி நேரத்தில் வெயிலில் எவ்வளவு தண்ணீர் ஆவியாய்ப் போய்விடுகிறது என்பது. |
|---|---|---|
| கேவலம் மணல் நிலங்கள் ... | 25 | 88 |
| சாதாரண களிக்கால் ... | 40 | 52 |
| மண் மணல் மிஸ்ரமம ... | 51 | 45 |
| மிகவும் களிப்புள்ள நிலங்கள் ... | 61 | 24 |
| பசளை மண் | 89 | 24 |
| இலை தழை மக்கின இந்திரிய வஸ்து... | 181 | 25 |

இந்த விவணரத்தால் மணல்கால் நிலங்கள் மிகவும் கொஞ்சத் தண்ணீரை ஏற்றுக்கொண்டு வெயிலில் காய்ந்தவுடனே அதிகமான தண்ணீரை ஆவியாய்ப் போக விடுகிறதென்றும், சாதாரண களிக்கால் நிலங்களைவிட மண்மணல் மிஸ்ரமம் உள்ள நிலங்கள் அதிகத் தண்ணீரைப்பிடித்து குறைந்த தண்ணீரை ஆவியாய்ப் போகவிடுகிறதென்றும், பசளைமண் நிலங்கள் மற்றெல்லாவகை நிலங்களைவிட அதிகமான ஈரத்தை எடுத்து மிகவும் குறைவான ஈரத்தைப் போக்குகிறதென்றும், எல்லாவற்றிலும், இலை தழை மக்கிய இந்திரிய வஸ்துக்கள் தண்ணீரைப் பிடித்து வைத்துக்கொள்வதில் சிறந்ததென வெனவும் தெரியவரும்.

ஆகவே மணல்கால் நிலங்களுக்குச் சற்று அதிகமாகவும், அடிக்கடியும் நீர்ப்பாய்ச்சவேண்டி நேரிடும். பசளை மண் நிலங்களுக்கு சொற்பமாகவும் நாட்சென்றும் நீர்ப்பாய்ச்சுவது போதுமானதாகும். ஒரு நிலத்தில் எவ்வளவுக் கெவ்வளவு இலை, தழை முதலான இந்திரியப்பொருள்கள் கலந்திருக்கிறதோ அவ்வளவுக் கவ்வளவு நீர்ப்பாய்ச்சுவதை மட்டுப்படுத்தலாம்.

(2) **அடி மண்ணின் தன்மை:**—அடிமண்ணானது மணற்காலாகவும், சரளை மண்ணாகவுமிருந்தால் அந்நிலத்தில் நீர்வடிவு அதிகமாக ஏற்படும். அப்படிக்கின்றி அடிமண் களிக்காலாக விருந்தால் அந்நிலத்திலிருந்து வடியும் நீர் மிகவும் சொற்பமாக விருக்கும். சாதாரணமாக ஒரு நிலத்தில் பாய்ச்சப்பட்ட தண்ணீரில் நூற்றுக்கு 15 அளவுக்குக் குறையாமல் தண்ணீரானது கீழ் நோக்கி வடிந்து போகிறதென்று கணக்கிட்டிருக்கிறார்கள். அதிக மணற் பாங்கான அடிமண்ணுள்ள நிலங்களில் பாய்ச்சிய தண்ணீர் நிமிஷ நேரத்தில் காணாமல் போவது இந்தக் காரணத்தினால்தான். ஆனால் ஒரு நிலத்திற்குச் சாதாரணமாகக் கொஞ்சம் நீர்வடிவு ஏற்படவேண்டியது அவசியம். நீர் வடிவில்லாத நிலங்களில் பயிர் முன் சொன்னபடி கெடுதி அடையும். ஜீவப்பிராணிகளுக்குக் காற்றோட்டம் எவ்வளவு அவசியமோ அதைப்போலவே பயிர் வகைகளுக்கு நிலத்தின் வழியாய் நீர்வடிவு அவசியம். ஆகவே விசேஷப்பலன் அடையவேண்டுமானால் அந்நிலத்துக்குச் சுமாரான நீர்வடிவு இருக்க வேண்டிய தவசியம்.

(3) **நிலத்தின் மேடு, பள்ளம்:**—சமதளமான ஓர் நிலத்திற்கு அவசியமான தண்ணீரைப் பார்க்கிலும் சரிவானநிலத்திற்குத் தண்ணீர் அதிகமாகச்செல்லும். ஏனென்றால் சரிவுள்ள நிலத்தில் தண்ணீர் பாயும் போது மண்ணுக்குள் கொஞ்சம் தண்ணீர்தான் தங்கும். ஆகையால் நிலங்கள் கூடியமட்டும் சமதளமாயிருக்கவேண்டிய தவசியம்.

(5) **சீதோஷ்ணம்:**—வெயில்அதிகமாயுள்ள இடங்

களிலும், வேனிற்காலங்களிலும் பாய்ச்சப்படும் தண்ணீர் மிகவும் அதிகப்படும். அக்காலங்களில் நிலங்களினின்று ஆவியாகப் போகும் தண்ணீரோ மிக மிஞ்சி இருக்கும்.

(5) நீர்பாய்ச்சும் நோக்கம்:—சாதாரணமாகப் பயிரின் போஷணைக்கு வேண்டிய அளவுக்கு நீர் பாய்ச்சுவது வழக்கம். சில விடங்களில் வண்டல் நிறைந்த தண்ணீர் வெள்ளம் வருவதுண்டு. இதைக் காவேரி நதியில் பார்க்கலாம். கிருஷிகர் இந்த வண்டல் கலந்த தண்ணீரைச் சுமார் ஒரு அடி ஆழத்திற்கு தங்கள் நிலங்களில் கட்டிவைக்கிறார்கள். அப்படி அவர்கள் செய்வதின் நோக்கம் தண்ணீரிலுள்ள வண்டல் நிலத்தில் படிந்து அந்நிலத்தைக் கொழுமை உண்டாகச் செய்ய வேண்டு மென்பது. ஆகவே எந்த நோக்கத்தை யிட்டு நீர் பாய்ச்சப்படுகிறதோ அதற்கேற்ப தண்ணீரின் அளவு கூடியும், குறைந்துமிருக்கவேண்டும்.

நீர்பாய்ச்சும் பயிர்:—சாதாரணமாகத் தோட்டக்கால் பயிர்களுக்கெல்லாம் நஞ்சை பயிர்களுக்கு அதிகமாகத் தண்ணீர் செல்லும். இத்தலி தேசத்தில் ஒரு நிமிஷத்திற்கு 60 கன அடிவீதம் நீர்பாய்ச்சியதில் 304 ஏக்கர் மக்காச்சோளத்திற்கு நீர் பாய்ந்ததாகவும், அதே அளவாய் பாய்ச்சியதில் 44 ஏக்கர் உள்ள நெல்பயிருக்குத்தான் அத்தண்ணீர் கண்டதாகவும் தெரியவருகிறது. ஸ்பெயின் தேசத்தில் மேற்சொல்லிய அளவுக்கு நீர் பாய்ச்சியதில் சாதாரண தோட்டக்கால் பயிர்களில் 240-முதல் 1,000- ஏக்கர் பாய்ச்சப்பட்டதாகவும் நெல்லுக்குப் பாய்ச்சியதில் 30-முதல் 80-ஏக்கர்தான் பாய்ச்சப்பட்ட தென்றும் தெரியவருகிறது. ஐரோப்பாவில் தென்பாகத்தில் சாதாரணமான வருஷப்பயிர்களுக்கு ஏக்கர் ஒன்றுக்கு 7,500 கன அடி தண்ணீர்ப் பிடித்ததாகவும் புல் தரைகளுக்கு அதற்கு இரட்டிப்புத் தண்ணீர் வேண்டியிருந்ததாகவும், தோட்டக்கால்களுக்கு 4 மடங்கென்றும் கண்டுபிடித்திருக்கிறார்கள். இதனால் பயிரின் தினுசுக்குத் தக்கதாகத் தண்ணீரின் அளவு வித்தியாசப்படுகிறதென்று வெளியாகும். மக்காச் சோளத்திற்கு அவசியமான தண்ணீரைப் பார்க்கிலும் நெல்லுக்கு 7-மடங்கு அதிகமான தண்ணீர் அவசியமாகவிருக்கிறது. நெல்லைவிட மக்காச்சோளம் அதிக சத்துள்ள போஜன பதார்த்தமென்பது தஞ்சாவூர் திருச்சினாப்பள்ளி ஜில்லாக்களில் மக்காச்சோளம் பயிரிடும் குடியானவர்களுக்கு நன்றாய்த் தெரியும். அப்படியிருந்தும் அனேகவிடங்களில் நெல்லையே அதிகமாகச் சாகுபடி செய்து அதிகத் தண்ணீரைப் பாழாக்குகிறார்கள்.

சாதாரணமாக இவ்விராஜதானியில் பயிராகும் நெல் தினுசுகள், குருவையென்றும், சம்பாவென்றும் இரண்டு தினுசுகளாகப் பிரிக்கலாம். குருவையென்பது 120-நாட்களுக்குள் விளைவுக்கு வரும். சம்பா வென்பது சாதாரணமாக 180-நாட்களில் விளைவாகும். குருவைப் பயிருக்குச் சாதாரணமாக முதல் 30-நாள்களுக்கு நாள் ஒன்றுக்கு 2 அங்குலத் தண்ணீரும், 31-ம் நாள் முதல் 100-நாள் வரைக்கும் நாள் ஒன்றுக்கு சுமார் 4-அங்குலத் தண்ணீரும் பாய்ச்சப்படுகிறது. அதற்குமேல் 20 நாட்களுக்குத் தண்ணீர் பாய்ச்சப்படுகிறதில்லை. சம்பாவுக்கு முதல் 30 நாட்களுக்கு நாள் ஒன்றுக்கு 2 அங்குலத் தண்ணீரும், அதின் பின் 160-ம் நாள் வரை நாள் ஒன்றுக்கு 4 அங்குலத் தண்ணீரும் பாய்ச்சப்படுகிறது. இவ்விதமாக குருவைப் பயிருக்குச் செல்லும் தண்ணீரின் அளவு 28 அடி ஆழமுள்ளதென்றும்,சம்பா பயிருக்கு 48அடியென்றும் கணக்கிடப்படுகிறது.தென்னாற்காடு ஜில்லாவிலும், கிருஷ்ணா ஜில்லாவிலும் நீர்ப்பாய்ச்சும் தண்ணீரை எம்மட்டுக் குறைக்கலாமென்பதைக் கண்டுபிடிக்க அநேகப் பரீட்சைகள் நடத்தப்பட்டன. காலமழையுடன் இரண்டடி முதல் 7 அடித்தண்ணீர் உபயோகிப்பது நஞ்சைப் பயிருக்குப் போதுமானதென்று கண்டுபிடிக்கப்பட்டது. தண்ணீர் எவ்வளவுக்குக் குறைந்ததோ அவ்வளவுக்கு அதிகமான மாசூல் கிடைத்ததென்று வெளியாகிறது. கோயம்புத்தூரில் சாதாரணமாக நெற்பயிருக்கு 12 அடித் தண்ணீரும், கரூரில் 14 அடித்தண்ணீரும் உபயோகப்படுத்துகிறார்கள். தென்னாற்காடு ஜில்லாவில் செய்த பரீட்சையில் 5 அடித்தண்ணீர் பாய்ச்சிய நெல் பயிரிலிருந்து ஏக்கர் ஒன்றுக்கு 600 பக்காப்படி வீதம் மாசூல் கிடைத்தது. இத்தலி தேசத்தில் நஞ்சை நிலங்களுக்கு $5\frac{3}{4}$ அடித்தண்ணீர் போதுமென்று கண்டுபிடித்திருக்கிறார்கள். ஸ்பெயின் தேசத்தில் $3\frac{1}{2}$ அடி முதல் 8 அடி ஆழத்தண்ணீர் உபயோகப்படுத்தப்படுகிறது. இதனால் தற்காலத்தில் நமது நஞ்சை நிலங்களுக்குப் பாய்ந்து வரும் தண்

ணீரின் அளவு ஆறு (6) மடங்கு அதிகமானதென்று சொல்லலாம்.

இப்படித் தண்ணீரை அவம் போக்காமல் மட்டமாய்ப் பாய்ச்சி வருவார்களானால் நமது கிருஷிகர் தற்காலத்தில் நீர்ப்பாய்ச்சும் ஜலாதாரங்களிலிருந்து சுமார் 5 மடங்கு அதிகமான விஸ்தீர்ணமுள்ள நிலங்களில் நஞ்சை சாகுபடி செய்யக்கூடுமென்று ஏற்படுகிறது.

இவ்விஷயம் கிருஷிகருக்கு மிகவும் முக்கியமானது. இதைச் சர்க்கார் பண்ணைகளில் பலவகையான நிலங்களிலும், பல மாதங்களிலும் பல வருஷங்களுக்குத் தொடர்ச்சியாய் பரீட்சைநடத்தி அதிலுண்டாகும் பயனைப் பத்திரிகைகளில் பிரசுரம் செய்து வந்தால் பயிரிடும் குடிகள் மிகவும் பயன் பெறுவார்கள்.

இது நிற்க, நிலத்தின் மணப்பாங்கை பண்படுத்துவதினால் அதற்கு அவசியமான தண்ணீர்ச் செலவை மட்டுப்படுத்தலாம். ஒரு நிலத்தை அடிக்கடி அதிக ஆழத்திற்கு உழுதுவைத்தால் அதில் பெய்யும் மழைத் தண்ணீர் ஒரு சொட்டும் அவம்போவாமல் அதனுள்ளே சுவரி அதில் செய்யப்படும் பயிர்களை அதிக காலத்திற்குப் போஷிக்கும். மேலும் ஒரு நிலத்தில் அதிகமான இலை, தழை முதலிய இந்திரிய வஸ்துக்களை எருவாக உபயோகித்து வந்தால் மண் நயப்பட்டு பசளை மண்ணாகி அதிகத்தண்ணீர் மண்ணினூடே வடிந்து போகாமல் பிடித்து வைத்துக் கொண்டு நெடுநாளைக்குப் பயிர்களுக்குச்செழிப்பூட்டும். மேலும் நீர்ப்பாச்சியபின் நிலத்தின் மேல்மண் காய்ந்து வரும் தருணத்தில் அதைக் கொத்திக்கிளறி வைப்பதால் அடி மண்ணிலுள்ள ஈரம் ஆவியாய்ப் போகாமல் தடைபட்டு அதிகநாள் நிற்கும். இவ்விதங்களிளெல்லாம் பயிருக்கு நீர்ப்பாய்ச்சும் தண்ணீரைக் குறைக்கலாம்.

தண்ணீர் எப்போதும் கட்டி நிற்கவில்லையானால் நெற்பயிரானது கெட்டுப்போகும் என்னும் அபிப்பிராயம் சரியல்லவென்பது நமது கிருஷிகரெல்லோரும் தெரிந்துகொள்ளவேண்டியது. சில தினுசு நெற்பயிர்கள் கேழ்வரகுக்கு ஒப்பாகத் தண்ணீர் பாய்ச்சப்பட்டு வருகின்றன. இப்படிக் காய்சசலும், பாய்ச்சலுமாய் செய்யப்பட்ட நெல் பயிரில் மாசூலும் குறைவாகவில்லை, இந்தத் தினுசுகளைத் தற்காலத்தில் கிருஷிகர் முக்கியமாய்க் கையாடவேண்டும். மேலும் ஒரு தினுசு நெற்பயிருக்கு தண்ணீர் மிகவும் அதிகமாகப் பாய்ச்சி வழக்கம் ஏற்பட்டுவிட்டால் அதற்கு திடீரென்று தண்ணீர் குறையும்போது அதற்கு கெடுதி உண்டாகிறது. அப்படிக்கின்றி நீர்ப்பாய்ச்சல் தண்ணீரைக் கொஞ்சம் கொஞ்சமாய்க்குறைத்து அதுவே வழக்கமாய்ச் செய்துவந்தால் சில வருஷங்களுக்கு முன் விளைவடைவதற்கு அதிகத்தண்ணீர் வேண்டிய பயிரானது சொற்பத் தண்ணீரிலும் விளைவிற்கு வரக்கூடிய சுபாவத்தை அடைகிறது. இப்படிப் பயிர்கள் காலபேத இயல்புக்குத் தக்கதாகத் தங்கள் சுபாவத்தை மாற்றிக் கொள்ளும் சக்தி யுடைத்தாயிருத்தல் மிகவும் ஆச்சரியமான காரியம். இந்தச் சக்தியின் அனுகூலத்தைக் கிருஷிகர் முழுவதும் அடைய முயல்வார்களானால்அதுவே கிருஷியின் அபிவிர்த்திக்குமுக்கியமான ஒரு முறையாகும்.—கிருஷிகனில் ஜெ. தர்மரங்க ராஜு.

---

## LONGEVITY.

### ஆயுஸு நீடித்திருத்தல்.

ரஞ்சிதபோதினியில் ஒரு நிருபர் தீர்க்காயுஸை எப்படியடையலாம் என்பதைப்பற்றி எழுதுகிறார், தொண்ணூறு வயதுள்ள ஓர் டாக்டரிடம் சிலர் சென்று நீர் இவ்வளவு காலம் உயிரோடிருப்பதின் காரணமென்னவென்று கேட்டார்கள். அதற்கவர் மனுஷர்கள் நூறு வயதுக்குமேல் ஜீவித்திருப்பதற்கு பொதுவாக கவனித்து நடக்கவேண்டிய சிலவிஷயங்களை காண்பிப்பதாகச் சொல்லி பின்வருமாறு சொன்னாராம்.

1. நீ இளமையாயிருக்கும் போழுதே நான் முதிர்ந்து நரைவயதாகும் வரை ஜீவிப்பேன் என்று உன் மனதில் தீர்மானஞ் செய்துசொள்.

2. இயற்கை ப்ரமாணங்களுக்குக் கீழ்ப்படிந்து நடக்கவேண்டியதுமன்றி,கெட்ட ஸகவாஸம், நாவல் வாசிப்பு, ஸர்க்கஸ், கூத்து முதலியவைகளைப் பார்த்தல், இரவில் அதிக நேரம் கண்விழித்தல், முதலியவைகளைக் கட்டோடே விலக்கு.

3. தன்னடக்கமின்மை, கோபம், பொறுமை, குற்றம் சண்டுபிடித்தல், ஸந்தேகம், கண்ணீர், மனத்தளர்ச்சி முதலிய கெட்ட குணங்கள், மனுஷனுடைய

ஆயுளைக் குறைக்கக்கூடிய முக்ய காரணங்கள். மற்றவர்களைப்பற்றி ஏதாவது நல்ல கார்யமிருந்தால் பேசு, இல்லாவிட்டால் உன்வாயை அடக்கிக்கொள்.

4. மற்றவர்களைப்பற்றிய பொறாமை, ஸந்தேகம், பழிவாங்கல், முதலியகெட்ட எண்ணங்கள் உன் மனதில் கிளம்ப இடங்கொடாதே. ஏனெனில் அவைகள் மனுஷரின் குணத்தைக் கெடுக்கிறதுமன்றி சரீரத்தையும் நோய்க்கிடமாக்கும். எண்ணங்கள் ஆவியின் சத்ருக்கள். அவைகளுக்கு மனுஷரைப் பிழைப்பூட்டவும், கொல்லவும் வல்லமையுண்டு.

அக்ரமக்காரர்கள் நடு வயதில் அழிந்துபோகிறார்கள் என்று பூர்வீகத்தில் சொல்லப்பட்ட வாசகம் எப்பொழுதும் உண்மையாகவேயிருக்கிறது. ஏனெனில் எத்தனையோ வாலிபர் தங்களுடைய காமவிகாரத்தையடக்க சக்தியற்றவர்களாய் தங்கள் மனம் போன போக்கின்படியே நடந்து, பிஞ்சில் பழுத்த பழங்களைப்போல் சீக்ரம் வாடி வதங்கி முதிர்ந்த பருவமடைந்து ஸதா நோயாளிகளாயிருந்து கடைசியில் பருவம் வருமுன் மரணத்துக்கு ஆளாகிறார்கள்.

உங்களுக்கு சத்ருக்கள் இருக்கலாம். உலகத்திலுள்ள ஒவ்வொருவருக்கும் சத்ருக்களுண்டென்பது வாஸ்தவமே. ஆனால் நாம் மற்றவர்களைப் பகையாமல், அவர்களைப் பற்றி பொறாமை கொள்ளாமல், எப்பொழுதும் அவர்களிடத்தில் காணப்படும் நற்குணங்களை ப்ரஸ்தாபித்துக் கொண்டிருப்போமாயின்நமக்கு சத்ருக்களுண்டாவது அருமை.

ஆகையால் உனக்குக் கிடைக்கக்கூடிய தீர்க்காயுஸுக்காகப் போராடு. இயற்கை ப்ரமாணங்களிவையென்றறிந்து அவைகளுக்குக் கீழ்ப்படிந்துநட. அவைகளே தெய்வ ப்ரமாணங்கள். ஒருபோதும் மரிக்கமாட்டேன். எப்போதும் ஸுகஜீவியாயிருப்பேன் என்று உன்மனதில் தீர்மானம் பண்ணிக்கொள். எவ்விதபயமும் உன்னை ஆட்கொள்ள இடங்கொடாதே. மனுஷன் இயற்கையிலே ஸுகதேகியே. ஆகையால் உன் சித்த சக்தியை பலப்படுத்தி எப்போதும் நம்பிக்கையும் விச்வாஸமுமுள்ளவனாயிரு.

எல்லாரிடத்திலும் தர்ம சிந்தையுள்ளவனாயிரு. உன் ஆசையை அடக்கியாளு. நீ சாப்பிடும் சாப்பாடு, பருகும் ஜலம், ச்வாஸிக்கும் ஆகாயம், நித்ரை, அணியும் ஆடை முதலியவைகளைச் சுத்தமாகவைத்து, இயற்கை ப்ரமாணங்களுக்குக் கீழ்ப்படிந்து வருவாயாயின், நீ நூறு வயஸிற்கு மேலே ஜீவிப்பாய் என்பதில் ஸந்தேகமில்லை. கடைசியில் உன் அந்த்யகாலத்தில் ஸமாதானமாக உன் மரணப்படுக்கையிலிருந்து விடியற்காலத்தில் தோன்றி மறைகிற பனியைப்போல் நானும் மெதுவாக மேலே எழும்பிச் செல்கிறேன். நான் செய்து வைத்து விட்டுப்போகிற கார்யங்களால் நினைக்கப்படுவேன்'' என்று சொல்லத்தக்கவனாயிருப்பாய். என்று போதித்தாராம்.

---

## Mr. MUDHOLKAR'S SPEECH

### மிஸ்டர் மதோல்காரின் பேச்சு.

சென்ற டிஸம்பர் மாஸத்து காங்க்ரெஸ் ப்ரெஸிடெண்டாகிய மிஸ்டர் மதோல்காரின் ப்ரஸங்கத்தில் சில விஷயங்களைக் குறிப்பிடுகிறோம்.

காங்கிரஸ் ஸபையின் நோக்கம்.—இந்தியாவிற் பிறந்து பல நூற்றாண்டுகளாய்த் தமக்குள் அநேக விரோதங்களை உடைய பற்பல வகுப்பார்களை ஒருமைப்படச்செய்து, அவர்களுடைய புத்தியை விருத்திசெய்து, அன்னிய தேசத்தவர்களாகிய தற்காலப் பெருமை அடைந்த ஜாதிகளுடன் ஸமத்வ அந்தஸ்தை உடையவர்களாய் இந்தியரைச் செய்யவேண்டியதே காங்க்ரஸ் ஸபையின் நோக்கம்.

தேசத்தில் புத்திமான்களாயிருக்கிறவர்கள் கடவுளால் இத்தேசத்து ஜனங்களுக்கு உதவப்பட்ட பெரியதோர் ஆசீர்வாதமாக ப்ரிட்டிஷ் அரசாட்சியை நினைத்து, அதனால் நமக்குண்டாயிருக்கிற நன்மைகளை நன்குணர்ந்து வந்தன மளிப்பதுடன் ப்ரிட்டிஷ் ப்ரஜைகளுக்குள்ள எல்லா ஸ்வதந்தரங்களும் நமக்கும் கிடைக்குமாறு வேண்டுகிறார்கள் இதுவே நமது நோக்கம்.

சட்டஸபை விதிகளில் குறைகள்.—முகம்மதிய வகுப்பு தனியாக ப்ரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்குமாறு ஸ்வதந்தரம் கொடுக்கப்பட்டிருப்பதால், முகம்மதியர்களும் மற்ற இந்தியர்களும் ஒருமைப்படுவது தடுக்கப்பட்டுப்போகிறது.

மத்யதர முகம்மதிய கிலாஸ்வான்தார்கள் வியாபாரிகள், வித்யாப்பட்டதாரிகள், தொழிலாளிகள் முதலியவர்களுக்கு வோட்டு பாத்யம் கொடுக்கப்பட்டிருப்பதுபோல் மற்ற வகுப்புகளைச்சேர்ந்த மத்யதர அந்தஸ்துள்ளவர்களுக்கும் அந்த ஸ்வதந்த்ரம் கொடுக்கப்படவேண்டும். ராஜப்ரதிநிதியின் நேர் விசாரணையில் இருக்கிற வடமேற்கு எல்லை மாகாணங்கள், குடகு, ஆஜ்மீர்-மீர்வாரா முதலிய இடங்களுக்கும் ப்ரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் சுதந்தரம் கொடுக்கப்படவேண்டும்,

# REVIEW OF THE PRESS
## பத்ரிகை ஆராய்ச்சி.

**Manures.**

உரங்கள்.—மத்யமாகாணங்கள், பேரார் ஆகிய இந்த ப்ரதேசங்களில் உரங்களைப் பற்றிப் பரீக்ஷை நடத்தியதின் விஷயமாக அந்த மாகாணத்து டெபுட்டி டிரெக்டர் மிஸ்டர் க்ளௌஸ்டன், 'அக்ரிகல்சரல் அண்ட் கோவாபரெடிவ் கெஸட்' என்னும் பத்ரிகையில் ஒரு வ்யாயம் எழுதிப் போகையில் எருவுக்கு உபயோகப்படும் பொருள்களில் மாட்டின் சாணம் மற்றவைகளைவிட எப்பொழுதும் ரொம்ப முக்யமான பொருளாகவே இருக்கிறது என்கிறார். அது மலிவாயிருப்பதோடு, இந்தியாவில் எங்கும் கிடைக்கக்கூடியது. அதை உபயோகப்படுத்துவதால் நிலத்தில் இந்த்ரிய வஸ்துவும், நைட்ரோஜனும் அதிகரித்து, நிலமும் ரொம்ப செழிப்படைகிறது. மண்ணின் தன்மையும் வ்ருத்தியடைகிறது. ஆனால் நிலத்தில் எருவாக உபயோகிக்கப்படும் சாணம் மாத்ரம் கொஞ்சமாயிருக்கிறது என்கிறார். மத்யமாகாணங்களில் 1910-ம் வருஷத்தில் எருமைகள் உள்பட 10,520,171 கால்நடைகள் இருந்தன. ஸர்க்கார்ப் பண்ணைகளில் செய்த பரீக்ஷைகளால் வேலை செய்யும் எருது ஒன்று ஒரு வருஷத்தில் $3\frac{1}{2}$ டன் சாணம் கொடுக்கிறதென்று தெரியவருகிறது. இதில் கொட்டிலுள்ள குப்பம் கூளம் சிறிதும், மாட்டுக்குப் படுக்கையாகப்போடும் செத்தையும் இதில் சேருகின்றன. ஆகவே ஸராஸரியில் ஒரு மாடு ஒருவருஷத்தில் $2\frac{1}{2}$டன் சாணம்போடும் என்று சொல்லலாம். ஆனால், அநேக மாடுகள் தூரமான இடங்களில் போய் மேய்வதால், அங்கே அவைகள் போடும் சாணத்தை சேகரிக்கமுடியாமல் ரொம்ப சாணம் நஷ்டமாகிறது. ஆனால் வேறு ம்ருகங்களின் சாணத்தாலும் மற்ற வழிகளாலும் எருக்கிடைப்பதால் இந்த நஷ்டம் ஒருவாறு ஈடு செய்யப்படுகிறதென்னலாம். ஆகையால் அந்த மாகாணத்தின் கால் நடைகளால் 263,00,427 டன் சாணம் கிடைக்கவேண்டும். இதை ஏகருக்கு ஒருவருஷத்துக்கு 1-டன் சாணம் வீதம் போட்டால் ஸாகுபடியாகும் நிலம் முழுவதற்கும் எருவாகும். ஆனால் இந்த மொத்த அளவில் மூன்றில் ஒருபாகந்தான் எருவாக உபயோகிக்கிறார்களாம். மீதியில் பெரும்பாகம் அடுப்பெரிக்க விராட்டியாகத் தட்டப்படுகிறது. அஜாக்ரதையாக சாணத்தைக்குவித்து வைப்பதால் கொஞ்சபாகம் மழையால் கரைந்து போகிறது. மொத்தத்தில், சேகரிக்கப்படும் சாணமெல்லாம் உயர்ந்த எருவாக இல்லை என்கிறார். இதற்குக் காரணம்,

(1) எருவை ஸரியாக சேகரித்து வைப்பதில்லை.

(2) பருத்தி விளையும் நிலங்கள் ஒழிந்த வேறிடங்களில் கால்நடைகளுக்கு ஸரியானபடி தீனி போடுவதில்லையாம். மாட்டு மூத்ரத்தை காய்ந்த மண்ணை உபயோகித்துக் சாப்பார்றினவக்கும் முறை பேராரில் சில விவஸாயிகளால்தான் அனுஷ்டிக்கப்படுகிறது.

**Cottage Industries for Women.**

நாட்டுப்புறத்து ஸ்த்ரீகளுக்குக் கைத்தொழில்கள்.—இதுவிஷயமாய் 'லோகரஞ்சனியில்' ஒரு வ்யாஸம் எழுதப்பட்டிருக்கிறது.

பட்டணங்களின், நாகரீகம்பெற்ற குடும்பங்களில் ஸ்த்ரீகள் தங்களுடைய வீட்டுவேலை யொழிந்த மற்றநேரங்களில் பூப்பின்னல், மணிகோத்தல், முதலிய நாகரீகவேலைகளைச்செய்தும் தங்கள் சுவர்களை அழகுபெறச்செய்தும் காலங்கழிக்கிறார்கள்.

நாடடுப்புறத்தில் நாகரீகம் குடிப்புகாத ஊர்களில் குடும்பங்களில் கைம்பெண்கள் உள்பட எல்லாஸ்த்ரீகளும் தங்கள் குடும்பங்களுக்கு வேண்டிய மேல்செலவையாவது ஸம்பாதிக்கப்பாடுபட்டுப் பொருள் சேர்க்கிறார்கள். இந்தியாவின் வடபாகங்களில் ப்ராமண வகுப்பாரில் ஸ்த்ரீகளுள் இம்மாதிரியான உழைப்பும் வருமானமும், செட்டான செலவும் கிடையாதென்றும், ஆனால் தென்னிந்தியாவிலுள்ள அந்தணஸ்த்ரீகள் யாவரும் மிக்க உழைப்பாளிகளாகவும், செட்டுச் செலவுள்ளவர்களாகவும் இருக்கிறார்கள் என்றும் ஷை பத்ரிகை கூறுகிறது. பின்பு அந்த பத்ரிகை, ஸ்த்ரீகள் தங்கள் காலத்தை எப்படி லாபகரமாய்க் கழிக்கிறார்கள் என்பதற்கு சில உதாரணங்கள் கூறுகிறது. நாட்டுப்புறங்களில் ஒவ்வொரு வீட்டிலும் கறவை எருமை மாடுகள் தங்கள் சக்திக்குத்தகுந்தபடி வாங்கிவைத்துக்கொண்டு, அவைகளில் பால் நெய் வெண்ணெய் முதலியவற்றில் தமது வீட்டிற்கு வேண்டியவைபோக மீதியைவிற்றுப் பணம் ஸம்பாதிக்கிறார்கள். அந்த மாடுகளின் சாணத்தை வராட்டி தட்டி விற்று அதனாலும் சிறிது பணம் ஸம்பாதிக்கி

ருர்கள். வீட்டுக்கொல்லைப்புறத்தில் வெண்டை, அவரை, கொத்தவரை, கீரை முதலிய கறிகாய்ப் பயிர்களைப்போட்டு அவற்ருலும் லாபம் அடைகிருர் கள். சில கைம்பெண்களும், இன்னம் மற்ற குடித் தன ஸ்த்ரீகளும் தங்கள் ஒழிந்த நேரங்களில் கோ ரைப்பாய் முடைந்து பணம் ஸம்பாதிக்கிருர்களாம். அவர்கள் செய்யும் பாய்கள் வேலைப்பழக்கத்திற்குத் தகுந்தாற் போல் வேலைப்பாடுள்ளதாயிருக்கின்றன. இந்தப்பாய்களை ஸ்த்ரீகள், வீட்டுப்பொருள்களைக் காய வைக்க வென்றும், படுத்துக் கொள்வதற்கென்றும், சிலவற்றை ஐப்பசி மார்கழி மாஸத்துப் பனிசேர்ந்த குளிரின் அடக்கத்திற்காகப் போர்த்திக்கொள்வதற் கென்றும் பின்னுகிருர்கள். மெஷினல் பின்னப் படும் மொலுக்காஸ் பாய்களுக்கும் இவற்றிற்கும் பல விஷயங்களில் ரொம்ப வித்யாஸம் இருந்தாலும், இந் தப்பாய்கள் பூமியின் ஈரம் எவ்வளவானுலும் தாங்கி ஈடுகொடுப்பதுபோல் மற்றைய எவ்வித கோரைப் பாய்களும் தாங்காவென்றும், இந்தப்பாய்கள் குளிரு குக்கு ஈடுகொடுப்பதுபோல சால்வைகள் முதலிய வைகளும் ஈடு கொடுக்கமாட்டா என்றும் கூறுகிறது. மேலும் அனுவச்யமாய்க் கொஞ்சகாலமட்டுமிருந்து அழிந்து போகும் சரக்குகளை வாங்கி உபயோகியாமல் இவைகளையே உபயோகிக்கவேண்டுமென்றும், நமது தேசம் கைத்தொழிலால் முன்னுக்குவரவேண்டுமா னல் இவை மாதிரியான வீட்டுச் சிறுமுதல் கைத் தொழில்களை வ்ருத்தி செய்யவேண்டும் என்று கூறி முடிக்கிறது.

## Indian Workmen.

இந்திய கைத்தொழிலாளிகள்.—'லோகோபகாரி' பத்ரிகையில் ஒரு நிருபர் "கைத்தொழிலாளிகளின் ஒழுங்கின்மையும் அயோக்கியதையும்" என்னும் தலைப்பின்கீழ், இந்திய தொழிலாளிகளின் குணதிச யங்களையும் அவைகள் இந்தியர்களுடைய நாகரீகத் துக்கும், மேம்பாட்டிற்கும், பிறரால் நன்குமதிக்கப் படும் தன்மைக்கும் எம்மட்டும் ஸாதகபாதகமாயிருக் கின்றன வென்பதையும் ஆராய்கிருர். அவர், ஆழ் ந்து யோசிக்குமிடத்துத் தற்காலத்துள்ள கைத்தொழி லாளரிடத்து யோக்யதையும், ஸத்யத்வமும், நாணய மும், குறித்த காலத்தில் வேலையைச் செய்து முடிக் குந் திறமுமாகிய இவை முதலான ஸத்குணங்கள் சிறிதும் இல்லாதனவாகக் காணப்படுகின்றன என்று அபிப்ராயப்படுகிருர். தாம் சொல்லுவதற்கு உதா ரணமாக தட்டாரருடைய செய்கையைக் குறிப்பிடு கிருர். தட்டாரர்கள், தங்களிடம் கொடுக்கப்படும் பொன்னில் சிறிதளவாவது திருடிவிடுகிருர்கள் என் றும், அவர்கள் அப்படிச்செய்தும் குறித்தகாலத்தில் கெடு ப்ரகாரம் நகையைச் செய்து கொடுப்பதில்லை என்றும், அந்த ஜாதியாரில் பலர் வேலையில் ஸமர்த் தர்களாயிருந்தும், அவருடைய வேலையின் ஸாமர்த் யம் புதருக்குள் மறைத்துவைத்த தீபம்போல் ப்ரகா சிப்பதில்லை என்றும், இவ்வித நிலைமைதேசத்தின் மேம்பாட்டிற்கு ஏற்றதல்ல என்றும் குறைகூறுகிருர். இன்னம் அவர், தட்டாரர்களுடைய உபத்ரவத்தினல் பலர், கூலி அதிகமானுலும் பாதகமில்லை என்று ஐரோப்பிய நகைக் கடைகளில் நகை செய்யச்சொல்லு வதால், அந்தப்பணம் இந்தியருக்குப் பயன்படாமல் அன்யருக்குப் பயன்படுகிறது; இந்திய தட்டார்கள் ஸரிவர தமது தொழிலைச்செய்தால் அவர்கள் மிகுந்த பணக்காரர்களாவது மன்றி இந்தியாவும் மேம்பாட டையும்; என்கிருர். ஆனல் அவர் தட்டாரர்களையே யன்றி மற்றையோரையும் குறை கூறுகிருர்.

மேற்கூறிய விஷயங்கள் யாவும் தட்டாரர்களிடத் தல்லாமல் இதரக் கைத்தொழிலாளிகள் யாவருக் கும் பொருந்தும் என்றும், தோலில் வேலைசெய்யும் சக்கிலி முதற்கொண்டு செம்பு, வைரம், பச்சை முத லான நவரத்னங்களில் பழகும் வேலைக்காரர் பர்யந் தம் ஸத்யத்வ மின்மையும் அயோக்யதையும் மிகுதி யாகக் காணப்படுகின்றன ; இப்படியிருந்தால் நம் தேசம் எப்படி க்ஷேமத்தையடையும் என்கிருர். பின்பு, ஐரோப்பிய வேலைக்காரனையும், இந்திய வேலைக்காரனையும் பற்றிப் பின்வருமாறு தராதரம் கூறி முடிக்கிருர்.

"ஐரோப்பியரில் எவ்வளவு அற்ப வேலைக்காரனு யினும் அவன் தன்னுடைய கடமை இன்னதென் பதற்குப் பயந்து நடப்போனுயும், பொய் சொல்லாத வனுயும், வஞ்சக மின்றியவனுயும், குறித்த காலத்தில் வேலையைச் செய்து முடிக்குந் தன்மையுடையோனு யும் இருத்தலால் விசேஷ செல்வத்தையுங்கீர்த்தி யையு மடைவதன்றித் தன் தேசத்துக்கே ஒர் அணி கலனய்விளங்குகின்ருன். ஐரோப்பியருடையவியா பாரம் பெருகுவதற்கும் அவர் திரவியம் விருத்தியா வதற்கும் இதுவே முக்கிய காரணமாம், நம்மனோர்

அங்ஙனமின்றிக் கேடுகெட்ட ஸ்திதியையுற்றுப் பிறர் மதிப்பை யிழந்து வருவதற்குக் காரணம் அவர்களிடத்து நாணயமும், யோக்யதையு மில்லாமையேயாம். நந்தேச க்ஷேமத்தைக் கருதும் ஒவ்வொரு கைத்தொழிலாளரும் மேற்கூறிய விஷயங்களை நன்கு கவனித்து அவற்றிற் காட்டியுள்ள குறைபாடுகளை நீக்கி நடப்பாரென நம்புகின்றோம்."

**Elementary Education.**

**கீழ்த்தரப்படிப்பு.**—ஸமீபத்தில் இம்பீரியல் லெஜிஸ்லெடிவ் கௌன்ஸிலில் ஆனரபில் மிஸ்டர் கோகலே, நம் தேசத்தில் க்ராமாந்தரங்களில் கீழ்த்தரப் படிப்பை அபிவ்ருத்திசெய்ய இந்தியா கவர்ன்மெண்ட் என்ன ஏற்பாடுகள் செய்திருக்கிறார்களென்றும், அது ஸம்பந்தமாய் ஒரு பக்கம் இந்தியா கவர்ன்மெண்டுக்கும் இந்தியா ஸெக்ரிடெரிக்கும், மற்றொரு பக்கம் இந்தியா கவர்ன்மெண்டுக்கும் மாகாண கவர்ன்மெண்டுகளுக்கும் நடந்திருக்கும் போக்கு வரத்துக் கடிதங்களை ப்ரசுரம் செய்யவேண்டுமென்றும் கேட்டு ஒரு தீர்மானங்கொண்டு வந்தார். இந்த கீழ்தரப் படிப்பு ஸம்பந்தமாய் ஏதோ சில யோசனைகள் நடந்திருக்கின்றன என்று 'சுதேசமித்திரன்' ஊகிக்கிறது. சென்ற வருஷம் ஆகஸ்டு மாஸத்தில் இந்தியா உதவி மந்த்ரி மிஸ்டர் மாண்டேகு காமன்ஸ் ஸபையில், இப்போது இந்தியாமுழுமையும் இருக்கும் ஸ்கூல்கள் லக்ஷத்து இருபதினாயிரத்தோடுகூட 91,000 ஸ்கூல்கள் புதிதாய் ஸ்தாபிக்கப்படு மென்றும், இந்த ஸ்கூல்கள் ஒவ்வொன்றிலும் பயிற்சி பெற்ற உபாத்யாயர்கள் நியமிக்கப்பட்டு மற்றத் திருத்தங்களும் செய்து, ஸ்கூல் ஒன்றுக்கு 375 ரூபாய் செலவு செய்யப்படு மென்றும், இவைகளில் நியமிக்கப்படும் பயிற்சி பெற்ற உபாத்யாயர்களுக்கு மாஸச் சம்பளங்கள் ரூபாய் 15—ம் 12—மாகக் கொடுக்கப்படுமென்றும் சொன்னார். ஸமீபத்தில் வெளியிடப்பட்டிருக்கும் வித்யா விஷயமான தீர்மானத்திலும் அதேமாதிரியாக சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் மிஸ்டர் மாண்டேகு பேசினதிலும், இந்தியா கவர்ன்மெண்டாருடைய தீர்மானத்திலும் இந்தத்திருத்தங்கள் எத்தனை வருஷங்களில் செய்து முடிக்கப்படும் என்று சொல்லவில்லை. ஆகையால் மிஸ்டர் கோகலே, போக்கு வரத்துக் கடிதங்களை ப்ரசுரம் செய்யாவிட்டாலும் இந்தத் திருத்தங்கள் எத்தனை வருஷத்துக்குள்செய்து முடிக்கப்படும் என்றும், இதற்கு வேண்டிய பணம் இந்தியா கவர்ன்மெண்டார் எப்படி கொடுக்கப்போகிறார்கள் என்றும் தெரிவித்தால் போதும் என்று சொன்னார். இதற்கு வித்யா மெம்பராகிய ஆனரபில் ஸர். எச். பட்லர், கவர்ன்மெண்டுக்கு ஸமீபத்தில் பலபெருஞ் செலவுகள் எதிர்ப்பட்டிருக்கின்றன. ஒபியம் (அபினி) ரெவின்யூ வரவரக்குறைந்து போகின்றது. நிக்கல்ஸன் கமிட்டி ராணுவச்செலவை சோதித்துச் செய்திருக்கும் சிபார்சுகளால் அதிகச்செலவு நேரிடுமோ நேரிடாதோ சொல்லக்கூடவில்லை. பப்ளிக் ஸர்விஸ் கமிஷன் விசாரணை செய்து கொண்டிருக்கிறது. அது சிபார்சுகள் அனுப்பும்போது எப்படியும் செலவு அதிகப் படுமென்று தோன்றுகிறது. மேலும் இந்தியா கவர்ன்மெண்ட் ஸுகாதார அபிவ்ருத்தியின் பொட்டு ஏராளமான செலவை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். இவைகளைத் தவிர, கீழ்த்தரப் படிப்பின் அபி விருத்திக்கும் பெரும்பணவுதவி செய்து வருகிறார்கள். இப்படி யெல்லா மிருப்பதால் இந்தியா கவர்ன்மெண்டின் தீர்மானத்தில் கண்ட திருத்தங்கள் இத்தனை வருஷத்துக்குள் செய்து முடிக்கப்படு மென்று எப்படிச் சொல்லக்கூடும்? ரெயில்வேக்களுக்கும் பாசன வேலைகளுக்கும் அபரிமிதமான செலவுகள் வேறு செய்யவேண்டியிருக்கின்றன. இந்த நிலைமையில் கவர்ன்மெண்டார் எவ்வித வாக்குறுதியும் சொல்லக்கூடவில்லை—என்று பதில் சொன்னார். இந்தப் பதிலைக் கேட்டு மிஸ்டர் கோகலே இது பெரும் ஏமாற்றமென்று ஒருவார்த்தையில் பதில் சொல்லி உட்கார்ந்தார்.

இதுவிஷயமாய் 'சுதேசமித்திரன்' பத்ரிகை எழுதுகையில், வித்யா விஷயமாக திருத்தங்கள் ஸமீபத்தில் வரப்போகின்றன வென்று இந்தியர்கள் எதிர் பார்த்திருக்க, ஸர். எச். பட்லர் பேசின பேச்சால் இந்த விஷயமாய் நடந்த ஆர்பாட்டம் எல்லாம் வீண்சப்தமாகவே முடிந்தன என்று சொல்லுகிறது. இந்தியா கவர்ன்மெண்டுக்கு பெரும் செலவு நேரிடாதாகாலம் இராதென்றும், இத்தனை வருஷங்களுக்குள் திருத்தங்கள் செய்யப்படும் என்று சொல்லாமல் திருத்தங்கள் செய்யப்படும் என்று மட்டும் சொல்லுவதால் ப்ரயோஜனமில்லை யென்றும் எழுதுகிறது. மேலும், கவர்ன்மெண்டாருக்குக் கீழ்த்தரப் படிப்பில் அக்கரை இல்லை யென்று எவரும் சொல்லமாட்டார்கள். லார்ட் லிட்டன் இந்தியா ராஜப்ரதிநிதியாக இருந்த போது பாமின் இன்ஸ்யூரென்ஸ் பண்ட் அதாவது

பஞ்சஸிவர்த்தி பண்ட் என்று புதிதாக வரி விதித்து தனியாக ஒரு ஐவேஜ் உண்டு பண்ணினது போல இப்பொழுதும் ஏதேனும் தனியாக வரி விதித்தாவது ஜவேஜ் உண்டு பண்ணி கீழ்தரப்படிப்பை விருத்தி செய்வதில் கவர்ன்மெண்ட் அதிக அக்கரை காட்ட வேண்டும் என்கிறது.

**School Gardens in Ceylon.**

இலங்கைப் பாடசாலைத் தோட்டங்கள்.—இந்த வருஷம்முதல் லங்கை கவர்ன்மெண்டார் லங்கையி லுள்ள பாடசாலைத் தோட்டங்களுக்கு உதவி நன்கொடை கொடுக்கத் தீர்மானித்திருக்கிறார்களாம். இதுவிஷயமாய் உதய தாரகை எழுதுகிறது:—

இது லங்கையிலுள்ளவர்கள் விசேஷ தேர்ச்சியும் முயற்சியு மடைவதற்குத் தகுதியான ஹேதுவென்று சொல்லலாம். பாடசாலைத் தோட்டங்களில் மாணவர் பெறும் அறிவு பெரும்பாலும் இயற்கையைப் பற்றியதாகும். இந்த அறிவு புஸ்தகப்படிப்பால் பெறும் அறிவைவிட மிக ஸ்திரமானது. ஆனதுபற்றியே மாணவர் இயற்கைக்கு உரிய விஷயங்களைப் புஸ்தகங்களிற் கற்று மனப்பாடம் பண்ணுவதைவிடத் தாமாய் நேரிற் கண்டு விளங்கி அவதானித்துக் கொள்ளத்தக்கதான ஒழுங்குகள் செய்யப்படவேண்டிய தவச்யமென்று தற்காலத்துக் கல்விமான்கள் அபிப்ராயப்படுகிறார்கள். அச்சடிக்கும் வித்தை கண்டுபிடிக்கப்படுமுன் மனிதர்கள் அறிவில் தேருவதற்குக் காலம் அதிகஞ்சென்றது. அதற்குக் காரணம் அக்காலத்திலே மாணுக்கர் அனுபவத்தைக்கொண்டு எல்லாவற்றையுமவதானிக்க வேண்டியிருந்ததேயாம். இந்த வழிவகையினால் அறிவடைதலாகிய நோக்கம் தாமஸமாய் நிறைவேறினும் பெற்றுக்கொண்ட அறிவு அதிகந் தெளிவும் உறுதியுமானதாயு மிருக்கிறது. மாணுக்கர் தாங்கள் விஷயங்களை ஆராய்ந்து கற்றுக்கொள்வதற்கு பதிலாய்ப் புஸ்தகங்களிலே மற்றவர்களெழுதிவைத்தவைகளை அறைகளுக்குளிருந்து மனப்பாடம் பண்ணி யறிவை யடையப்பார்ப்பது அவர்களுடைய மனோகரணங்கள் பலப்படுவதற்கு சற்றுமுதவாது. ஆகையால் அவர்கள் இயற்கையைத் தாமாக ஆராய்ந்து கற்றுக் கொள்வதற்குரியதாய்த் தற்போது அரசாட்சியார் செய்திருக்கும் ஏற்பாடு மிக மெச்சிக்கொள்ளப்படத்தக்கது. அது இலங்கையின் எப்பக்கத்திலும் வ்யாபித்து வ்ருத்தியாக வேண்டுமென விரும்புகிறோம்.

**Teachers' Profession.**

உபாத்தியாயர்களின் தொழில்.—சென்னை உபாத்திமார் சங்கத்தார் மிஸ்டர் வி. எஸ். ஸ்ரீனிவாஸ சாஸ்த்ரிக்கு உபசாரம் செய்யக் கூடினபோது, அக்ராஸனம் வகித்த ஆனரபில் மிஸ்டர் சிவஸ்வாமி அய்யரும், உபசாரம் பெற்ற ஆனரபில் மிஸ்டர் வி. எஸ். ஸ்ரீனிவாஸ சாஸ்த்ரியாரும் வாத்யார்களின் தொழில் இப்போது உயர்ந்திருக்கிறதென்றும், அவர்களுக்குச் சம்பளம் மற்றத் தொழில் செய்வோரைப் போலக் கிடைக்காவிட்டாலும் ஜனங்களால் மதிக்கப்படுகிறார்களென்றும் சொன்னார்கள். இது உபசாரமாய்ச் சொன்ன வார்த்தையே யன்றி யதார்த்தமல்ல வென்று சுதேசமித்திரன் எழுதுகிறது. உபாத்திமார்கள் பழையகாலத்தில் பிள்ளைகள் குருகுலவாஸம் செய்தபோது பெற்ற உபசாரமும் கௌரவமும் இப்போது பெறவில்லை. அந்தத்தொழிலின் சுபாவமே இக்காலத்தில் மாறிவிட்டது. பிள்ளைகளின் க்ஷேமத்தையே கருதி உபாத்யாயர்கள் உழைப்பதில்லை. உபாத்திமாரைப் பரமகுருவென்று பிள்ளைகள் நினைப்பது மில்லை. ஆயினும், ஸன்மார்க்கத்திலும் உயர்ந்தகுணங்களிலும் ஹிந்துக்களுக்கிருக்கும் அபிமானம் இன்னும் போகவில்லையாகையால், அவர்கள் நல்லொழுக்கம், தெய்வபக்தி, தர்மசிந்தை, முதலிய ஸ்வபாவங்களுடைய ஆசாரியரைக் கனப்படுத்தி வருகிறார்கள். உதாரணமாக, கும்பகோணத்தில் ஆயிரக்கணக்காய் ஹிந்துச் சிறுவர்களைத் தயார்செய்த மிஸ்டர் போர்ட்டரையும் மிஸ்டர் கோபாலராவையும் சொல்வோம். இவ்விருவரையும் போல அங்கங்கே பல ஆசாரியர் சிறுவர்களாலும் பெற்றோர்களாலும் நன்றியுடனும் அன்புடனும் கருதப்படுகிறார்கள். உபாத்திமார்கள் இப்போது பழைய கௌரவத்தை இழந்ததற்குக் காரணம் அவர்கள் நடத்தையும் குணமுமே தவிர வேறல்ல. செல்வத்தையே மேலாகக் கருதாமல் பிள்ளைகளின் பயிற்சியையும் ஒழுக்கத்தையும் உயர்த்துவதே தங்களுடைய ஒரே கடமையென்றுணர்ந்து தொழில் செய்வார்களானால், இக்காலத்து உபாத்திமார்களும் பூர்வகாலத்து ஆசாரியரைப்போல் கனம் பெறுவார்களென்று சொல்லத் துணிவோம். என்று ஷை பத்திரிகை எழுதுகிறது.

## BOYS' SECTION.
## பையன்கள் பகுதி.

### The late General Nogi.

காலஞ் சென்ற ஜெனரல் நோகி.—அக்டோபர் மாஸப் பத்ரிகையில் ஜெனரல் நோகியைப் பற்றி ஒரு குறிப்பு ப்ரசுரித்திருந்தோம். அவரைப்பற்றிய பல கதைகள் ஜப்பானிய பத்ரிகைகளில் வெளியிடப் பட்டிருக்கின்றன. ஜப்பான் அட்வர்டைஸர் என்ற பத்திரிகையில் ஒரு நிருபர் பின்வருமாறு எழுது கிருர்.—

காலஞ்சென்ற ஜெனரல் நோகியைப் பற்றி-இப் போது நான் சொல்லப்போகிற கதையானது காலஞ் சென்ற ஜப்பானிய சக்ரவர்த்தியின் குணாதிசயங்களை இன்னு மதிகமாக விளக்குவதாகும். போர்ட் ஆர்தரில் நடந்த சண்டையில் ஜயமடைந்த பிற்பாடு ஜெனரல் நோகி டோகியோ நகருக்கு ஜய பேரிகையுடன் திரும்பினர். அந்த யுத்தத்தில் அவரடைந்த வெற்றியினல், மகா கீர்த்தியடைந்தாராயினும் ஜப்பானிய சக்ர வர்த்தியின் புத்ரர்களான ஸோல்ஜர்கள்மாண்டுபோன தைக் குறித்து வருத்த முற்று அதற்கு ஈடாகத்தனது உயிரைக் கொடுத்துவிடத் தீர்மானித்திருந்தார்.

ஜெனரல் நோகி ஜய பேரிகையுடன் பட்டணத் திற்குத் திரும்பி வருகையில் திரளான ஜனங்களாலும் காலஞ்சென்ற சக்ரவர்த்தி யவர்களாலும் வெகு குதூகலத்துடன் வரவேற்கப்பட்டார். ஜெனரல் நோகி, போர்ட் ஆர்தரில் நடைபெற்ற யுத்தங்களை விவரித்துக் கூறியதைக் கேட்க மன்னர், அவரை வெகுவாய்ப் புகழ்ந்து பேசினர். ஆனல் ஜெனரல் நோகி சிறிதும் சந்தோஷங் கொள்ளாமல் தனது அஜாக்ரதையினல் ஜப்பானிய யுத்த வீரர்கள் இறந்து போனதாகவும், அதற்காகத் தனது ஜீவனை விட்டுவிடப் போவதாகவும் கூறி அவ்விடத்தை விட்டு விலக ஆரம்பித்தார். காலஞ்சென்ற சக்ரவர்த்தி யவர்கள் அவரைப் போக வொட்டாமல் நிறுத்தி "போர்ட் ஆதரில் நடந்த கொடிய யுத்தங்களில் நேரிட்ட நஷ்டத்தைக் குறித்து உமது மனம் மிகுந்த வருத்தமுறுகிற தென்பதை நான் அறிவேன். ஆனலும், உயிரோடிருப்பதை விட இறந்துபோவது லகுவென்பதை ஞாபகத்தில் வைக்கவேண்டும். நீர் உம்முடைய ஆவியை விட்டுவிட ப்ரியப்படுவ தானல், நானிறந்துபோன பிற்பாடு நீர் அப்படி செய்து கொள்ளும்" என்று கூறினர்.

அன்பும் காருண்யமும் பொருந்திய இவ்வார்த்தை களை கண்யமும் ராஜவிச்வாஸமுமுள்ள ஜெனரல் நோகி கேட்டு தாரை தாரையாகக் கண்ணீர் சொரிந் தார். சக்ரவர்த்தியும் மனம் தளர்ந்து அழுது விட்டா ராம். ஆகையால் ஜெனரல் நோகி, சக்ரவர்த்தியின் அந்திய காலமட்டும் உயிரோடிருந்து பிறகு தற் கொலை புரிந்து கொண்டார்.

சக்ரவர்த்திக்கும் ஜெனரல் நோகிக்கும் நடந்த மேற்படி சம்பாஷணையையும், ஸம்பவங்களையும் அப் போது அங்கு கூடயிருந்த, பாரன் அக்ஸாவா என்பவர் சொல்ல, எல்லோருக்கும் தெரியவந்தது. ஜென ரல் நோகி இன்னும் சிலகாலம் ஜீவித்திருந்து தற் போதய சக்ரவர்த்தியின் கீழும் வேலைபார்த்து வரலாம். ஆனல் அவருக்குப் பழைய சக்ரவர்த்தியிடத்தி லுண் டாயிருந்த நேச ஸம்பந்தமானது நிற்க இடங் கொடுக்கவில்லை. எப்படியாயினும் அவருடைய ஞாபகம் ஜப்பானிய ஜனங்களுக்குள் என்றைக்கும் இருந்துகொண்டிருக்கும்.

### Laccadive Islands.

லட்சத் தீவுகள்:—லட்சத்தீவுகள் தென்கன்னடத் திற்கு மேற்கேயுள்ள கடலில் இருக்கின்றன. 5000 ஜனத்தொகைக்குக் குறைந்ததும் தென் கன்னடக் கரைக்கு எட்டியிருப்பதுமான கூட்டமான இச் சிறிய தீவுகளின் பெயர்களைப்பற்றி சென்னை ராஜதானியிலுள்ள ஜனங்கள் பலருக்கு ஞாபகம் இராது. அத்தீவுகளில் தென்னைமரங்களைத் தவிர வேறென்றும் பயிர் செய்கிறதில்லை. மிஸ்டர் டாய்க் அத் தீவுக்குச் சென்று பார்வையிட்டு எழுதி யனுப்பி யிருக்கும் ரிப்போர்ட்டின் பேரில், தென்னையைத் தவிர வேறு எந்தப் பயிரையும் அங்கே பயிராக்கக் கூடாதென்று சென்னைக் கவர்மெண்டார் உத்தரவு செய்திருக்கிருர்கள். கவர்மெண்டார் அத்தீவுகளை பாதுகாத்துவரும் பொறுப்பை வகித்திருப்பதால், அமினி, கமலத்து, கில்தான், செட்லாண்ட் என்ற நான்கு தீவுகளிலுள்ளவர்கள் அந்த உபகாரத்திற்கு ப்ரதியாகக் கவர்மெண்டாருக்கு இவ்வளவு நிறையளவு என்று ஏற்பட்ட தென்னங் கயிறுகளைச் ஸப்ளை செய்துவரக் கடமைப் பட்டவர்களாக இருக்கிருர் கள்.

### A Dreadful Announcement.

ஓர் பயங்கரமான அறிவிப்பு.—பிலடெல்பியாவிலுள்ள ஸர்வகலாசாலையைச் சேர்ந்த தத்வ சாஸ்த்ரியான க்யாதிபெற்ற மிஸ்டர் ஆல்பர்ட் நோபிள் என்பவர் ஐரோப்பா முழுவதும் 1972-ம் வருஷத்தில் ஸமுத்ரத்தில் மூழ்கி மறையுமென்று அறிவிக்கிறார். இது என்ன கணிதமோ சாஸ்த்ரமோ தெரியவில்லை.

### Languages of the World.

உலகத்தின் பாஷைகள்.—உலகத்தில் பேசப்படும் பாஷைகளின் தொகை 3424. இதில் 1624 பாஷைகள் அமெரிக்காவிலும், 937 ஆசியாவிலும், 587 ஐரோப்பாவிலும், 276 ஆப்ரிக்காவிலும் பேசப்படுகின்றன. இங்கிலீஷ் பாஷையை பதினைந்து கோடிஜனங்கள் பேசிவருகிறார்கள். இந்த இங்கிலீஷ் பாஷையில் அடங்கிய சொற்கள் ஆறுலட்சமாகும்.

### Centenarians.

100 வயதுள்ளவர்கள்.—இப்போது மனுஷனுக்கு ஸராஸரி வயது 80 எனக் கணக்கிடப்பட்டிருக்கிறது. ஆயினும் ஐரோப்பாவிலே நூற்றுக்கு மேற்பட்ட வயஸுள்ளவர்கள் 7000 பேரிருக்கிறார்களாம். இப்போது யுத்தம் நடக்கிற பால்கன் நாடுகளில் அதிகமாய் இருக்கிறார்களென்று சொல்லப்படுகிறது. இந்தியாவில் விசேஷமாய் அதிக உஷ்ணபாகமாகிய தென்னிந்தியாவில் மனுஷர் 60-க்குமேல் ஜீவித்தல் அபூர்வமாயிருக்கிறது.

### Newspaper Reading.

ஸமாசாரப் பத்ரிகை வாசித்தல்.—வாஷிங்டன் ஸர்வகலாசாலையைச் சேர்ந்த ப்ரொபஸர் மக்மாஹன் ப்ரிட்டன் தேசத்தில் நடந்த எலெக்ஷன் (பார்லிமெண்டில் மெம்பர்களைத் தெரிந்தெடுத்தல்) ஸம்பந்தமான ஸமாசாரம் ஒன்றுமே தம் மாணவர்கள் அறியாமல் இருப்பதைக்கண்டு அதிக கோபங்கொண்டு, தினமும் மாணவர்கள் சமாஸாரப் பத்ரிகையை வாசிக்காமல் இருக்கக்கூடாது என்பதை வற்புறுத்தி ஒரு உபந்யாஸம் செய்தார். "உலகத்தின் நாலு பாகங்களிலும் அப்போதைக் கப்போது நடந்தேறும் ஸமாசாரத்தைப் படித்தறியாதவனை நடைப்பிணம் என்றே சொல்லலாம். அவன் இருப்பதைவிட இறப்பது நலம். ஆகையால், மாணவர்களே, நீங்கள் ஒவ்வொரு நாளும் தவறாமல் ஸமாசாரப் பத்ரிகைகளைப் படித்து வாருங்கள்" என்று சொல்லி முடித்தார்.

### Sunlight is Life.

ஸூர்யவெளிச்சமும் ஜீவாதாரமாகும்.—ஸூர்ய வெளிச்சம் ஜீவகோடிகளுக்கு ரொம்ப முக்யமானது. வெளிச்சம் குறைவான ஒரு கீழறையில் ஒரு உருளைக்கிழங்கை நட்டுப் பாருங்கள். ஸ்வல்ப வெளிச்சமிருந்தால் அதுமுளைத்து வளர ஆரம்பிக்கும். ஆனால் அதற்கு வெளிச்சமே யில்லாமல் செய்துவிட்டால் அது தன் ஆகாரத்தை ஸரிவர உட்கொண்டு வளர முடியாது. செடியானது ரொம்ப நறுங்கலாகவும், வெளுத்துப்போயுமிருக்கும். ஸூர்ய வெளிச்சமில்லாமல் போனால் செடியின் உணவு ஜீர்ணமாகி செடி வளர முடியாது. செடிக்குள்ளது போலவே, ப்ராணிகளுக்கும், மனிதர்களுக்கும், ஸூர்ய வெளிச்சம் ரொம்ப முக்யமானது. ஸூர்ய வெளிச்சம் தேசத்தில் அதிகப்படும்படி வஸிப்பவர்கள் நல்ல தேகவளர்ச்சி யுள்ளவர்களாய், பலமுள்ளவர்களாகவும், ஸுகதேகிகளாகவும் இருக்கிறார்கள். அப்படி ஸூர்ய வெளிச்சம் அதிகம் பெறாமல் வீட்டிலே அடைந்திருப்பவர்கள் தேகம் வெளுத்தும், ரக்தக்குறைவாயும் சுறுசுறுப்புக்குறைவாயும் இருப்பார்கள். இதற்காக கோடைகாலத்தில் பகலில் வெயிலில் அலையக்கூடாது.

### The Civilization of the Dravidians.

த்ராவிடர்களின் நாகரீகம்.—ஸமீபத்தில் ஸ்வாமி வேதாசலம் என்பவர் "த்ராவிடர்களின் நாகரீகம்" என்னும் விஷயமாக ஒரு ப்ரஸங்கஞ் செய்தபோது 4000 வருஷங்களுக்கு முன்னாலிருந்த த்ராவிடர்கள் வடதேசத்திலிருந்த ஆரியர்களைவிட நாகரீகத்தில் சிறந்தவர்களாயும் கடவுள் ஒருவர் இருக்கிறாரென்பதை நம்பினவர்களாயுமிருந்தார்களென்றும், கடவுளால் ச்ருஷ்டிக்கப்பட்ட எந்த ஜீவராசிகளிடத்தும் பக்ஷமுடனிருப்பதே உத்தம தர்மமென அவர்கள் நினைத்து அதன்படியே நடந்து வந்தார்களென்றும் சொன்னதோடு, தாவரசாஸ்த்ரம், ப்ராணி தத்வ சாஸ்த்ரம், மனஸ்தத்வ சாஸ்த்ரம் முதலிய சாஸ்த்ரங்களை அவர்கள் நன்கு யறிந்திருந்தார்களென்றும், அஸிரியா முதலிய வெகு தூரத்திலுள்ள இடங்களோடு வ்யாபாரம் நடத்தி வந்தார்களென்றும் சொன்னார். பேர்போன புராதன க்ரீக் சரித்ர ஆசிரியரான ஹெராடட்டஸ் தென்னிந்தியாவுக்கு வந்து தத்வஞானத்தைக் கற்று பிறகு மாம்ஸ போஜனஞ்செய்வதை விட்டு சாகபக்ஷிணியாகவே இருந்து வந்தாரென்று தெரிகிறதென்றும் அவர் சொன்னார்.

# LADIES' SECTION.
## ஸ்த்ரீகள் பகுதி.

### The Sad Fate of a Hindu Widow.

ஒரு ஹிந்து விதவையின் துக்கமான முடிவு:—ஸிந்து மாகாணத்தில் ஒரு ஹிந்து விதவை தன் தேகத்தில் கெரொஸின் எண்ணெயை ஊற்றி நெருப்பு மூட்டிக்கொண்டு இறந்துபோனாளென்று அறிவிக்கப்படுகிறது. அவளுடைய பந்துக்கள் அவளுடைய மைத்துனனைக் கல்யாணம் செய்யும்படி கட்டாயப்படுத்தினார்களாம். அவள் இஷ்டப்படாமல் அவர்களுடைய தொந்தரை பொறுக்காமல் இப்படிச் செய்தாள் என்று சொல்லப்படுகிறது. அவளுடைய பந்துக்களில் சிலர் கைதி செய்யப் பட்டுக் குற்றம் சாட்டப்பட் டிருக்கிறார்களாம்.

### Infant Mortality.

சிசுக்களின் மரணம்:—அடுத்த ஆகஸ்டு மாதம் 4-ந்தேதி லண்டனைச் சேர்ந்த வெஸ்ட்மின்ஸ்டரில் நானஷல் அஸோஸியேஷனது ஆதரவில் சிசுக்களின் மரணங்களைப்பற்றி ஒரு கான்பரென்ஸ் நடக்கப் போகிறது. அந்த கான்பரென்ஸுக்கு இந்தியாவிலிருந்து ப்ரதிநிதிகளை யனுப்புவதாய் உத்தேசமுண்டாவென்று இந்தியா மந்திரி இந்தியா கவர்ன்மெண்டைக் கேட்டு விட்டிருக்கிறபடியால், அந்த விஷயம் இப்போது அந்த கவர்ன்மெண்ட் கல்வி இலாகாவில் ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

### A Shameful Act.

ஒரு அவமானமான செய்கை.—சேலம் கல்லாங்குத்துத் தெருவிலுள்ள 4 பெண்கள் சேர்ந்து, ஷை தெருவிலுள்ள கோவிந்தம்மாள் என்பவள் நிர்வாணமாக ஒரு தெருவை சுற்றிவரும் பட்சத்தில் தாங்கள் இனாமாக ஒரு புதுச்சேலை கொடுப்பதாகப் பந்தயம் பேசியதாகவும், அதன்பேரில் ஷை கோவிந்தம்மாள் நாளது௴ 11௳ யன்று பகல் 11-மணிக்கு நிர்வாணமாகத் தெருவைச் சுற்றி வரும் ஸமயத்தில் போலீஸாரால் கண்டுபிடிக்கப்பட்டு சார்ஜ் செய்யப்பட்டிருப்பதாகவும் தெரிகிறது. என்ன கண்ட்ராவியிது. பந்தயங்கூறிய 4 ஸ்திரீகளும் சேலையும் அளித்து விட்டார்கள். தி. வி.

### Too Much Salt.

அதிக உப்பு.—ரஸம் அல்லது குழம்பில் உப்பு அதிகமாயிருந்தால், அதைப் போக்கடிப்பதற்கு பின்வரும் வழியை ஒருவர் சொல்லுகிறார். ரஸம் அல்லது குழம்பு இருக்கும் பாத்ரத்தின் வாயை ஒரு சுத்தமான துணியால் நன்றாய்க் கட்டி அந்தத் துணியின் மேல் ஒரு பிடி மாவு தூவி பாத்ரத்தைச் சற்றுநேரம் அடுப்பில் வைத்திருந்தால் அதிலிருந்து கிளம்பும் ஆவியை மாவு க்ரகிப்பத்தால் அதிகமாயிருக்கும் உப்பு நீங்கிவிடும். ஸாதாரண வழக்கம் என்னவென்றால், சிறிது அன்னத்தைப் பிசைந்து உருட்டி பாத்ரத்துக்குள் போட்டுவிடுவது.

### Bridegroom Price.

வரதக்ஷிணை.—ஸமீபத்தில் திருவாதியில் நடந்த பண்டித பரிஷத்தில் மைஸூர் ஸமஸ்தானத்து ஆர்க்கலாஜிகல் பண்டிதர் ஓர் விஷயம் சொன்னார். அதாவது, சென்னப்பட்டணத்திற்கு அருகாமையில் விஷ்ணுபுரமென்ற ஒரு ஊரில் ஒரு கல்லில் சில விஷயங்கள் வரையப்பட்டிருக்கின்றனவாம். அதில் இப்போதைக்கு 175 வருஷங்களுக்கு முன்னால் இப்போது போலவே வரதக்ஷிணை கேட்க ஆரம்பித்து, அது நாளுக்குநாள் அதிகப்படவே, அந்த ஹிம்ஸை பொறுக்கமாட்டாமல் தக்ஷிண தேசத்தார் முழுமையும் ஒரு கூட்டம் கூடி இனிமேல் வரதக்ஷிணை யாராவது கேட்டால் அவனை நமது மண்டலத்திலிருந்து வெளியேற்றி விடவேண்டும் என்று அந்த ஸபையில் தீர்மானம் செய்யப்பட்டது என்று எழுதப்பட்டிருப்பதாய் ஒரு வ்யாஸம் வாசித்தார்.

### A College for Women in Jaffna.

யாழ்ப்பாணத்தில் ஒரு ஸ்த்ரீகள் காலேஜ்.—லங்கைலெஜிஸ்லேடிவ் கௌன்ஸில் மெம்பராகிய ஆனரபில் மிஸ்டர். பி. ராமநாதன் அவர்கள் யாழ்ப்பாணத்தில் ஸ்த்ரீகள் காலேஜ் ஒன்று ஸ்தாபித்திருக்கிறார். அந்தக் காலேஜின் வித்யாரம்பக் கொண்டாட்டம் சென்ற ஜனவரி௴ 20௳ யன்று நடைபெற்றது. கலாசாலையிலே தங்கியிருந்து வாசிப்பவர்களாக (போர்டர்கள்) ஸுமார் 60பேரும், கலாசாலையிற் எப்பொழுதும் தங்கியிராமல், கல்வி கற்கமாத்ரம் செல்பவர்களாக ஸுமார் 20 பேரும் அன்று வந்திருந்து பாடம் படிக்க ஆரம்பித் [illegible] ந்தக்கொண்டாட்டங்கள் முடிந்தபி [illegible] ம் யாழ்ப்பாணத்து கனவான்கள் [illegible] பசரிப்பதற்காக ஒரு

மீட்டிங்கு நடத்தி அவர் ஸ்த்ரீகள் காலேஜ் ஸ்தாபித்த தற்காக அவருக்கு நன்றி செலுத்தினர்கள்.

அந்தக்காலேஜ் தண்ணீர் வஸதியும் காற்று வஸதியு முள்ள ஒரு இடத்தில் கட்டப்பட்டிருக்கிறது. சிறந்த உபாத்யாயர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

அந்தக் காலேஜில் ஸீனியர் லோகல், லண்டன் மெட்ரிகுலேஷன், பி. எ., முதலிய பரீக்ஷைகளுக்கு மாணவர்கள் தயாராக்கப்படுவார்கள் என்று தெரிய வருகிறது.

## The Cleverness of a Montenegrin Girl.

ஓர் மாண்டி நீக்ரோ பெண்ணின் சமர்த்து:— மாண்டிநீக்ரோ என்கிற இடத்திலுள்ள போர்ஷியா என்ற ஓர் பெண் தனக்கு ஒரு கணவனைத் தெரிந்து கொள்ளும்படி குறித்த தினத்தில் மூன்று வாலிபரை தன்னிருப்பிடத்திற்கு வரும்படி உத்தரவு கொடுத் திருந்தாள். அப்படியே அவர்கள் வரும் நேரத்தில் யாரும் உள்ளே நுழைய முடியாதபடி தான் வாசற் படியில் நின்று கொண்டாள். முதலாவது வந்தவன் அதிக விநயத்துடன் அவள் முன்வந்து தயவு செய்து எனக்கு உள்ளே போக வழிவிடு என்று கேட்டான். அவள் ஒருபக்கம் தள்ளிக்கொண்டு அவனுக்கு இடங் கொடுத்தாள். அவன் உள்ளே போகும்போது நீர் எனக்கு ஒருபோதும் கணவனாவதில்லை, என்று தன் வாய்க்குள்ளே சொல்லிக்கொண்டாள். இரண்டாவது மனிதன் ஒரு குடிபானவன். அவன் அவளைப் பார்த்து எனக்கு உள்ளே போகவழிவிடு என்று கேட் டான். அவனுக்கும் அப்படியே வழிகொடுத்து அவ னும் தனக்குக் கணவனாகப் போகிறதில்லை என்று தன் மனதிற்குள்ளே சொல்லிக்கொண்டாள். மூன்றா வது மனிதனோ அதிக கர்வத்துடன் தன் தலையை நிமிர்த்திக்கொண்டு அவளிடத்தில் ஒரு வார்த்தையும் பேசாமல், அவள் கையைப் பிடித்து அவளை ஒரு பக்கம் தள்ளிவிட்டு அவனே அவ்வீட்டு எஜமான் என்று சொல்லத்தக்கதாக அவ்வளவு தைர்யத்துடன் உள் நுழைந்தான், உடனே அப்பெண்ணும் "இவனே ஸரியான மாண்டிநிக்ரேயன், இவனே என்னுடைய கணவன்" என்று சொல்லி அவனைத் தனக்கு கணவ னாக வரித்துக் கொண்டாள்.

## Sale of Babies.

குழந்தைகள் விற்ப[illegible]மெரிக்கா கண்டத் தில் யுனைடெட் [illegible] ந்யூயார்க் நகரத்தில் நூற்றுக்கணக்கான குழந்தைகள் ஒவ் வொரு வருஷமும் விற்கப்படுகின்றனவென்று தெரியவருகிறது. குழந்தைகளின் விலை சில ஷிலி ங்கு (ஒருஷிலிங்கு 12 அணா) முதல் சில பவுன்வரை யிலுமாய் இருக்கிறது. அந்த தேசத்துச் சட்டப் படிகுழந்தைகளை விற்பது கொடிய குற்றமாகும். ஆ னல் குழந்தை விற்பவர், தாம் குழந்தையைக் கொண்டுவந்து கொடுப்பதற்காக பணம் அடைந்ததா கும் தமச்குக் கொடுக்கப்பட்ட பணம், தாம் எடுத் துக்கொண்ட ச்ரமத்துக்கேயொழிய, குழந்தையின் க்ரயமாக வாங்கினதல்லவென்று ஸத்யம்செய்து விட்டால் அவர்களை குற்றம் சாட்ட முடியாது. குழந்தை விற்பனை விஷயமாக சிகாகோ, பிலடெல் பியா, போஸ்டன் முதலிய இடங்களிலும் பத்ரி கைகளில் விளம்பரங்கள் காண்கிறபடியால் ந்யூ யார்க்கில் காணப்படுவதுபோலவே குழந்தை வ்யாபா ரம் அவ்விடங்களிலும் நடக்கிறதென்றும், குழந்தை களின் விலை ந்யூயார்க்கைப் போலவே குறைவா யிருக்கிறதென்றும் ஊகிக்க வேண்டியிருக்கிறதாம்.

இந்த வ்யாபாரத்தைக் கைக்கொண்டிருக்கும், ஒரு ஜர்மானிய விதவை ந்யூயார்க்கில் வஸிக்கிறாள். அவள் இந்த வேலையைக் கைக்கொண்டது முதல் நூற் றுக் கணக்கான குழந்தைகளை விற்றிருக்கிறாளாம். எந்த ஜாதி வேண்டுமானாலும் ஸரி, வாங்குவோர் என்னநிறமுள்ள கண்களும், மயிரும் உள்ள குழந்தைகள் வேண்டு மென்றாலும் ஸரி, அப்படிப் பட்ட குழந்தைகளைக் கொண்டு வந்து கொடுக் கிறாள். அவள் தான் எடுத்துக்கொண்ட தொழில் ந்யாயமானதென்றும், காருண்யமானதென்றும், குழந் தைகளுக்கும், வளர்க்கும் பெற்றோர்களுக்கும், ஜன ஸமூகத்துக்கும் உபகாரமான தென்றும் சொல் லுகிறாள். குழந்தைகள்ஸங்கத்து இன்ஸ்பெக்ட் டர்களும் ஹெல்த் போர்டு இன்ஸ்பெக்டர்களும், இவளுக்கு நல்ல ஸர்ட்டிபிகேட்டுகள் கொடுத்திருக் கிறார்களாம். ஹாஸ்பிடல் அதிகாரிகள் இந்தக் குழந்தை வ்யாபாரத்தை ந்யாயமானதென்று ஒப்புக் கொள்ளவில்லை ஆனல் சில ஸூபரிண்டெண்டு கள், இப்படிக் குழந்தைகளை விற்கும் மார்க்கங்களை யெல்லாம் நிறுத்திவிட்டால், துரபாக்கிய முள்ள தாய்கள் பெற்ற குழந்தைகளைக் கொல்லும்படி நே ரிடுமென்றும், சிசு ஹத்தி அதிகரிக்கும், என்றும் சொல்லுகிறார்கள்,

# AGRICULTURE.
## விவஸாயம்.

**Cholam.**

சோளம்.—சோளப்பயிர் வதங்கி இருந்து மாடு மேய்ந்தால் விஷமேறி மாடுகள் சாவதுண்டு. அப்படியே மொச்சை, நரிப்பயிர் முதலியவைகளிலும் உண்டாகிறது. ஆடுகளும் வெயில் சாலத்தில் வதக்க மேய்ச்சலால் சாவதுண்டு. இது விஷத்தாலொழிய வேறல்ல. இந்த விஷம் கசப்பு பாதாங் கொட்டையிலுண்டு. ஒரு ராத்தல் தீவனத்தில் ஒரு குன்றிமணி யெடை ஒரு மாட்டைக்கொல்லும். இவ் விஷத்தை ஒழிப்பதற்கு வெல்லம் ஆடுகளுக்கும் மாடுகளுக்கும் அக்காலத்திலும் சமயத்திலும் கொடுப்பது நல்லது. தெ. வி.

**The Electric Farmer.**

**மின்ஸாரத்தை உபயோகிக்கும் விவஸாயி.**—இந்தியாவில் விவஸாய வேலைகளெல்லாம், அநேகமாய் மாடுகளாலும் மனிதர்களாலும் செய்யப்படுகின்றன. நீராவியந்த்ரங்களால் விவஸாய ஸம்பந்தமாய் வேலை நடப்பது சில இடங்களில்தான் ஸாத்யமாகிறது. பணக்கார விவஸாயிகள் தான் நீராவியந்த்ரங்களை உபயோகிக்கிறார்கள். இந்த நீராவியந்த்ரங்களே நம்மில் சிலருக்குப் புதியவைகளா யிருக்கின்றன. அமெரிக்காவிலோ தந்தி, டெலிபோன், எலெக்ட்ரிக் வெளிச்சம், முதலியவைகளுக்கு உபயோகப்படுத்தும் மின்ஸாரத்தை விவஸாயஸம்பந்தமான வேலைகளுக்கு ஏற்பாடுசெய்து வருகிறார்கள். விவஸாயஸம்பந்தமான எல்லா வேலைகளையும் மின்ஸார யந்த்ரத்தால் நடத்திவருகிறார்கள். ஜலம் இறைத்தல், போர் அடிக்கும் யந்த்ரங்களை யோட்டல், மரம் அறுத்தல், எலும்பைப் பொடியாக்சல், காய்ந்த புல்லைக் கட்டிவைத்தல், வெளிச்சம் உண்டு பண்ணுதல், நூதனயந்த்ரங்களால் பசுபால் கறத்தல், தயிர்கடைதல், வண்டியோட்டுதல் மரவேலை செய்தல், ரிபேர் செய்தல், முதலிய எல்லா வேலைகளையும் மின்ஸாரசக்தியினால் செய்தல் ஸாத்தியமாகும்படி யந்த்ரங்கள் அமைத்திருக்கிறார்கள். விவஸாயினுடைய மனைவியும், தன்னுடைய கார்யங்களாகிய சமைத்தல், துணிதுவைத்தல், இஸ்திரிபோடுதல், தையல் வேலை முதலிய எல்லாவேலைகளையும் மின்ஸாரத்தின் உதவியால் செய்து கொள்ளலாம். இந்த விஷயத்தை அமெரிக்கா ஜனங்களுக்குத் தெரிவிக்க ஒரு கம்பெனியார் தங்கள் ஏஜெண்டுகளை, ஸர்க்கஸ் ஊர்ஊராய்ப்போய் ஜனங்களுக்கு ஆடிக்காண்பிப்பதுபோல, மின்ஸாரயந்த்ரங்களையும் அவைகளின் உபயோகத்தையும் ஊர்ஊராய்ப்போய் ஜனங்களுக்குக் காண்பிக்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இவைகளை உத்தேசிக்கும்போது நமது இந்தியர்கள் விவஸாயவிஷயத்தில் ரொம்ப பின் தங்கியிருக்கிறார்கள் என்பது விளங்குகிறது.

**Appearance in Seed.**

விதைகளின் தோற்றம்.—பொதுவாய் நல்ல விதைகளுக்கு, முக்யமாய் தான்ய விதைகளுக்கு, சில அடையாளங்களுண்டு. அவைகளில் நிறை, உருவம், தோற்றம் அதாவது பார்வைக்கு எப்படியிருக்கின்றன என்பது இவைகளை கவனிக்கவேண்டும். இவைகளை அடிக்கடி அலக்ஷ்யம் செய்து விடுகிறார்கள். நிறத்தைப்பற்றி கவனிக்கவேண்டியது அவ்வளவு அவச்யமில்லை. கண்ணுக்கு லக்ஷணமா யில்லாமலும்,ஸரியான உருவமில்லாமலும் இருக்கிற விதை நன்றாய் முளைத்து ஸுமாரான பலன் கொடுத்தாலும், அதை உபயோகிப்பது அவ்வளவு உசிதமல்ல. அப்படிமெலிந்திருக்கும் விதையிலிருந்து உண்டாகும் தான்யம் மாவரைப்பவனுக்காக கட்டும், சாப்பாட்டுக்காக வாங்குபவனுக்காகட்டும், பருத்துப் பார்வைக்கு நன்றாயிருக்கும் தான்யத்தைப்போல அவ்வளவு த்ருப்திகொடுப்பதில்லை. போட்ட விதை மாதிரியாகவே பலனும் கிடைப்பது ஸகஜமாதலால் நல்ல லக்ஷணங்கள் பொருந்திய விதை மெலிந்த விதையைவிட நல்லவிலைப்போகக் கூடியமாஸுலைக் கொடுக்குமென்று நினைப்பது நியாயமானதுதான்.

**Thinning Fruit.**

பழங்களின் அடர்த்தியைக் குறைத்தல்.—பழமரங்கள் வைத்து வ்ருத்திசெய்பவன் மரங்கள் கூடிய சீக்ரத்தில் காய்க்கவேண்டுமென்று விரும்புவது இயல்பு. ஆனால் மரங்களை நட்டுப்பயிர்செய்து கொஞ்சகாலமாவதற்குள்ளேயே காய்க்க விடுவதும், ஸரியானபடி காய்க்கத் தொடங்கின பிறகு ஏராளமாய்க் காய்க்க விடுவதும், நல்லதல்ல. சீக்ரம் காய்க்க ஆரம்பித்தால் மரம் நன்றாய் வளராமல் ரொம்பகாலம் குட்டையாய் நருங்கலாக இருந்து விடுகிறது. அதிகம்

காய்க்கவிட்டால் அந்தப் பருவத்துக்கு அடுத்த பருவத்தில் குறைச்சலான பலனாவது அல்லது பலனே இல்லாமலாவது போய்விடுகிறது. மரத்தின் ஸ்திதியையும், அந்தப் பழராசியின் காய்க்கும் தன்மையையும் நன்ருய் அறிந்து, காய்கள் சிறியவையாயிருக்கும்போதே எத்தனை பிஞ்சுகள் மரத்திலிருக்கலாமோ அத்தனை மரத்தில் விட்டுவிட்டு மற்றவைகளைப் பறித்துவிடவேண்டும். இப்படிச் செய்வதால் வெறும் எண்ணிக்கைக்கு இத்தனைப்பழம் இருக்கிறதென்பதற்குப் பதிலாக பழம் ரொம்ப ச்லாக்யமாக உண்டாகும்.

### Preparation of Seed Bed for Rice.

நெல்பயிருக்கு நாற்றங்காலைப் பண்படுத்தல்.—பம்பாய் விவஸாய டிபார்ட்மெண்டாருடைய ரஸாயன சாஸ்த்ரியின் 1908-09-ம் வருஷத்து ரிபோர்ட்டில் நாற்றங்காலை நெல்பயிருக்காகப் பண்படுத்தும் விதத்தைப்பற்றி சிறிது சுருக்கமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த முறையாவது, மழை சாலத்துக்கு கொஞ்சம் முன்னல் நாற்றங்காலில் மரங்களின் கிளைகள் கொம்புகள் காய்ந்த சருகுகள் முதலியவைகளை யாவது சாணத்தையாவது கொளுத்துவதே. இதனல் நிலத்தில் மூன்று மாறுபாடுகள் உண்டாகி நிலம் நன்ருய் விளைகிறது. அந்த மாறுபாடுகள் பின்வருமாறு:—(1) நிலத்திலுள்ள பாக்டீரியாவின் எண்ணிக்கையும் விகிதமும் மாறுபடுகிறது. (2) மண்ணிலுள்ள நைட்ரொஜன் ஸம்பந்தமான பொருள்களில் அதிகபாகம் கரையக்கூடிய தன்மையை அடைகிறது. (3) மண்ணின் தன்மை ரொம்ப வ்ருத்தி யடைகிறது.

### Manuring the Mango.

மாமரத்துக்கு எருவிடுதல்.—இரண்டு மூன்று வருஷத்துக் கொருதடவை ஜூலை ஆகஸ்டு மாதங்களில் நன்ருய் மட்கின குப்பை எரு மாமரத்துக்கு வைப்பதால் பலன் அதிகரிக்கிறதாம். ஆனல் குப்பை எரு அதிகம் போட்டால் பழங்களின் ராசியை (குணத்தைக்) குறைத்து விடுகிறதாம். மட்கிப் பூஞ்சணம் பூத்த தழை எரு மாமரத்துக்கு எப்போதும் ச்லாக்யமான எரு. நீர்பாய்ச்சப்படாத மரங்களுக்கு மழை பெய்தபிறகு காரமான எரு விட்டால் சில ஸமயங்களில் மரங்கள் பட்டுப்போவதுமுண்டு.

### Cotton Seed Selection.

பருத்தி விதை சேகரித்தல்.—பருத்திவிதை சேகரிப்பதில் கவனிக்கவேண்டிய முக்யவிஷயங்களில் சில பின்வருமாறு.

(1) பருத்திச்செடி யாதொரு நோயுமில்லாமல் இருக்கவேண்டும்.

(2) செடி நல்ல வளர்ச்சியுள்ளதாயிருக்கவேண்டும். ரொம்ப உயரமாக இருக்கக்கூடாது.

(3) செடியில் பருத்திக்காய்கள் ஏராளமாயும் கிளைகளில் நுனிவரையிலுங் கூடக்காய்த்து மிருக்க வேண்டும்.

(4) காய்கள் பெரியவையாயிருப்பதோடு நன்ருய் வெடிக்கவேண்டும். நன்ருய் வெடித்தால்தான் பருத்திச்சுளைகள் நன்ருய் முற்றிப் பறிப்பதற்கு லகுவாயிருக்கும்.

(5) ரொம்ப ச்லாக்யமான காய்கள் வெடித்ததிலிருந்து தான் பருத்தி விதைகள் பொறுக்கவேண்டும். சீக்ரத்தில் வெடித்த பருத்தியிலிருந்து விதையெடுத்தல் நல்லதல்ல. ஏனென்ருல் அவைகள் நன்ருய் முற்ருதவை. முதல் இரண்டு தடவைகளில் பொறுக்கின விதைகள் ரொம்ப ச்லாக்யமானவைகளாகும்.

### Cocoanut Cake and Milch Cows.

தேங்காய்ப் பிண்ணுக்கும் கறவைப்பசுக்களும்.—அதிக பாலும் வெண்ணெயும் கிடைப்பதற்காக கறவைப்பசுக்களுக்கு தேங்காய்ப் பிண்ணுக்கைத் தீனியாக வைப்பது நல்லதா என்பதை அறியும்பொருட்டு இங்கிலாந்தில் வை என்னும் பட்டணத்திலுள்ள ஸௌத் ஈஸ்டர்ன் அக்ரிகல்சரல்காலேஜ் பண்ணையில் சென்ற 1911-ம் வருஷம் ஏப்ரல் மே மாஸங்களில் பரீக்ஷைகள் நடத்திப்பார்த்தார்கள். இரண்டு மாஸத்திற்கு முன் கன்று போட்டிருந்த மூன்று பசுக்களைத் தெரிந்தெடுத்து அவைகளுக்கு 15-நாள்வரையில் ஸாதாரண தீனிபோட்டு வந்தார்கள். அதற்குப் பிறகு தேங்காய்ப் பிண்ணுக்குக் கலந்ததீனி கொடுத்தார்கள். முதலில் ஒரு நாளுக்கு ஒரு மாட்டுக்கு 2 ராத்தல் வீதம் கொடுத்து படிப்படியாக உயர்த்தி தினமொன்றுக்கு மாடு ஒன்றுக்கு 6-ராத்தலாககொடுத்தார்கள். இப்படியாக மொத்தத்தில் மூன்று வாரம் தேங்காய்ப் பிண்ணுக்கு கலந்ததீனி மாடுகளுக்குக் கொடுக்கப்பட்டது. அதற்குப்பிறகு தேங்காய்ப்பிண்ணுக்கை நிறுத்தி ஸாதாரண தீனிபோட்டு ஒருவாரம் அதுகொடுக்கும் பலனைகவனித்து வந்தார்கள். தேங்காய்ப் பிண்ணுக்குப்போட்டதில் பாலின் அளவும் தன்மையும் வெண்ணெயும் ரொம்ப மாறுதலடையவில்லை என்று தெரியவந்தது. ஸ்வல்பகாலமே பரீக்ஷை நடத்தினதாலும், அதிக பசுக்களைப் பரீக்ஷிக்காததினுலும், நிச்சயமாய் ஒன்றும் தீர்மானிக்க முடியவில்லையாம். ஆனல் தேங்காய்ப் பிண்ணுக்கை தீனியாய்க் கொடுத்ததில் வெண்ணெய் ரொம்ப கெட்டியாக ஆயிற்றென்று தெளிவாய்த் தெரிகிறது. உஷ்ணகாலங்களில் கெட்டியான வெண்ணெயெடுப்பது கஷ்டமாயிருப்பதால் இதை உத்தேசித்து தேங்காய்ப் பிண்ணுக்கு ரொம்ப உபயோகமாயிருக்குமென்று சொல்லப்படுகிறது.

# COMMERCE.

## வ்யாபாரம்.

### Ghee Trade.

நெய் வ்யாபாரம்.—சென்னப்பட்டணம் புரசை வாக்கத்தில் இரண்டுபேர்கள் வந்து நெய் நெய் என்று வாசலில் கூச்சல் போட்டார்கள். ஒரு வீட்டுக்காரர் கூப்பிட்டு நெய் என்ன விலை என்று கேட்டு வீசை 2-0-0 வீதம் பேசி வாங்கினர். வாங்கினபோது நெய் வாசனையும் மணல் மணலாயும் பார்வைக்கு நன்றாயும் நாக்குக்கு ருசியாயும் இருந்தது. பிறகு 2-தினம்கழித்து நெய்யை அடுப்பில் வைத்துக் காய்ச்சினவுடன் சொட சொடப்புடன் மஞ்சள் நிறமடைந்து நாற்றக்கடலை யெண்ணெயைப் போலும் பச்சிலைச் சாறுபோலும் இருந்தது. ஆகையால் வாசலில் வருகிற நெய்யைக் கரண்டியில் விட்டுக் காய்ச்சி வாங்க வேணும் என்று அவர் சுதேசமித்திரனில் எழுதுகிறார். நெய்யில் செய்யக் கூடிய பித்தலாட்டம் இவ்வளவென்று சொல்லமுடியாது.

### Investment of Reserve Fund.

ரிஸர்வு பண்டை வட்டிக்குப் போடுதல்.—ஒரு கம்பெனியின் ரிஸர்வு பண்டை தனியாக வட்டிக்குப் போடுதல் எப்பொழுதும் உசிதமானதா? இது விஷயமாய் நிபுணர்கள் எல்லா ஸந்தர்ப்பங்களுக்கும் ஒரே விதமான நிபந்தனை ஏற்படுத்துவது முடியாது; அந்தந்த கேஸுக்குத் தகுந்தபடி செய்துகொள்ளவேண்டும் என்கிறார்கள். உதாரணமாக, ஒரு கம்பெனி நூற்றுக்கு 3-வீதம் வட்டிவருகிற இடங்களில் அதிக தொகையைப் போட்டு, டிபென்சர் அதாவது சொத்தின் மேல் வாங்கும் கடன்களுக்கு நூற்றுக்கு 5-வீதம் வட்டி கொடுப்பது நல்லதல்ல. ஒரு தொழில் கம்பெனி, தனது மீதப்பணத்தை ஸ்வல்பவட்டி வருமிடங்களில் போடாமல், அதற்கு வேலைக்கு வேண்டிய ஸாமான்களை ரொக்கவிலை கொடுத்து வாங்கி அதிக டிஸ்கௌண்டு அடையக்கூடும். இந்த வழக்கத்தைத் தவறாமல் அனுஸரித்து வந்தால் வெளியில் கொடுக்கவேண்டிய கடன் ஒருபோதும் அதிகமாயிராது. மேலும் ரொக்கப்பணம் கொடுத்து வாங்குவதில் அநேக ஸௌகர்யங்கள் இருக்கின்றன. ஏன்னவென்றால் விற்கும் வ்யாபாரி கடன் கட்டாக விற்பதில் திரும்பிவராத கடன்கள் ஏற்படுமென்று தெரிந்து ரொக்கவிலை கொடுத்து வாங்குபவனுக்கு ஸௌகர்யமாக விற்கிறான். ரிஸர்வுபண்டை தனியாக வட்டிக்கோ அல்லது லாபம் தரும் இடங்களிலோ போட்டால், அப்படிப் போடப்பட்ட இடங்கள் ஸரியாய் இருந்து வருகின்றனவா என்று கவனித்து வரவேண்டும். ஏனென்றால் வேறு கம்பெனிகள் முதலியவற்றில் போட்டிருந்தால் அவைகளினுடைய பங்குகளின் விலை குறைந்து போகக் கூடும். அதனால் ரிஸர்வ்பண்டு குறைந்துபோய் நஷ்டம் வரும்.

### The Export Trade in Oil Cake.

பிண்ணாக்கு ஏற்றுமதி.—பம்பாய் கவர்ன்மெண்டின் விவஸாய ரஸாயன சாஸ்த்ரியாகிய டாக்டர் ஹாரோல்ட் மான் என்பவர் பிண்ணாக்கின் ஏற்றுமதி ஸம்பந்தமாக உள்ள ஒரு ஆபத்தை எடுத்துக் காட்டுகிறார். தற்காலம் இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்யப்படுகிற பிண்ணாக்கில் அதிகபாகம் இங்கிலாந்துக்கும் ப்ரான்ஸுக்கும் போய் அங்கே கால்நடைகளுக்கு வேண்டிய உணவு செய்வதில் உபயோகப்படுகிறது. ஆமணக்கின் பிண்ணாக்கு விஷமானதால் அது கால்நடைகளுக்கு உணவாக உபயோகப்படாமல் நிலத்துக்கு எருவாக மாத்ரம் உபயோகப்படுத்தப் படுகிறது. மற்ற எல்லாப் பிண்ணாக்கும் கால்நடைகளுக்கு தீனியில் உபயோகப்படுகிறது. இதனால் ஏற்றுமதி செய்யப்படும் பிண்ணாக்கு லிவர்பூலுக்காவது மார்ஸேயில்ஸுக்காவது வரும்போது நல்ல ஸ்திதியிலிருப்பதோடு பூஞ்சணம் பிடிக்காமலும் இருக்கவேண்டியது அவச்யமாகிறது. ஆனால் பம்பயில் உண்டாகிற பிண்ணாக்கில் ரொம்ப ஈரம் இருக்கிறதாகவும் அதனால் ஐரோப்பாவுக்குப் போகும்போதே பூஞ்சணம் பூத்துப்போய் அதுபோய்ச் சேருகிற இடத்தில் அதிகம் உபயோகப்படாமல் போக நேரிடுகிற தென்றும் தெரியவருகிறது. பிண்ணாக்குப் பூஞ்சணம் பூப்பதற்குக் காரணம் முக்யமாய் அதில் அதிக ஈரம் இருப்பதே. இதைத் தடுப்பதற்கு பிண்ணாக்கை கூடியமட்டும் ஈரமில்லாமலும் ஜாக்ரதையாகவும் மூட்டை கட்டியனுப்பவேண்டும். சில வருஷங்களுக்கு முன்னால் இந்த தேசத்துக்கும் ஐரோப்பாக் கண்டத்துக்கும் பிண்ணாக்கு வ்யாபாரம நன்றாய் நடந்துகொண்டிருந்தது. வ்யாபாரம் நன்றாய் நடக்கவே, பிண்ணாக்கு எடுப்பவர்களும் கப்பலில் ஏற்றுமதி செய்கிறவர்களும், பிண்ணாக்கின் ஸ்திதி எப்படி இருக்கிறதென்பதை கவனிக்காமல் அலக்ஷியமாயிருக்கத் தலைப்பட்டு ஐரோப்பாவில் வாங்குபவர்கள் அதிகமாயில்லாமல் போயிற்று. அதனால் பிண்ணாக்குவ்யாபாரம் ரொம்பக் குறைந்து போயிற்று என்று டாக்டர்மான் சொல்லுகிறார். மறுபடியும் இந்த வ்யாபாரம் புதிதாய் ஆரம்பித்திருக்கிறபடியால் இந்த வ்யாபாரத்தில் அக்கரை யுள்ளவர்கள் பிண்ணாக்கை ஜாக்ரதையாய் கவனித்து நல்ல சரக்காய் ஏற்றுமதி செய்யவேண்டும்.

# INDUSTRY.
## கைத்தொழில்.

**Weaving.**

நெசவு:—நெசவுக்காரர்களுக்கு மிகவும் உபயோகமுள்ளதாகக் காணப்படுகிற மிஸ்டர் பாம்பிரேயால் செய்யப்பட்ட கைத்தறியை உபயோகிக்கும் விதத்தைச் சொல்லிக் கொடுப்பதற்காகப் பள்ளிக்கூடங்கள் வைக்கக் கவர்ன்மெண்டார் தீர்மானித்திருப்பதாக பூனுவில் பம்பாய்க் கவர்னராகிய ஹிஸ் எக்ஸலென்ஸி ஸர் ஜார்ஜ் க்ளார்க்கு ஐக்ய நாணயக் கான்பரன்ஸில் அறிவித்தார்.

**Duty on Imported Sugar.**

அயல்நாடடுச் சர்க்கரைக்கு வரிவிதித்தல்:—ராஜப்ரதிநிதி சட்டஸபை மெம்பராகிய ஆனரபில் ராயபகதூர் ஸ்ரீராம், ஜாவா, ஜர்மெனி, ஆஸ்த்ரியா, போன்ற அன்ய தேசங்களிலிருந்து இறக்குமதி யாகும் வெள்ளைச் சர்க்கரைக்கு நூற்றுக்கு ஐந்து வீதம் இறக்குமதி வரியை உயர்த்தவேண்டுமென்று, ஒரு தீர்மானங் கொண்டுவந்தார். தற்காலம் அன்ய சர்க்கரையின் போட்டியால் உள்நாட்டின் சர்க்கரைத் தொழிலே ஏற்படாமல் சர்க்கரை செய்வதற்கு வேண்டிய கரும்புப் பயிர் குறைந்துகொண்டு வருகிறது. இதனுல் குடிகளும் ஜமீன்தார்களும் நஷ்டப்படுவதுமன்றி, தொழில் செய்து ஜீவிக்கிறவர்களுக்கும் பிழைப்புக் குறைந்து போகிறது. கரும்புப் பயிர் செய்வதை நிறுத்தி பருத்திப்பயிர் செய்யலாமென்று சிலர் சொல்லுகிறுர்கள். ஆனுல் கரும்பு பயிராகும் பூமியில் பருத்தி பயிராகாது. இந்தியாவில் ஐக்ய மாகாணங்களே கரும்பு விசேஷமாய் பயிர் செய்யப்படும் இடம். இந்த கரும்புப் பயிர் அதிகமாய்ச செழித்து சர்க்கரைத்தொழிலும் ஸ்தாபிக்கப்பட்டுப் போனுல் பம்பாயில் பருத்தியினுல் எப்படி அநேக பெரிய முதலாளிகளுக்கும் தொழிலாளிகளுக்கும் அலுவல் கிடைத்திருக்கிறதோ அப்படி ஐக்ய மாகாணங்களிலும் சர்க்கரைத் தொழிலில் முதலாளிகளும் படித்தவர்களும் அலுவல் பெறுவார்கள்.

இப்படி ராய்பகதூர் ஸ்ரீராம் பேசினதற்கு இந்தியா கவர்ன்மெண்டில் காரியதரிசியாக மிஸ்டர் கில்லன் பதில் சொன்னுர். ஐக்ய மாகாணங்களில் கரும்புப் பயிர் குறைந்து வரவில்லையென்று அவர் கவர்ன்மெண்ட கணக்குகளினுல் காட்டினுர். நல்ல கரும்புகள் பயிர் செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. சென்னையில் கோயமுத்தூர் ஜில்லாவில் உயர்ந்த புதுக் கரும்புகள் சோதனையாய்ப் பயிர் செய்ய ஒரு பண்ணை நியமிக்கப்பட்டிருக்கிறது. பல மத்யஸ்தலங்களில் சர்க்கரைத் தொழிற்சாலைகள் நடத்த கவர்ன்மெண்ட் பண உதவி செய்திருக்கிறுர்கள். ஐக்ய மாகாணங்களில் சர்க்கரைத் தொழில் நிபுணர் ஒருவர் கவர்ன்மெண்டால் நியமிக்கப் பட்டிருக்கிறுர். போன வருஷத்தைவிட ஐக்ய மகாணங்களில் கரும்புப் பயிர் நூற்றுக்கு ஐந்து அதிகமான ஸ்தலங்களிலும் செய்யப்பட்டு வருகின்றது. இத்யாதி காரணங்களினுல், ராய்பகதூர் ஸ்ரீராம் கொண்டுவந்த தீர்மானத்தை கவர்ன்மெண்ட் அங்கீகரிக்கக் கூடவில்லை யென்று மிஸ்டர் கில்லன் சொன்னுர். தொழில்கள் விஷயமாய் இந்தியா இன்னும் சோதனையில் இருந்து வருகிறதேயன்றி, காரியம் ஆரம்பித்தபாடில்லை. சர்க்கரைத் தொழில் விஷயமாய் கவர்ன்மெண்ட் சென்ற மூன்று வருஷங்களாக ஆரம்ப ப்ரயத்தனங்கள் செய்து வருகிறுர்களே யன்றி, கவர்ன்மெண்டும் கவர்ன்மெண்ட் நிபுணரும் ஒரு பெரிய தொழிற்சாலை ஸ்தாபித்து சர்க்கரை செய்வதில் உதவி செய்வதில் உதவி செய்தார்க ளென்றபாடில்லை. மற்ற தேசங்களில் கவர்ன்மெண்ட் நினைத்த மாத்ரத்தில் காரியமாகி விடுகிறது. நம் தேசத்தில் மட்டும் கவர்ன்மெண்டின் விருப்பத்துக்கும், காரியத்தில் அந்த விருப்பம் நிறைவேறுவதற்கும், எவ்வளவோ வருஷங்கள் செல்லுகின்றன. சில ஸமயங்களில் இந்த விருப்பம் நிறைவேறுவதே யில்லை என்று சுதேசமித்திரன் எழுதுகிறது.

**Chemical Industry in Bombay.**

பம்பாயில் ரஸாயன ஸம்பந்தமான கைத்தொழில்.—ரஸாயன ஸம்பந்தமான ஒரு புதிய கைத்தொழில் சாலை ஸ்தாபிக்க பமபாயில் ஏற்பாடாயிருக்கிறதென்று தெரிகிறது. அதற்குக் கூடிய உதவியை செய்வதாக பம்பாய் கவர்மெண்டார் வாக்களித்திருக்கிறுர்கள். பம்பாயிலும் மற்ற இடங்களிலும் இப்பொழுது நடைபெறும் அநேக தொழில்களுக்குத் தேவையான பொருள்கள் புதிதாய் ஸ்தாபிக்கப்படுகிற தொழிற் சாலையில் செய்யப்படும். பம்பாயிலுள்ள நெசவுச சாலைகளின் உபயோகத்துக்காக இப்பொழுது ஒவ்வொரு வாரமும் 100 டன் எப்ஸம் ஸால்ட் என்ற ரஸாயன உப்பு அன்ய தேசங்களிலிருந்து இறக்குமதி செய்யப்படுகிறது. நெசவுத் தொழிலுக்கு அவசயமான அந்தபொருளையும் ஸிங்க் க்ளோரைட், மக்னீஷியம் க்ளோரைட் என்ற பொருளையும் அத் தொழிற்சாயல் உற்பத்தி செய்வதுடன் நிலத்தின் வளத்தை விருத்தி செய்யக்கூடிய உரப்பொருள்களையும் உற்பத்தி செய்வார்கள்.

# ECONOMICS.
## பொருளாதாரம்.

### Agricultural Prosperity in Denmark.

டேன்மார்க்கில் விவஸாயிகளின் சீரான நிலைமை:—டென்மார்க்கு தேசத்தாராகிய டேன்ஸ் ஜாதி ஜனங்களைப்பற்றி டாக்டர் ஈகன் பின் வருமாறு தெரிவிக்கிறார். ஐரோப்பாக்கண்டத்து எல்லா தேசத்தாரிலும் டேன்ஸ் ஜனங்களே விவஸாய விஷயததில் ரொம்ப செல்வ ஸம்பத்துள்ளவர்களாயிருக்கிறார்கள். ஒவ்வொருவருக்கும் ஸராஸரியில் உள்ள செல்வப்பெருக்கை உத்தேசிக்கையில் டென்மார்க்கு தேசமானது இங்கிலாந்துக்கு அடுத்தபடி யென்னலாம். ஆனால் டென்மார்க்கில் சிலரிடத்தில் பணம் ஏராளமாயும் சிலரிடத்தில் பணம் மிகக் குறைவாயும் இல்லாமல் நிறைவி எல்லாரிடத்திலும் கிட்டத்தட்ட ஸமனாகவே இருக்கிறது. அங்கே ரொம்ப பணக்காரர்கள் கிடையாது. ஒவ்வொருவனும் ஸாதாரணமாய் தக்க ஐவேஜியுள்ளவனாகவே யிருக்கிறான். அவர்கள் இப்பொழுதுள்ள மேலான நிலைமையை மூன்று வழிகளால் அடைந்தார்கள். அவையாவன:—

(1) கல்வி. (2) கோவாபரேஷன் ஏற்பாடு (3) விவேகத்தோடு செய்யப்படும் ஸர்க்கார் உதவி.

தற்போது டென்மார்க்கு விவஸாயிகள் தனியாக ஒன்றும் வாங்குவதில்லை. கோவாபரேடிவ் ஸங்கத்தார்களுடைய நிபுணர்கள் பயிருக்குவேண்டிய விதைகளைப் பரீக்ஷித்து நல்லவைதான் என்று சொல்லுகிற விதையைத்தான் வாங்குகிறார்கள்.

உரங்களையும் கோவாபரேடிவ் ஸங்கங்கள் மூலமாய்த்தான் வாங்குகிறார்கள். விவஸாயி மாம்ஸத்துக்காக தன்னுடைய பன்றிகளை தானாகவே கொல்லுகிறதில்லை. அவைகளைக் கோவாபரேடிவ் பன்றி யிறைச்சி பாக்டரிகளுக்கு அனுப்பிவிடுகிறான். இதனால் என்ன தெரிகிறது, டென்மார்க்கு தேசத்தார்களுக்கு கோவபரேடிவ் முயற்சி கைகூடி, கவர்ன்மென்டாரும் ஸரியானபடி உதவிசெய்து, தகுந்த கல்வியும் கொடுக்கப்பட்டு வந்ததால்தான் அவர்கள் தற்பொழுது ஐரோப்பாவில் விவஸாய விஷயத்தில் ரொம்ப மெம்பாடும் செல்வமும் உள்ளவர்களாயிருந்து வருகிறார்கள். இந்த மூன்று ஸாதனங்களு மில்லாவிட்டால் இப்படிப்பட்ட நிலைமையை யடைந்திருக்க முடியாதென்று நன்றாய் விளங்குகிறது.

நமது தேசத்தில் கோவாபரேடிவ் முயற்சியில் அக்கரையுள்ளவர்கள் மேலே சொன்ன விஷயங்களைக் கவனிக்கவேண்டுவதச்யம். டென்மார்க்கு தேசம் மேலான ஸ்திதியடைவதற்கு காரணமாயிருந்தவைகள் இந்தியாவின், க்ஷேமாபி வ்ருத்திக்கும் ஸாதகமாயிருக்கு மென்பதில் யாதொரு ஸந்தேசமுமில்லை.

### Farm Economics.

விவஸாயத்தின் பொருளாதார நிலைமை.—விவஸாயத்தின் பொருளாதார நிலைமையைப்பற்றி விசேஷமாய் கவனிப்பதற்குப் பலகாரணங்களிருக்கின்றன. முதலாவது அது ஜனத்தொகையில் பெரியதும் முக்யமானதுமான ஒரு வகுப்பைப் பற்றினதாயிருக்கிறது. மேலும் நமக்கு வேண்டியிருக்கும் பொருள்களில் இன்றியமையாததான உணவுப் பொருள்களுக்கு விவஸாயிகளை நம்பினவர்களாயிருக்கிறோம். அர்த்த சாஸ்த்ரம் வாசிப்பவர்கள் இந்த விவஸாய பொருளாதாரத்தைப்பற்றி ரொம்பவும் கவனிக்கிறார்கள். ஏனென்றால் மனுஷனுக்கே அது மூலாதாரமான விஷயமாயிருக்கிறது. மனிதனுக்கு உள்ள முதன்மையான தேவைகளுக்கு நெருங்கின ஸம்பந்தமுடையதாயிருக்கிறது. அமெரிக்கா கவர்ன்மெண்டார் விவஸாய பொருளாதார ஸம்பந்தமான ஸமாசாரங்களை சேகரித்து வருகிறார்கள். விவஸாயிகள் தங்கள் மூலதனத்தை விவஸாய ஸம்பந்தமான செலவு பாபத்துக்களில் போடுகிறார்களாதலால் அவர்களுக்கு எதில் பணத்தை அதிகமாய்ப்போட்டால் நல்ல லாபம் வரும் என்பதை அறியவேண்டியது அவச்யம். ஸமீபத்தில் அமெரிக்கன் கவர்ன்மெண்டார் ப்ரசுரம் செய்த புல்லட்டின் (துண்டுப் பத்ரிகை) ஒன்றில் ரொம்ப உபயோகமான சில விஷயங்களை வெளியிட்டிருக்கிறார்கள். அந்த புல்லட்டினில் ஓஹியோவில் பண்ணைகளில் விவஸாயத்துக்கு வேண்டிய ஸாமான்களின் திட்டமுதலியவைகளைப்பற்றி ஒரு ஆராய்ச்சி செய்யப்பட்டிருக்கிறது. 21-பண்ணைகளைப்பற்றி ஆராய்ச்சி செய்ததில் விவஸாயிகள் பின் வருமாறு தங்கள் மூலதனத்தை ஸராஸரியில் பங்கிட்டிருக்கிறார்களென்று தெரியவருகிறது. பூமி, வடிகால் வேலை, பாசனவேலை இவற்றில் ஸராஸரியில் மூலதனத்தில் 100-க்கு 61-பாகம்; கட்டிடங்களில் 100-க்கு 21-பாகம்; கருவிகளிலும் யந்த்ரங்களிலும் 100-க்கு 5 பாகம்; கால்நடை முதலிய ப்ராணிகளில் 100-க்கு 13-பாகம். நமது நாட்டிலும் விவஸாயிகள் தங்களிடத்துள்ள ஸ்வல்ப மூலதனத்தையும் பூமி, முதலிய மேலே சொன்ன அம்சங்களில் எவ்வளவு பாகம் போடுகிறார்கள் என்று கவனிப்பது நல்லது.

# CO-OPERATION.
# கோவாபரேஷன்.

## A Help to Co-operative Societies.

ஐக்ய நாணய ஸங்கங்களுக்கு ஒரு அனுகூலம்.—ஐக்ய நாணய ஸங்கங்களுக்கு உண்டாகும் லாபத்துக்கும் பங்காளிகளுக்கு அவை பிரித்துக் கொடுக்கும் தொகைகளுக்கும் வருமான வரி விதிக்கப்படமாட்டாது.

## Toluvur Co-operative Bank.

தொழுவூர் ஐக்ய நாணய ஸங்கம்.—ஐக்ய நாணய ஸங்கங்களில் ஏற்படும் லாபத்தில் நூற்றுக்கு 10-ரூபாய் வீதம் தர்மகார்யத்திற்குச் செலவு செய்யலாம் என்று ஐக்ய நாணய ஸங்கத்து ஆக்டில் மாறுதல் உண்டாயிருக்கிறது. அதை ஆதாரமாக வைத்துக் கொண்டு செங்கல்பட்டு ஜில்லாவைச் சேர்ந்த தொழுவூர் க்ராம ஸங்கத்தார் ரிஜிஸ்ட்ராரின் உத்தரவின் பேரில் ஸொந்தமாக எலிமெண்டரி ஸ்கூல் ஒன்றை ஏற்படுத்தி நடத்திவருகிறார்கள்.

## Inspectors for Co-operative Societies

கோவாபரேடிவ் ஸொஸைடிகளுக்கு இன்ஸ்பெக்டர்கள்.—நாளது மாஸம் நடந்த சென்னை லெஜிஸ்லெடிவ் கௌன்ஸிலில் ஆனரபில் மிஸ்டர் வி. எஸ். ஸ்ரீனிவாஸ சாஸ்த்ரி ஐக்யநாணய ஸங்கங்கள் இப்போது இல்லாத இடங்களில் புதிதாய் ஸ்தாபிக்க, ரெஜிஸ்ட்ராருக்கு மனுக்கள் வந்து குவிந்து கொண்டிருக்கிறபடியால் இந்தப் புதுஸொஸைடிகள் ஸ்தாபிப்பதிலும், ஏற்கனவே ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் ஸொஸைடிகளை மேல்விசாரணை செய்வதிலும், அவருக்கு ஒத்தாசையாக அதிக இன்ஸ்பெக்டர்கள் புதிதாய் நியமிக்கப்பட வேண்டுமென்று ப்ரேரேபித்தார். அதற்கு பதில் ஸர் ஜான் அட்கின்ஸன் அடுத்த பட்ஜட்படி 16 இன்ஸ்பெக்டர்கள் புதிதாய் நியமிக்கப்படுவார்களென்றும், ரெஜிஸ்ட்ரார் இன்னும் அதிக இன்ஸ்பெக்டர்கள் வேண்டுமென்று கேட்டால் நியமிக்கப்படுமென்றும் சொன்னார். ரெஜிஸ்ட்ரார் மிஸ்டர் எல். டி. ஸ்வாமிக்கண்ணுப் பிள்ளையும் ஸபையின் விவாதத்தில் கலந்து பேசி, போதுமான இன்ஸ்பெக்டர்கள் இல்லாததினால், புது ஸொஸைடிகள் ரெஜிஸ்டராகவில்லை யென்று நினைப்பது பிசகென்று சொன்னார். ஆனால் மிஸ்டர் ஸ்வாமிக்கண்ணு பிள்ளைக்கு முன்னொரு தடவை விப்பந்திகள் குறைவாயிருப்பதாலேயே புது ஸொஸைடிகள் ஸ்தாபிப்பது தடைப்பட்டிருக்கிறதென்று சொன்னார். உண்மையென்னவெனில், இந்த ஸொஸைடிகள் ஸ்தாபிக்கப்பட்டு நடத்தப்படும் திறமையையும் அவைகளின் நோக்கங்கள் நிறைவேறிவரும் மாதிரியையும் பார்த்து கவர்ன்மெண்ட் உத்யோகஸ்தர்கள் ப்ரமித்து அவைகள் அவ்வளவு தீவிரமாய் செல்லக்கூடாதென்று நினைக்கிறார்கள் என்று சுதேசமித்திரன் எழுதுகிறது.

## Co-operative Merits of Nidhis.

நிதி (பண்டுகள்)ளுடைய கோவபரேடிவ் குணங்கள்:—இது விஷயமாக ஸமீபத்தில் மதராஸ் கோவாபரேடிவ் புல்லட்டினில் ஒருவர் ஒரு வ்யாஸம் எழுதுகையில் நிதிகள் தேசத்தின் பொருளாதார விஷயமாக ரொம்ப ப்ரயோஜனமுள்ளவைகளாக இருந்திருக்கின்றனவென்றும், அவைகள் கோவாபரெடிவ் ஸங்கங்களின் நோக்கங்களை அபிவ்ருத்தி செய்திருக்கின்றன என்றும் சொல்லுகிறார். ஒரு நிபுணர் சொல்லுகிறார்:—

ஒரு நிதியானது அநேகவிஷயத்தில் கோவாபரேடிவ் ஸங்கமாகவே யிருக்கிறது. ஸாதாரணமாய் அது மெம்பர்களைத்தவிர வேறு எவருக்கும் கடன் கொடுப்பதில்லை. மேலும் மெம்பர்களைச் செட்டாயிருக்கும்படி கட்டாயப்படுத்துகிறது. ஏனென்றால் ஒரு பங்கு அல்லது அதிகப்பங்கு எடுத்துக்கொண்டு மாஸாமாஸம் பணம் செலுத்துகிறவர்கள்தான் நிதியில் சேரலாம். இந்த நிதிகளும் பாங்கிகளாக இருந்து மூலதனத்தை ஒழுங்குபடுத்தி உபயோகப்படக் கூடிய ஸ்திதியில் வைக்கின்றன. மேலும் அவைகள் மற்ற பாங்கிகள் போலவே மெம்பர்களின் ஸொந்த நன்மையைக் கருதாமல் நடக்கும்படி செய்கின்றன. இவைகளால் செட்டு வ்ருத்தியாவதோடு செல்வமும் அதிகரிக்கிறது. நிதிகளின் கொள்கைகள் திட்டமானவையாயும் தீர்மானமானவையாயும் இருக்கின்றன. அவைகளின் நடவடிக்கைகள் பகிரங்கமானவை. அவைகளால் அவை நடத்துவோருக்குத் தொழிலில் பழக்கமும் பொது விஷயங்களில் உழைப்பதற்குத் தேர்ச்சியும் உண்டாகின்றன.

# INSURANCE.
# இன்ஷ்யூரென்ஸ்.

## Hints to Agents.

ஏஜெண்டுகளுக்கு சில குறிப்புகள்.

(1) ஏஜெண்டானவர் இன்ஷ்யூர் செய்யத் தகுந்தவர்கள் இன்னார் என்று ஒரு ஜாப்தா தயார் செய்து வைத்துக் கொள்ளவேண்டும். எந்த வ்யாதியும் இல்லாதவர்களையே அந்த ஜாப்தாவில் சேர்க்கவேண்டும். குறிப்பிட்டகாலத்துக் கொருதரம் அந்த ஜாப்தா ஸரியாகவிருக்கிறதா வென்று பார்த்து வேண்டுமானால் திருத்திக்கொள்ள வேண்டும். இந்த ஜாப்தாவானது இன்னின்னாரைப்போய்ப்பார்க்க வேண்டும் என்பதற்கு ஒரு ஞாபகக்குறிப்பாக இருப்பதால் இதுஏஜெண்டுக்கு ரொம்ப உபயோகமாக இருக்கும்.

(2) ஏஜெண்டானவர் முதலில் தம்முடைய ஸ்நேகிதர்களையும் தமக்குத் தெரிந்தவர்களையும் இன்ஷ்யூர் செய்யச் சொல்லவேண்டும்.

(3) யாருக்காவது அகால மரணம் ஸம்பவித்தாலும் ஸரி, தம்முடைய அல்லது மற்ற கம்பெனிகளால் இன்ஷ்யூரென்ஸ் பணம் கொடுக்கப்பட்டாலும் ஸரி, ஏஜெண்டானவர் இவைகளை ஆதாரமாகக் கொண்டு இன்ஷ்யூர் செய்யாதவர்களுக்கு இன்ஷ்யூர் செய்வதின் ப்ரயோஜனத்தை எடுத்துக்காட்ட வேண்டும்.

(4) இந்தியா மிகப் பெரிய தேசமானதால் இன்ஷ்யூரென்ஸ் ஏஜெண்டுகள் நன்றாய் வேலைசெய்வதற்கு அதிக இடமிருக்கிற தென்பதை ஏஜெண்டானவர் ஞாபகத்தில் வைக்கவேண்டும்.

## Live Stock Insurance.

கால் நடைகளை இன்ஷ்யூர் செய்நல்.--குதிரை, மட்டக்குதிரை, பசு, நாய், பொதுவாய் விவஸாயிகளின் மற்ற ஜீவப்ராணிகள், எல்லாவற்றையும் இப்போது இன்ஷ்யூர் செய்யலாம். இதற்காக ரங்கூனில் பர்மாஷான்லைவ் ஸ்டாக் இன்ஷ்யூரென்ஸ் கம்பெனி லிமிடெட் என்று ஒரு கம்பெனி 5 லக்ஷம் ரூபாய் மூலதனத்துடன் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது.

## The Benefits of Insurance.

இன்ஷ்யூரென்ஸால் உண்டாகும் நன்மை.—ஒரு பத்ரிகையில் ஒருவர் இது விஷயமாய் எழுதுகையில் இன்ஷ்யூரென்ஸானது மனிதர்களுக்கு ஏற்படும் அபாயம், நஷ்டம் ச்ரமம் முதலியவைகளை ஸமனாக்கும் ஒரு உபயோகமான சக்தியென்றும், அதனால் அதன் நன்மையை நாடிவரும் ஒவ்வொருவருக்கும் ஒத்தாசை செய்கிறதென்றும் சொல்லுகிறார். சிலர் இந்த இன்ஷ்யூரென்ஸ் ஏற்பாடானது நாகரீகத்தின் மேம்பாட்டை மற்றெல்லா ஏற்பாட்டையும்விட நன்றாக விளக்கிக்காட்டுகிறதென்று சொல்லுகிறார்கள். உண்மையில் இன்ஷ்யூரென்ஸைப்பற்றி ரொம்பவும் ச்லாகித்துச்சொல்ல இடமிருக்கிறது. இந்த ஏற்பாடானது நல்ல சாஸ்த்ரோக்தமான ஆதாரத்தையுடையது. கணித சாஸ்த்ர திட்டமும், அனுபவ ஞானமும் ஆதாரமாய்க் கொண்டது. இந்த ஏற்பாட்டால் கோவாபரேஷன் (கூட்டுறவு) வ்ருத்தி யடைகிறது.

## To those who mean to Insure.

இன்ஷ்யூர் செய்கிறவர்களுக்த சில தறிப்புகள்.—இன்ஷ்யூரென்ஸ் கம்பெனிகளில் ப்ரீமியம் கட்டி பாலிஸி பெறுகிறவர்களுக்கு இன்ஷ்யூரென்ஸால் ரொம்ப நன்மை உண்டுதான். ஆனால் சில ஸமயங்களில் ஏஜெண்டு முதலியவர்களுடைய பேச்சைக்கேட்டு, இன்ஷ்யூர் செய்கிறவர்கள் தாங்கள் பெற்ற பாலிஸிகளுக்கு 2-அல்லது மூன்றுதரம் ப்ரீமியம் கொடுத்ததற்குப் பிறகு மறுபடியும் கொடுத்துக் கொண்டேவர அசக்தர்களாக இருக்கிறார்கள். சில ஸமயம் ஒரு ப்ரீமியத்துக்குமேல் கொடுக்கமுடியாமலும் போகிறது. இதனால் அவர்கள் தங்களுடைய பாலிஸியை இழந்து விட நேரிடுகிறது. அவர்கள் இன்ஷ்யூரென்ஸால் உண்டாகும் நன்மைகளைப்பற்றி ரொம்ப ச்லாகித்துப் பேசுவதைக் கேட்கிறார்கள். தங்களிடம் போதுமான பணமிருக்கிறதா, எப்போதும் ப்ரீமியம் கட்டிவர முடியுமா, என்பவைகளை ஸரிவர யோசித்துக் கொள்வதற்கு முன்பே இன்ஷ்யூரென்ஸ் ஆபீஸுக்கு அழைத்துக்கொண்டு போகப்பட்டு இன்ஷ்யூர் செய்யும்படி செய்யப்படுகிறார்கள். இவர்களுக்குத் தங்களுடைய ஸரியான நிலைமை இன்னதென்று தெரிய வெகுகாலம் செல்வதில்லை. ஒவ்வொருவரும் இன்ஷ்யூர் செய்வதென்று நிச்சயிப்பதற்கு முன் தம்முடைய ஜவேஜி எவ்வளவு, தடவை தோறும் ப்ரீமியம் கொடுத்துவர முடியுமா, ப்ரீமியம் கட்டாமல் நிறுத்திவிட்டால் என்ன நஷ்டம் நேரிடும், என்னும் விஷயங்களைப்பற்றி நன்றாய் ஆலோசிக்கவேண்டும். பாலிஸி பெற்றுக்கொண்ட பிறகு செலுத்தவேண்டியதை ஸரிவரச் செலுத்த அவருக்குப் போதுமான ஜவேஜியில்லாவிட்டால் இன்ஷ்யூர் செய்து சிலகாலம் ப்ரீமியம் கட்டிப்பின்பு நிறுத்திவிட்டு நஷ்டமடையக்கூடாது. சில ஜனங்கள் இந்த விஷயங்களைப்பற்றி ரொம்ப அறியாதவர்களாயிருக்கிறார்கள். ஜனங்களுக்கு இன்ஷ்யூரென்ஸ் விஷயங்களைப்பற்றி அறிவு புகட்டவேண்டும். அப்படி இன்ஷ்யூரென்ஸ் விஷயங்களைப்பற்றித் தெரிந்திருந்தால் இன்ஷ்யூரென்ஸில் உள்ள கஷ்டநஷ்டங்களை அறியாமல் ஒருவரும் இன்ஷ்யூர் செய்ய எண்ணமாட்டார்,

# EDUCATION.

## வித்யா விஷயம்.

### The Ideal School.

சிறந்த பள்ளிக்கூடம்.–மான்ஷ்யர் அகஸ்டின் ரே என்னும் பாரிஸ் நகரத்து சிற்பசாஸ்த்ரி குற்றம் குறை கூற முடியாத பள்ளிக்கூடக்கட்டிடம் கட்டுவதைப் பற்றி ஸமீபத்தில் ஒரு வ்யாஸம் வாசித்தார். அதில் அவர் ஸூர்யவெளிச்சத்தின் ப்ரயோஜனத்தைப் பற்றி ரொம்ப சொல்லியிருக்கிறார். ஸூர்யனின் ஊதாவர்ண கிரணங்களுக்கு மேலான குணம் இருப்பதால் அறையின் ஒவ்வொரு பாகத்திலும் அந்தக் கிரணங்கள் படும்படி வீட்டின் அறைகளை அமைக்காமல் வேறுவிதமாய் கட்டுவது நல்லதல்ல. பள்ளிக்கூடத்து அறைகளையோ இவ்விதம் ஸூர்ய கிரணங்கள் படக்கூடியவண்ணம் கட்டவேண்டியது இன்னம் ரொம்ப அவச்யம். உஷ்ணம், காற்றோட்டம், ஸூர்ய வெளிச்சம் ஆகிய இவைகளில் ஸூர்யவெளிச்சமே முதன்மையானது. அகஸ்டின்ரே சொல்லுவது என்னவென்றால், காலையில் கீழண்டைப் பக்கத்து அறைகள் ஸூர்ய உஷ்ணத்தால் கெட்ட வாயுக்கள் நீங்கி நன்றாய் சுத்தமடைகின்றன;ஆகையால் அப்படி சுத்தம் செய்யப்பட்ட அறைகளில் பிற்பகலில் வகுப்புகளை வைத்து நடத்தவேண்டும். முதல்நாள் பிற்பகலில் ஸ்கூல்கட்டிடத்தின் மேலண்டைப்பக்கத்து அறைகள் ஸூர்ய உஷ்ணத்தால் சுத்தமாக்கப்படுமாகையால் மறுநாள் காலையில் அந்த அறைகளில் வகுப்புகளை வைத்து நடத்தவேண்டும். இப்படிச் செய்ய ஸௌகர்ய முண்டாகும்படி அறைகளைக் கட்டவேண்டும் என்கிறார். பள்ளிக்கூடத்தைச் சுற்றிலும் ரொம்ப காலிநிலமும் நிறைய மணலும் இருக்கவேண்டும். ஸூர்ய வெளிச்சமும், காற்றோட்டமும் உண்டாக்க ஏற்படும் செலவைக் குறைப்பதைவிட பள்ளிக்கூடத்தை அலங்காரம் செய்வதில் ஏற்படும் செலவைக் குறைப்பது நல்லது. அவர் இந்த மாதிரியான பள்ளிக்கூடம் உத்தமமான தென்றாலும் கட்டிடமில்லமல் வெளியிலேயே பள்ளிக்கூடம் நடத்துவது மேல் என்கிறார்.

### Technical Instruction in Germany.

ஜெர்மெனியில் டெக்னிகல் கல்வி.—19-ம் நூற்றாண்டின் (கி.பி. 1801-1900) தொடக்கத்தில் ஜெர்மனிதேசமானது பிரிவுபட்டும் அபிவ்ருத்தியடையாமலும்எழ்மையாகவும் இருந்தது. மற்ற தேசங்களோடு நடக்கும் வ்யாபாரம் அபிவ்ருத்தியடையாமல் அப்படியே நிலையாக நின்றுவிட்டது. தேசமுழுவதும் நஷ்டப்படுத்துவதும் அவமானம் உண்டாக்கக்கூடியதுமான யுத்தம் நடந்துவந்ததால் கஷ்டமடைந்து வந்தது. இப்படி வெகுகாலமாகப் போதாத காலமாயிருந்தும் தேசத்தாருக்கு ஸ்வதேசாபிமான குணங்கள் குறையாமலிருந்தன.

தற்காலம் ஜெர்மெனி அபிவ்ருத்தியடைந்திருப்பதில் அதன் வ்யாபார மேம்பாட்டுக்கு ஒரு முக்யமான காரணம் அதன் கைத்தொழில்கள் வ்ருத்தியடைவதற்கு க்ரேட்ப்ரிடன் (இங்கிலாந்து) தக்க விதமாய் ஒத்தாசை செய்ததே. ஆனால் இதைப் பலர் ஒப்புக்கொள்வதில்லை. இங்கிலாந்தின் கைத்தொழிலால்தான் ஜெர்மெனியில் கைத்தொழில் ஒங்கிற்று என்று சொல்லுவது அதிகமாகாது. ஆரம்பத்தில் ஜெர்மெனியில் ரெயில்வேக்கள், ஜலாதாரவேலைகள், காஸ்தொழில்கள், ட்ராம்வேக்கள் ஆகிய இவைகள் ஏற்படுவதற்கு ப்ரிட்டிஷாருடைய தொழில் முயற்சியும், அறிவும், மூலதனமும் ரொம்பவும் ஸாதகமாயிருந்தன. மேலும், பருத்தி, கம்பளிக் கைத்தொழில்களும், இஞ்ஜினியரிங் தொழிலும், ஏற்படுவதற்கும் ப்ரிடிஷாருடைய ஊக்கமும் ஸாமர்த்யமும் ரொம்ப உபயோகமாயிருந்தன. ஜெர்மெனியில் புதியவையான கைத்தொழில்களை ஸ்தாபித்து நடத்துவதற்காக தொழிலறிவும், அனுபோகமும் உள்ள ப்ரிட்டிஷ் கைத்தொழிலாளிகள் அநேகர் ப்ரிடனிலிருந்து வரவழைத்துக் கொள்ளப்பட்டார்கள். இவர்களின் கீழ் ஜெர்மானிய தொழிலாளிகள் பொறுமையுடனும், ச்ரத்தையுடனும் வேலைக்கற்றுவந்தார்கள். இப்படி ப்ரிட்டிஷ் தொழில் நிபுணர்கள் ஜெர்மெனிக்குப் போவதால் இங்லீஷ் வ்யாபாரத்துக்கு நேரக்கூடிய ஹானி இன்னவென்பதை காப்டன் என்பவர் 1838-ம் வருஷத்திலேயே தெரிவித்திருந்தார். ஜெர்மனியில் சாஸ்த்ரக் கல்விக்கு ஒரு மதிப்பு ஏற்படுவதற்குமுன்பே, கைத்தொழிலில் அமர்ந்துள்ள பெரிய உத்யோகஸ்தர்களுக்கு சாஸ்த்ரங்களிலும் தொழில்களிலும் கல்வி புகட்டுவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்வது நல்லதென்று ஜெர்மன் கைத்தொழில் அதிபதிகள் உணர்ந்து அப்படியே செய்திருந்தார்கள். அங்கே பெரியவும் உயர்ந்தவுமான அநேக டெக்னிகல் பள்ளிக்கூடங்கள் 1860-ம்வருஷத்துக்கு முன்னாலேயே ஸ்தாபிதமாய்விட்டன. 1871-ம் வருஷத்தில் ப்ரான்ஸுக்கும் ஜெர்மனிக்கும் நடந்த யுத்தம் ஜெர்மனிக்கு ஸாதகமாய் முடிந்தவுடன் ஜெர்மெனியில் கைத்தொழில் முயற்சியானது வ்ருத்தியாகத்தலைப்பட்டது. ஜெர்மனி வ்யாபாரத்தில் மேம்பாடடைந்ததற்குக் கல்வியே ஆதிகாரணமென்பதில் யாதொரு ஸந்தேகமும் இல்லை. ஜெர்மானியர்களும் கல்வி ரொம்ப முக்யமென்பதில் நம்பிக்கையுள்ளவர்களாகக் காட்டி வந்திருக்கிறார்கள். இப்பொழுதும் டெக்னிகல் படிப்பு சொல்லிக்கொடுப்பது ரொம்ப அவச்யமென்று எல்லாரும் உணர்ந்து அதன்படியே எல்லாரும் நடந்து வருகிறார்கள்.

# ECONOMIC PRODUCTS.
## விலையுள்ள பொருள்கள்.

### Aluminium

**அல்யூமினியம்.**—ஜனவரிமீ பத்ரிகையில் அல்யூமினியத்தை வஸ்த்ரங்கள் செய்வதில்உபயோகிக்கலாமென்று சொன்னோம்.இப்பொழுது மின்ஸார வேலைகளில் லேசான உலோகமாகிய இந்த அல்யூமினியத்தை தாம்ரத்துக்கு பதிலாக உபயோகப்படுத்துவதைக் குறித்து ரொம்பவும் யோசித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகாயக் கப்பல்கள் (பலூன், ஏரோப்லேன்) செய்வதிலும் இது உபயோகப்படுகிறது. உண்மையில் இதை ஒட்டவைப்பதற்கு (பற்றவைத்தல்) ஒரு தக்கமுறை கண்டுபிடிக்கப்பட்ட பிறகு இந்த உலோகமானது புதிதுபுதிதாய் அநேக வேலைகளுக்கு உபயோகப்பட்டு வருகிறது. மேலும் ஆகாயக்கப்பல்கள் செய்வதில் இனி மேல் இது மிகவும் உபயோகப்படும் என்று எதிர்பார்க்கலாம்.

### Kapok.

**இலவம் பஞ்சு.**—இலவம் பஞ்சில் இரண்டு மூன்று வகைகள் உண்டு. இந்தியா, கொச்சி சீனா, ஜாவா தீவு முதலிய இடங்களில் இலவு விசேஷமாய் வளருகிறது. ஜாவாவில் இலவமரம் வயற்புறங்களிலும் சாலையோரங்களிலும் அதிகமாயுண்டாகும். சில ஐரோப்பியர்கள் அதைப் பயிரிட்டு வளர்க்கிறார்கள். காய்முற்றியவுடன் அதை யுடைத்து காய்களிலுள்ள பஞ்சைக் கையினாலாவது, யந்த்ரங்களினாலாவது கடைந்து அதிலுள்ள விதை தூசிகள் முதலியவைகளைப் பிரித்தெடுக்கிறார்கள். விதை களிலிருந்து எண்ணெய் எடுக்கப்படுகிறது. பஞ்சை ப்ரெஸுகளில் கொடுத்து அழுத்தி சாக்குகளில் கட்டுகிறார்கள். ஆஸ்ட்ரேலியாவுக்கு அனுப்பப்படும் சாக்குகள் ஒவ்வொன்றிலும் 60 முதல் 80 ராத்தல் வரையில் பஞ்சு இருக்கும். ஐரோப்பா அல்லது அமெரிக்காவுக்கு அனுப்பப்படும் சாக்குகளில் இன்னம் அதிகம் பஞ்சு சேர்த்துக் கட்டுவார்கள். அவைகள் ஒவ்வொன்றும் 99 ராத்தல் நிறையுள்ளவையா யிருக்கும். ஜாவாவில் பஞ்சை ரொம்ப ஜாக்ரதையாக சுத்தம் செய்வதால் அவைகளை மறுபடியும் சுத்தம் செய்யாமலே உபயோகிக்கலாம். மெத்தைகளுக்கு இலவம் பஞ்சு உபயோகிப்பது தேகஸுகத்துக்கு ரொம்ப நல்லது என்று மேல் நாட்டார் குதிரை மயிர் உபயோகித்து வந்ததற்குப் பதிலாக இலவம் பஞ்சை இப்போது உபயோகித்துவர ஆரம்பித்து விட்டார்கள். மற்ற நார்களையும்விட இது நல்லதென்று உபயோகப்பட்டு வருகிறது. மேலும் இலவம் பஞ்சை அழுத்தினால் அது அழுந்தி பின்பு பழைய படி ஆகிவிடுகிற குணம் ரொம்ப உண்டு. இதனிடத்தில் இந்த குணம் ரொம்பகாலம் குறைந்து போகாமல் இருக்கிறது. குதிரைமயிரும் நார்களும் அடைத்த மற்ற மெத்தைகளைவிட இலவம் பஞ்சு மெத்தை அதிகநாள் கெடாமல் இருக்கிறதாம். இலவம்பஞ்சு மெத்தைகள் லேசாகவும் ஸுலபமாய்க் கையாடக்கூடியவையாகவும் இருக்கின்றன. இந்த மெத்தைகளுக்கு கொஞ்சம் பஞ்சு போதுமாகையால் குதிரைமயிர் மெத்தையைவிடக் குறைந்த விலையுள்ளவையாயிருக்கின்றன. இலவம் பஞ்சு மெத்தைகள் குளிர்ச்சியானவையல்ல என்று சொல்வதற்குத் தகுந்த ஆதாரமில்லையென்று சொல்லலாம். ஏனென்றால் உஷ்ண தேசங்களில் இலவம் பஞ்சானது மெத்தைகளுக்கும் நாற்காலிகளுக்கும் உபயோகிக்கப்படுகிறது. இலவம் பஞ்சில் இன்னம் அநேக ஸௌகர்யங்கள் இருக்கின்றன. அது சீக்ரத்தில் ஈரத்தை க்ரகிப்பதில்லை. ஈரம் சீக்ரத்தில் காய்ந்துவிடுகிறது. அதிலிருக்கக்கூடிய க்ருமிகளைக் கொல்லுவதற்கு அதை உஷ்ணப்படுத்தலாம். அதனால் பஞ்சின் குணம் ஒன்றும் கெடாது. இலவம் பஞ்சு அடையாய் ஒட்டிக்கொள்வதில்லையாகையால் ரண சிகித்ஸைகளுக்கும் உபயோகப்படுகிறது. இதற்கு மிதக்கும் தன்மை ரொம்ப இருப்பதாலும், கார்க்கு, கலைமான் ரோமம் இவைபோலல்லாமல் தண்ணீரில் பலநாளிருந்தாலும் இந்தக் குணம் இருப்பதாலும், இதை லைப்பெல்ட் அதாவது உயிர்க் கச்சைகளும், லைப் பாய்களும் அதாவது ஜீவ ரக்ஷணமிதப்புகளும் செய்வதில் உபயோகிக்கலாம். இலவம் பஞ்சை முப்பது நாள்-வரையில் தண்ணீரில் அமிழ்த்திவைத்திருந்தால் அதன் மிதக்கும் தன்மையில் நூற்றுக்கு 10-பங்குதான குறைகிறது. காயவைத்தால் குறைந்துபோனது திரும்பிவந்துவிடுகிறது. இலவம் பஞ்சை தனியாகவாவது, பருத்தியினுடன் கலந்தாவது நூல் நூற்பதற்காக ஜெர்மெனியில் ஒரு கம்பெனி ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறதாம். தொப்பி செய்வதிலும், கன்காட்டன் என்னும் ஒருவித வெடிமருந்து செய்வதிலும் இலவம் பஞ்சு உபயோகப்பட்டுவருகிறது.

# BUSINESS METHODS.

## வ்யாபார முறைகள்.

### Wrong Markings.

தப்பாய் அளவு குறிப்பிடுதல்.—பம்பாய் மில்லுகளில் நெய்துவரும் பீஸ் துணிகளில் அவைகளின் மேல் குறிக்கப்பட்டிருக்கும் அளவுப்படி நீளமிருக்கிறதில்லை. 24-28 கஜம் நீளம் துணிகளில் $\frac{1}{4}$ கஜம் முதல் $1\frac{1}{4}$ கஜம் வரையில் குறைவு ஏற்படுகிறது. அமதாபாத் மில் துணிகளில் 12 கஜம் நீளம் என்று குறிக்கப்பட்டதில் $10\frac{1}{2}$ கஜந்தான் துணி இருக்கிறது, என்று ஒரு பம்பாய் பத்ரிகை எழுதுகிறது.

### A Side Walk Advertisement.

ஒரு ஓரப்பாதை விளம்பரம்.—ஒரு பட்டணத்தில் மூக்குக்கண்ணாடிக் கடையோரமாக ஒரு பாதை போட்டுக் கொண்டிருந்தார்கள். பாதை போடுவதற்குவேண்டிய கிலக்கீல் முதலியவைகளைப் போட்டு வேலை நடந்துக்கொண்டிருக்கும்போது கண்ணாடி வ்யாபாரி விளிம்பில் தங்கக்கட்டுக் கட்டிய கண்ணாடிக் கம்பிகளை தன்கடைக் கெதிரில் வெளியில் தெரியும்படி சாதுர்யமாய்ப் புதைத்துவிட்டான். பாதை காயவே கண்ணாடிக் கம்பியை நன்றாய் பிடித்துக்கொண்டது. அவ்வழியாய்ப் போகிறவர்கள் எல்லாரும் அதைக்கண்டு அதை எடுக்கக் குனிந்து ஏமாந்துபோனார்கள். கடைக்காரர்களுக்கு இது ஒரு வேடிக்கையாக இருந்ததோடு தங்கள் கடையையும் விளம்பரப் படுத்தினதாயிற்று.

### A Tailor's Advertisement.

ஒரு தையல்காரனுடைய விளம்பரம்.—ஜெர்மெனியிலுள்ள ட்ரெஸ்டன் பட்டணத்தில் ஒரு தையல்காரன் ஸமீபத்தில் வெகு ஸாமர்த்யமான விளம்பரம் ஒன்று செய்தான். அவன் தன்னுடைய ஸர்க்யுலர்களில் ரிஸர்வு ஸைன்யத்தார்களுக்குத் தன்னுடைய மிலிட்டெரி தையல் வேலைகள் ரொம்ப ச்லாக்யமானவை என்பதை விவரித்து அவைகளை "ஸைன்யம் கூட்டுவதற்காக" என்று அச்சடித்தபோலி உத்யோகக் கவர்களில் போட்டு ஷை ரிஸர்வு ஸைன்யத்தார்களுக்கு அனுப்பினான். [யுத்தகாலம் தவிர மற்ற காலங்களில் வேண்டாத போர்வீரர்களைத் தங்கள் தங்கள் தொழில்களைச் செய்துகொண்டிருக்கவிட்டு யுத்தகாலத்திலும், யுத்தம் ஸமீபிக்கும்போதும் கூப்பிட்டால் வரக்கடமைப்பட்டவர்கள் "ரிஸர்வ்" போர் வீரர்கள் என்று சொல்லப்படுவார்கள்.] கடிதங்களைக் கொண்டுபோய்க் கொடுப்பவர்கள் மிலிட்டெரி யூனிபாரம் (உடுப்பு) போட்டுக் கொண்டிருந்தார்கள். அவர்கள் ஏககாலத்தில் பல ஜெர்மன் பட்டணத்தில் கடிதங்கள் கொடுத்தார்கள். அக்காலத்தில் ஐரோப்பிய யுத்தமும் ஸைன்யம் கூட்டுவதும் ரொம்பப்பேச்சாகஇருந்ததால், ரிஸர்வு வீரர்களில் வெளியூருக்குப் போயிருந்தவர்களின் மனைவிகள் இந்தக்கவர்களைக் கண்டவுடன் நடுநடுங்கிவிட்டார்கள். விளம்பரம் செய்த தையல்காரனோ தன் கார்யத்தை ஸாதித்துக் கொண்டான். எப்படியென்றால் சிலர் சொல்லுகிறபடி விளம்பரத்தின் முக்ய நோக்கம் வ்யாபாரியின் பெயரை ஜனங்கள் மறக்காமல் நினைத்துக்கொண்டிருப்பதே!

### London Business men.

லண்டன் வ்யாபாரிகள்.—லண்டனிலுள்ள வ்யாபாரிகள் ஹோடலில் ஆபீஸ் நடத்தும் வழக்கம் கொஞ்சகாலமாய் ரொம்ப அதிகரித்துவிட்டதென்று ஒரு இங்க்லீஷ் பத்ரிகை கூறுகிறது. அதிக ஸௌகர்யங்கள் அமைந்துள்ள ஆபீஸுகளைக் காட்டிலும் ஹோடல்களில் உட்கார்ந்து கம்பெனி ஸம்பந்தமான கார்யங்களைப் பேசிமுடிப்பது ரொம்ப லாபமாயிருக்கிறதென்று அவர்கள் கண்டுகொண்டிருக்கிறார்கள். அவர்கள் வ்யாபாரிகள் முதலானவர்களுடன் ஏதாவது வ்யாபாரத்தைப்பற்றிப் பேசவேண்டுமானால் மத்யானம் சிற்றுண்டி காலத்தில் ஹோட்டலில் வந்து பேசலாமென்று தெரிவித்து அப்படியே நல்ல சாப்பாடும், சாராயமும் சாப்பிட்டும் குடித்தும் தங்கள் முக்யமான கார்யங்களைப் பேசிமுடித்துக்கொள்கிறார்கள். ஹோட்டலில் சிற்றுண்டி சாப்பிட்டுக்கொண்டும் காபி, சாராயம் முதலிய பானங்கள், சுருட்டுகள் முதலியவை குடித்துக்கொண்டும் வ்யாபார அலுவல்களைப் பற்றிப் பேசுவதில் மூன்று மணிநேரம் கழிப்பது அபூர்வமல்ல. சிலர் ஆபீஸைவிட ஹோடலில் அதிகலாபகரமான கார்யங்களைப்பேசி முடிக்கிறார்கள். வேறொருவித வ்யாபாரிகள் தமக்கு ஆபீஸு இருந்தாலும் ஒரு ஹோடலையன்றிப் பல ஹோடல்களில் தங்கள் வ்யாபார நடவடிக்கைகளை நடத்துகிறார்கள். அவர்கள் தமது கடிதங்களை ஹோடலினுடைய நோட்பேபரில் எழுதுகிறது வழக்கமாம். சிலஸமயங்களில் தமக்கு கௌரதையும் செல்வாக்கும் உண்டென்று காட்டிக்கொள்ள இப்படிச் செய்வதுண்டு. தமது வ்யாபார நடவடிக்கைகளை நடத்துவதற்காகவே ஹோடலுக்குக் காலைச் சாப்பாட்டுக்குப் போவதுமுண்டு. அவர்களுக்கு வ்யாபாரப் பேச்சு இல்லாத சாப்பாடு மிக அரிது என்று சொல்லலாம்.

# SCIENCE, MACHINERY AND INVENTION.

## சாஸ்த்ரமும், யந்த்ரங்களும், நூதன கற்பிதமும்.

### Artificial Cow's Milk.

செயற்கைப் பசும் பால்.—ஜெர்மெனியில் மெய்ன் நதியோரமாயுள்ள ப்ராங்க் பர்ட் என்னும் பட்டணத்து ரஸாயனிகள் மூன்றுபேர் தங்களுடைய ரஸாயன சாலையில் சேர்க்கைப்பால் செய்யும் முறையைகண்டு பிடித்திருக்கிறார்களாம். அப்படி செய்யப்பட்ட பாலை அநேக சாஸ்த்ரிகள் குடித்து சோதனைசெய்து பார்த்ததில் குடிப்பதற்கு இனிமையா யிருக்கிறதென்றார்களாம். இந்தப் பாலை லண்டனில் செய்து புட்டி 2-அணுவாக விற்கவேண்டுமென்று உத்தேசித்திருக்கிறார்கள். இந்த செயற்கைப்பால் ஸ்தாவரப் பொருள்களிலிருந்து செய்யப்படுகிறது. இந்த ஸ்தாவரப் பொருள்களை யந்த்ரத்தாலாகிய செயற்கைக் குடலில் ஜீரணம் செய்து பாலாக்கப்படுகிறது. பசுவின்பாலைக் குடிப்பதில் ட்யூபர்க்குலாவிஸ் என்று சொல்லப்படும் ஒருவிதவ்யாதி உண்டாகிறதாம். அப்பேர்ப்பட்ட வ்யாதி இந்த செயற்கைப்பாலால் உண்டாக இடமில்லை என்றும் சொல்லப்படுகிறது. இது நமது இந்தியாவுக்கு எப்பொழுது வருமோ தெரியவேண்டும்.

### Heart Alive.

உயிரோடிருக்கும் ஹ்ருதயம்.—ராக்பெல்லர் இன்ஸ்டிட்யூட்டைச் சேர்ந்த டாக்டர் அலெக்ஸெப்காரி என்னும் ஒரு வாலிப ப்ரெஞ்ச் சாஸ்த்ரீ ஒரு கோழிக்குஞ்சின் தேகத்திலிருந்து அதன் ஹ்ருதயத்தை வெளியிலெடுத்து அதை 3 மாஸகாலம் உயிரோடு அடித்துக்கொண்டிருக்கும்படி செய்திருக்கிறாராம்.

### Milking Machines in Australia.

ஆஸ்ட்ரேலியாவில் பால்கறக்கும் யந்த்ரங்கள்.—ஆஸ்ட்ரேலியாவுக்குப் பக்கத்திலுள்ள ந்யூஸீலண்டு தீவில் பால்கறக்கும் யந்த்ரங்கள் ஸுமார் நான்கு வருஷத்துக்குமுன்பு உபயோகத்தில் வந்தன. அந்த யந்த்ரங்களைச் சீர்திருத்தி வ்ருத்திசெய்து ஆஸ்ட்ரேலியாவில் இப்பொழுது ஸாதாரணமாய் உபயோகித்து வருகிறார்கள். நெய், பால், வ்யாபாரஞ்செய்கிறவர்களுக்கு இவைகளை உபயோகிப்பதால் காலமும், ச்ரமமும் ரொம்ப குறைகிறதாம். ஆஸ்ட்ரேலியாவில் விவஸாயப் பொருள்காட்சிகளிலெல்லாம் இந்த யந்த்ரங்களை உபயோகித்துக் காட்டுகிறது வழக்கமாம். இரண்டுமணி நேரத்திற்குள் 100 பசுக்களுக்கும் அதிகமாக பால்கறக்க முடிகிறதாம். இந்த யந்த்ரங்களை உபயோகிப்பதில் பால் கறப்பது சீக்ரமாயும் குறைந்த செலவிலும் ஆகிறதோடுகூட கையால் கறப்பதைவிட பால் அதிக சுத்தமாயும், தேகஸுகத்துக்கு எடுத்ததாயுமிருக்கிறது. கன்றுக்குட்டி பால்குடிப்பது எப்படியோ அப்படியே அமிழ்த்துவதும், உரிஞ்சுவதும் இயற்கையைப்போலிருக்கும்படி யந்த்ரத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஒரு யந்த்ரத்தில் பால்கறக்கும்போது பால் பாத்ரம் நிரம்பிவிட்டால் பால்கறப்பதை தானாகவே நின்று விடவும்ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதாம்.

### Aluminium Kitchen Utensils.

அல்யூமினியத்தால் செய்த சமையல் பாத்ரங்கள்.—சமையல் பாத்ரங்கள் முதலியவைகள் செய்வதில் தகட்டு அல்யூமினியத்தை இப்பொழுது அடிக்கடி உபயோகித்து வருகிறார்கள். அல்யூமினிய ஸாமான்களை உபயோகப்படுத்தாமல் வைத்திருந்தாலுங்கூட அவைகள் துருப்பிடித்துத் தின்றுவிட்டதுபோல் ஆகிவிடுகின்றன. ஜெர்மெனியில் இது விஷயமாய் பரீக்ஷைகள் செய்ததில் அல்யூமினியத்தோடு ஆக்ஸிஜன் வாயு சேருவதால் துருப்பிடித்தது போலவோ அல்லது உப்புப்பூத்தது போலவோ ஆகிவிடுகிறது என்று தெரியவருகிறது. மேலே துருப்பிடித்திருப்பதை எடுத்துவிட்டால் அதிக ஆழம் தின்றிருப்பது கண்ணுக்குத் தெரிகிறது. மேலேயிருக்கும் துருவை சோதித்துப் பார்த்ததில் அதில் அல்யூமினியம், சுண்ணும்பு, ஸிலிகா, மாக்னீஷ்யா என்னும் பொருள்கள் கலந்திருந்தன வென்று தெரிகிறது. அல்யூமினியம் தகட்டில், நீராவியைக் குளிரவைத்து எடுத்த ஜலத்தையாவது, ஸாதாரண ஜலத்தையாவது படும்படி விட்டுவைத்திருந்ததில் அல்யூமினியம் கொஞ்சம் சீக்ரமாகவே துருப்பிடித்துவிட்டது. சிறிது காலம் தண்ணீர் படும்படிக்கும், சிறிதுகாலம் காற்றுப்படும்படிக்கும் வைத்திருந்ததில் அவ்வளவு வேகமாகத் தின்றுவிடவில்லை. தண்ணீரால் துருப்பிடிப்பதற்கு ஜலத்தில் ஆக்ஸிஜன் வாயு இருக்கவேண்டுமென்று தோன்றுகிறது. அதோடு உஷ்ணமும் கரியமிலவாயுவும் ஸம்பந்தப்பட்டால் அல்யூமினியம் ரொம்பவும் பாதிக்கப்படுகிறது.

164

# LAW.
# சட்டம்.

## Obscene Publication.

ஆபாஸமான ப்ரசுரம்.—

சென்ற ஸெப்டம்பர்-மீ௳ த்து ஸஞ்சிகையில் "காவடிச்சிந்து" "விறலிவிடுதூது" என்னும் புஸ்தகங்களில் இடக்கர் வார்த்தைகளிருக்கின்றன வென்று போலீஸார் அவைகளைப் பதிப்பித்த அச்சுக்கூடத்தார் மேல் குற்றம் சாட்டியிருந்ததாகத் தெரிவித்திருந்தோம். எவை ஆபாஸமான புஸ்தகங்கள், எவை ஆபாஸமான புஸ்தகங்கள் ஆகா, என்பவைகளைப்பற்றி கல்கத்தா ஹைகோர்ட்டில் ஸமீபத்தில் ஒருதீர்மானம் செய்யப்பட்டது. நமது நேயர்கள் அறியும்பொருட்டு அந்தத் தீர்மானத்தை கீழே மொழிபெயர்த்துத் தருகிறோம்.

ஒரு புஸ்தகம் ஆபாஸமானதா இல்லையா என்பதை நிர்ணயிக்க ஆபாஸமானதென்று சொல்லப்படும் புஸ்தகமானது அதை வாசிக்கக்கூடிய துன்மார்க்க ஸ்வபாவமுள்ளவர்களின் மனஸைக் கெடுத்து கெட்ட வழிகளில் மாற்றக்கூடியதாய் இருக்கிறதாவென்பது தான் பரீக்ஷை. ஒரு புஸ்தகமானது ஆண்பெண் இவர்களில் சிறியோர்களுடையவும், ரொம்ப வயஸு அதிகமான பெரியோர்களுடையவும், மனவில் துன்மார்க்கமும் காமமுமான எண்ணங்களை நிச்சயமாய் உண்டு பண்ணக்கூடுமானால், அந்தப் புஸ்தகத்தை ப்ரசுரித்தவரின் நோக்கம் குற்றமில்லாததாயும், புகழத்தக்கதாயு மிருந்தாலும் அவர் புஸ்தகத்தை வெளியிட்டது குற்றமேயாகும்.

ஒரு மதஸம்பந்தமான அல்லது இலக்கியஸம்பந்தமான புஸ்தகத்தில் ஆக்ஷேபணைக்கிடமான சில வாக்யங்கள் இருப்பதனால் மாத்ரம், பினல்கோடு 292-வது ஸெக்ஷன்படி ஆபாஸமான புஸ்தகமாகாது. ஏனென்றால் அந்த விதமான புஸ்தகங்கள் ஒருவருடைய நல்ல நடத்தையை மாற்ற அல்லது கெடுக்கக்கூடிய ஸ்வபாவ முள்ளவையல்ல.

மதஸம்பந்தமான புஸ்தகத்திலுள்ள ஆக்ஷேபனைக்கிடமான பாகங்களை எடுத்துத் தனியே அச்சிட்டிருக்கிறது. அந்தப் புஸ்தகம் மனிதஜாதியின் துர்நடத்தையைக் குறிப்பது போன்றதாகிய, மனிதஜாதியின் ந்யாயங்களால் நன்மை தீமை நிர்ணயிக்கப்பட வேண்டிய விஷயங்களைப்பற்றிச் சொல்லுகிறது, துன்மார்க்க ஸ்வபாவ முள்ளவர்களின் மனஸை மாற்றிக்கெடுக்கக்கூடிய தன்மையுள்ள புஸ்தகமாயிருக்கிறது. அப்படியானால் அந்தப் புஸ்தகம் மதஸம்பந்தமான புஸ்தகத்திலிருந்து எடுக்கப்பட்டாலும் புஸ்தகத்தை ப்சுரம் செய்தது நியாயமாகாது.

என்றாலும், ஆக்ஷேபணைக்கிடமாகத் தோன்றுகிற ஒருகதை ஒரு மதஸம்பந்தமான புஸ்தகத்திலிருந்து எடுத்து அச்சிடப்பட்டுள்ளது. ஆனால் அந்தக் கதையில் மனுஷஜாதியின் ந்யாய அந்யாய விதி ப்ரமாணங்களால் நிர்ணயிக்கக்கூடாத நடத்தையுடையவர்களைப் பற்றி சொல்லப்பட்டிருந்தால் அது ஆபாஸமான புஸ்தகமாகாது. ஏனென்றால் அந்தக் கதை மதஸம்பந்தமுள்ளதாதலால், கதையில் விவரிக்கப்பட்டிருக்கும் செய்கையும் நடத்தையும் உடையவர்களினுடைய தெய்வீகத்தில் நம்பிக்கையுள்ளவர்களுடைய மனவில் கெட்ட எண்ணங்களை உண்டாக்காது.

ப்ரஸ்தாப புஸ்தகம் ஒரு செய்யுள் ப்ரபந்தம். அது உரியாபாஷையில் ப்ரசுரம் செய்யப்பட்டது. அந்த ப்ரபந்தமானது தெய்வீகமானவர்கள் என்றும், அவர்கள் செய்கை தெய்வீகம் என்றும் விவரிக்கப்பட்டிருக்கிற ராதா, க்ருஷ்ணன் (இவர் 5-வயது பையனாககாட்டப் பட்டிருக்கிறார்.) இவர்களுடைய லீலைகளைப்பற்றிச் சொல்லுகிற ஒரு கதை. அது தன் மட்டில் பூர்த்தியாகவே யிருக்கிறது. அந்தக்கதை உரியா ஜனங்களுடைய புண்ய நூலாகிய உரியா பாஷையிலுள்ள ஹரிவம்சத்திலிருந்து எடுக்கப்பட்டது. அதில் கூறப்பட்ட செய்கைகளும் கருத்துகளும் ஹரிவம்சத்திலுள்ளவை போலவே இருக்கின்றன. புஸ்தகத்தின் நடையானது ஹரிவம்சத்திலுள்ள நடையை விட அதிக ஆக்ஷேபணைக்கிடமானதா யில்லை. அந்தப் புஸ்தகம் ஞானபரமானதும் ரூபகாலங்காரமானதும் மதஸம்பந்தமானதுமான ஒரு பழைய புஸ்தகம். அநேகம்தடவை வெளியிடப்பட்டு ஆக்ஷேபணை செய்யப்படாமல் ரெஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கிறது.

அந்தப் புஸ்தகம் உரியாஜாதியில் பெரும்பாக மானவும், ராதாவும் க்ருஷ்ணனும் தெய்வீகமானவர்களென்று நம்புகிறவர்களும், அவர்கள் செய்கைகளை துன்மார்க்கமென்று நினைக்காதவர்களுமான ஹிந்துக்களுக்காக எழுதப்பட்டிருக்கிறதென்று தெரியவருகிறது. ஆகையால் ப்ரஸ்தாப புஸ்தகம் ஆபாஸமானதாகாதென்று தீர்மானிக்கப்பட்டது. (இ-லா-ரி-39-கல்கத்தா-377.)

165

# MEDICINE.

## வைத்யம்.

### To Measure Urine.

மூத்ரத்தை அளத்தல்.—வ்யாதிஸ்தரின் லக்ஷணங்களை யறிவதற்கு சிலஸமயங்களில் அவர் ஒரு தினத்தில் எவ்வளவு மூத்ரம் பேய்கிறூர் என்று அளந்து பார்ப்பதுண்டு. வ்யாதிஸ்தர் சிறு நீரை எப்படி சேர்த்து வைப்பதென்பதற்கு திட்டமான வழிகளைச் சொல்லிக்கொடுக்கவேண்டும். இல்லாவிட்டால் ஸரியாய் அளக்கமுடியாது. எப்படி சேர்த்து வைப்பதென்று தெரியாமல் வ்யாதிஸ்தர் முதல் நாள் ஒரு குறித்த காலம் முதல் (காலை 8-மணிமுதல் என்று வைத்துக்கொள்வோம்.) மறுநாள் காலை அதேமணி வரையில் தாம்விடும் சிறு நீரெல்லாம் சேர்த்துவைப்பார். இந்த அளவு 24-மணிநேரத்தில் உண்டாகும் சிறு நீரைவிட அதிகமாயிருக்கும். ஏனென்றூல் அளக்கத்தொடங்கின நேரத்துக்கு முன்னூலேயே மூத்ராசயத்தில் இருந்த சிறு நீரும் இதில் சேருகிறது. வ்யாதிஸ்தர் காலை எட்டுமணிக்கு சிறு நீர்விட்டால் அதை எடுத்துக்கொள்ளாமல் தூரக்கொட்டிவிட்டு அதற்குப்பிறகு மறுநாள் காலை 8 மணிவரையிலும் மறுநாள் காலை எட்டு மணிக்குவிட்ட சிறு நீரையும் சேர்த்துக்கொள்ளவேண்டும்.

### Drinking at Meals.

சாப்பிடும்போது தீர்த்தம் குடித்தல்.—சாப்பிடும் போது ஒரு டம்ளருக்குமேல்படாமல் தீர்த்தம் குடிக்கலாமென்றும், அதிகம் குடிப்பதால் பாதகமில்லையென்றும் வைத்யர்கள் சொல்லுகிறூர்கள். சாப்பிடும் போது சிறிதளவே ஜலம் குடிக்கவேண்டுமென்பதால், சாப்பிடும்போது ஜலமே குடிக்கக்கூடாது என்று வெகுகாலமாக சொல்லப்பட்டு வருகிறது. ஆனூல் இதை அநேகர் ஆக்ஷேபிக்கிறூர்கள். அதிகம் குடிக்கக்கூடாதென்பதற்குச் காரணமென்னவென்றூல், உணவை மென்று தின்னவேண்டியது அவச்யமாதலாலும், அதற்கு உமிழ்நீர் அவச்யமாதலாலும், அப்படிஉமிழ்நீர் உணவோடு கலக்காதபடி உணவை மென்று தின்னூமல் ஜலத்தைக்குடித்து விழுங்கிவிட்டால் ஒரு ஸமயம் தேகத்திற்கு கெடுதியுண்டாகும் என்பதே. எல்லாவிதமான காய்ச்சல்கள், தேகத்தில் எரிச்சல், ஆகாரம் ஸரியானபடி ஜீர்ணமாகாமை, கீல்வாயு முதலியவைகளெல்லாம், தேகத்தில் விஷமுள்ள வஸ்துகள் சேருவதால்தான் உண்டாகின்றன. சாப்பாட்டு நேரத்துக்கு இடையில் அதிகம் தீர்த்தம் குடிப்பதால் இந்த விஷமுள்ள (அதாவது தேகத்துக்கு கெடுதலான) பொருள்கள் வெளியேபோய் விடுகின்றன. தீர்த்தம் ரொம்ப குறைவாய்க் குடித்தால் தேகத்தின் அங்கங்கள் கெடுதியடைந்து பல வ்யாதிகள் உண்டாக ஹேதுவாகும்.

### House Dust.

வீட்டில் தூசி.—வீட்டிலுள்ள தூசி பலவழிகளில் சேருகிறது. நாம் உடுத்திக்கொள்ளும் துணிகளிலிருந்து மெல்லிய இழைகளில் சிறுபாகங்கள், நாள்பட்ட பஞ்சின் தூள்போல பறந்து வீட்டில் தங்குகின்றன. மேலும் ஜமக்காளம், திரைகள், சுவர்கள், மேல்தளம், ஸாமான்கள் இவற்றிலிருந்து தூசி உண்டாகிறது. அடுப்புகளிலிருந்து சாம்பல், வீட்டிலுள்ளோரிடத்திலிருந்தும் வீட்டிலுள்ள நாய் பூனை போன்ற செல்வப்ராணிகளின் மேலிருந்தும் விழும் மயிர், இறகுகளிலிருந்து விழும் சிறு துண்டுகள், ரொட்டி முதலியவைகளின் சிறு துணுக்குகள், நமது தேகத்திலிருந்து விழும் தூசிகள் இன்னம் அநேக விதங்களில் உண்டாகும் மெல்லிய பஞ்சுபோன்ற தூசுகள் ஆகிய இவைகளாலும் வீட்டில் தூசி ஏற்படுகிறது. இப்படி அநேக விதங்களால் உண்டாகும் தூசி தரையிலும், சுவர்களிலும், மேல்தளங்களிலும் தங்குகிறது. இன்னம் ஸாமான்களின் பேரிலும், நமது உடைகளின் பேரிலும் ஒட்டிக்கொள்ளுகிறது. வீட்டின் அறைகளில் இந்த தூசி அதிகரிக்கும்படி விட்டுவிட்டால் அறைகளிலுள்ள ஆகாயம் ஒருவித கெட்ட நாற்றமடைந்து விஷமுள்ள பாக்டீரியா முதலியவை உண்டாகின்றன. அப்படியே அதிககாலம் விட்டுவிட்டால் தூசியிலுள்ள இனூர்கானிக் அதாவது அனிந்திரிய வஸ்து ஒருவித மாறுபாடு அடைந்து சாக்கடை நாற்றத்தைபோல் கெடுதலுண்டாக்குகிறது. இந்த தூசியோடு நாம் வெளியிருந்துவரும்போது காலிலும் செருப்பு ஜோடுகளிலும், துணியிலும் ஒட்டிக்கொண்டு வரும்தூசியும் சேருகிறது. இந்த தூசியைத் தொலைக்க ஒரே வழிதான் இருக்கிறதென்னலாம். அதாவது தூசி உண்டாகும்போதெல்லாம் அதை ஸதா அப்புறப்படுத்திக்கொண்டிருப்பதே. அறைகளில் அதிக காற்று உலாவும்படியும், ஸூர்யவெளிச்சம் படவும் ஏற்பாடு செய்யவேண்டும். வென்னீர் தண்ணீர், ஸோப், துடைப்பதற்குத்துணி இவைகளைக்கொண்டு அடிக்கடி தூசியிருக்குமிடங்களை சுத்தம் செய்யவேண்டும்.

# FUN AND ANECDOTE.

## வேடிக்கையும் துக்கடாக்கதைகளும்.

### Weakness.

**தள்ளாமை.**—கிழவன்:—எனக்குப்பலம் ரொம்ப குறைந்துபோய் விட்டது. முன்னெல்லாம் ஒவ்வொரு நாள் காலையிலும் அந்தத் தெருவை ஒரு தரம் சுற்றிவருவேன். இப்பொழுது பாதிதூரம் போனவுடன் திரும்பிவந்து விடவேண்டியிருக்கிறது.

(தள்ளாமைக்கு மனஸூம் சில ஸமயங்களில் காரணமாயிருக்கிறது!)

### Observing Child.

**கவனமாய்ப் பார்க்கும் குழந்தை.**—தாயார் (குழந்தையைப் பார்த்து) தாதியை படுத்துக்கொள்ளப் போவதாகமுத்தமிடு. அவள் உன்னைப்படுக்கையில் கொண்டுபோய் விடுவாள்.

குழந்தை:—மாட்டேனம்மா; யாராவது அவளை முத்தமிட வந்தால் அறைகிறாள்.

தாய்:—ஏனடா, சும்மா பொய் சொல்லுகிறாய்?

குழந்தை:—பொய்யா? அப்பாவை வேண்டுமென்றால் கேளேன், பொய்யோ நிஜமோ என்று.

### Another Patient.

**இன்னொருவருக்கு வைத்யம்.**—ஒரு சிறு பையன் அகஸ்மாத்தாய் தன் தலையை சுவரில் இடித்துக்கொண்டான். அவனுடைய மாமன் அவன் வலியால் அழுவதைக்கண்டு விசாரித்து, "அழாதே, தலையில் முத்தமிடுகிறேன், வலியெல்லாம் போய்விடும்" என்றார். உடனே பையன் சிரித்துக்கொண்டு "அப்படியானால் சமையலறைக்குப்போவோம், வா, சமையல்காரிக்குப் பல்வலியாம்."

### A New Groom.

**ஒரு புதுக் குதிரைக் காஸ்தாரி.**—ஒரு கனவான் புது குதிரைக் காஸ்தாரி ஒருவனை வேலையில் அமர்த்தியிருந்தார். அவன் ஏதோ ஒரு பிழை செய்துவிடவே அவர் கோபமும் ஆத்ரமும் கொண்டு, "இதோ பார், இந்தமாதிரி செய்வதாயிருந்தால் ஸரிப்படாது. நான் என்ன மடையன் என்று எண்ணியிருக்கிறாய் போலிருக்கிறது" என்றார்.

"அந்த விஷயம் எனக்குத் தெரியாதய்யா; நான் நேற்றையதினந்தானே இங்கே வேலைக்கு வந்தேன்" என்றான் காஸ்தாரி.

### Cousins to Solomon.

**ப்ரகஸ்பதியின் பந்துக்கள்.**—ஒரு ப்ரவிஸித்தி பெற்றப்ரயாணி ஒரு ஊர்வழியாகப் போகையில் அங்கே தங்க நேரிட்டது. அவ்விடத்தில் வித்யாகர்வமுள்ள ஒருவர் தமது வித்யாஸாமர்த்ய மஹத்தையும் ப்ரயாணியிடம் காட்டிப் பெருமை பேசினார். ப்ரயாணி கொஞ்ச நேரம் பொறுமையுடன் கேட்டுப்பின்பு பொறுக்கமாட்டாமல், "ஸ்நேகிதரே, நாமிரண்டு பேரும் லோகத்தில் அறியவேண்டியவைகளை யெல்லாம் அறிந்திருக்கிறோம்" என்றார். அந்த வித்யாகர்வி தம்மை புகழ்கிறதாக நினைத்து ஸந்தோஷப்பட்டு "அதெப்படி" என்றார்.

ப்ராயாணி:—"நீர் முட்டாள் என்பதைத்தவிர எல்லாம் உமக்குத் தெரியும், அந்த விஷயம் எனக்குத் தெரியும்."

### Twenty-one Sons Meeting.

**ஒருவருடைய 21 புத்ரர்கள் முதல்தடவையாக ஸந்தித்தல்.**—மிஸ்ஸஸ் கார்பீல்ட் என்னும் வயது சென்ற ஸ்த்ரீக்கு சென்ற ஜனவரிமீ 18உ யன்று பிறந்தநாள் கொண்டாட்டம் நடந்தபோது அதற்காக வெவ்வேறு இடங்களிலிருந்து அவளுடைய 21 புத்ரர்கள் வந்திருந்து ஒருவரை ஒருவர் முதல் தடவையாக ஸந்தித்தார்கள். அவர்களில் சிலர் மற்றவர்களை அதற்குமுன் பார்த்ததேயில்லையாம். புத்ரர்கள் எல்லாரும் வயது சென்றவர்கள். இரண்டுபேர் கனடாவில் பழமரங்கள் வைத்து ஜீவனம் செய்துகொண்டிருந்தார்கள். மற்றவர்கள் போர்வீரர்கள். அவர்கள் இந்த சுபநாளுக்கென்று ப்ரத்யேகமான பர்லோலீவு பெற்றுக்கொண்டு வந்திருந்தார்கள். இப்படி ஸந்தித்ததில் விசேஷம் என்னவென்றால் தாயாரானவள் சில குமாரர்களை ஒருவருக்கொருவர் அறிமுகம் செய்துவைக்கவேண்டியிருந்ததென்பதே. அவர்களுடைய ஸந்திப்பு அன்யர்களுடைய ஸந்திப்புபோல் இருந்தது. உதாரணமாக, மூத்தபுத்ரர் தம்முடைய கடைசி இரண்டு ஸகோதரர்களை அன்றையதினம் முதல் தடவையாகப் பார்த்தார். அவர் மற்றவர்கள் பிறப்பதற்கு முன்னால் தூரதேசங்களுக்குப் போய் விட்டார். வெள்ளிபோல் தலைமயிர் நறைத்துள்ள கிழவிதான் எல்லாரையும் இன்னாரென்று அறியக்கூடியவளாயிருந்தாள். அவர்கள் எல்லோரும் அன்றையதினம் நாடகசாலைக்குச் சென்றார்கள். அவர்கள் ஒரு வரிசையில் பெரும்பாகத்தை யடைத்துக்கொண்டார்கள். பிறர் ஒருவரும் கவனியாதிருக்கும்படி இரண்டு மூன்று பேராய் நாடகசாலைக்குப் போனார்கள். ஆனால் நாடகத்துக்கு வந்திருந்தவர்களுக்கு இவர்கள் இன்னாரென்று தெரிந்துவிட்டது. நாடகத்தில் "இன்று எனக்கு 21 வயது" என்ற பாட்டுப்பாடப் பட்டபோது வந்திருந்தவர்களெல்லாரும் சேர்ந்துசிரித்துக்கொண்டு பாடினார்களாம்.

# CURIOSITIES.
## விநோதங்கள்.

### Japanese Story Tellers.

ஜப்பான் தேசத்தில் கதை சொல்பவர்கள்.—ஜப்பான் தேசத்திலுள்ள டோக்யோவில் கதைசொல்வதையே தொழிலாக வுடையவர்கள் 600 பேர் இருக்கிறார்களாம். அவர்கள் வீடுவீடாய்ச் சென்று மணிக்கு $2\frac{1}{2}$ அணா வீதம் வாங்கிக்கொண்டு கதை சொல்லுகிறார்களாம்.

### A Toad inside a Mud Wall.

மண்சுவரினுள் இருந்த ஒரு தேரை.—கான்பூர் வுலன் மில்ஸ் கம்பெனியார் தங்களுடைய பழைய கட்டிடமொன்றை இடித்துக்கொண்டு வரும்போது வேலையாட்கள் மண்சுவரினுள் தேரையைக் கண்டார்களாம். அந்தக்கட்டிடம் 30 வருஷத்துக்கு முன்னால் கட்டப்பட்டதால் அத்தனை வருஷகாலமும் ஆகாரமும்காற்றுமில்லாமல் அவ்விடத்திலே இருந்திருக்கிறதென்பதற்கு யாதொரு ஸந்தேகமுமிராது. அதை ஒரு வீஸாவில் போட்டு மூடி பூமிக்குள் புதைத்துவைத்திருக்கிறார்களாம். இது ஆச்சரியமாகவே இருக்கிறது.

### How a Novel was Advertised.

ஒரு நாவலை விளம்பரப்படுத்தின விதம்.—ஜெர்மனியில் ஒரு நாவல் புஸ்தகத்தை விளம்பரம் செய்யப்பின்வருமாறு யுக்திசெய்தார்கள். ஒரு பெரியதனவான் கல்யாணம் செய்துகொள்ள இஷ்டப்படுகிறாரென்றும், அவருக்கு அந்த கதைப்புஸ்தகத்தில் வர்ணித்திருக்கும் கதா நாயகியைப்போல் பெண்வேண்டுமென்றும் புஸ்தகம் அச்சிட்டவர் விளம்பரம் செய்தார். ஜெர்மனியிலுள்ள கல்யாண வயஸுள்ள ஒவ்வொரு பெண்ணும் அந்தக் கதா நாயகி எப்படிப்பட்டவள் என்று பார்ப்போம் என்று புஸ்தகத்தை வாங்கினார்களாம். இதனால் புஸ்தகம் நன்றாய் விலையாயிற்று.

### Smallest Cow.

மகாசிறிய பசு.—பாரிஸ் நகரத்தில் போடி பொலோனிலுள்ள ஒரு ஹோட்டலில் மகாசிறிய பசு ஒன்று இருக்கிறதாம். அதற்கு வயது 5–ஆகியும் இரண்டடி உயரத்துக்கு சற்று குறைவாக இருக்கிறதாம். அது விநோதப் பொருளாக வைத்திருப்பதற்கன்றி வேறொன்றுக்கும் பயன்படாது. அது விசித்ரமான ப்ராணியாயிருப்பதால் அதைக் கசாப்புக்கடையில் கொன்றுவிடவும் ஹோடல் காரர்களுக்கு விருப்பமில்லையாம்.

### A Child Swallowing an Iron Screw

ஒரு குழந்தை இரும்பு ஆணியை விழுங்கி விட்டது.—ஒன்றரை வயஸுள்ள பார்த்தஸாரதி என்னும் ஒரு குழந்தை சென்ற 10௳ யன்று காலையில் $1\frac{1}{2}$ அங்குல நீளமுள்ள இரும்பு ஸ்க்ரு ஆணியை யாதொரு கஷ்டமுமில்லாமல் விழுங்கிவிட்டது. ஆணியானது தொண்டையில் காலே அரைக்கால் அங்குலம் குருக்களவும், தொண்டையின் அடியில் $\frac{3}{4}$ அங்குலம் சுற்றளவும் உள்ளது. நுனிகூர்மையாயிருந்தது. குழந்தையை ஜெனரல் ஹாஸ்பிடலுக்குக் கொண்டுபோய் எக்ஸ்ரேயால் பரிசோதித்து போடோ எடுத்ததில் அந்த ஆணி குழந்தையினுடைய குடலின் அடிப்பக்கத்தில் இருப்பதாகத் தெரியவந்தது. மறுநாள் மறுபடியும் "எக்ஸ்ரே" யினால் போடோ எடுத்ததில் அந்த ஆணி பெருங்குடலுக்கு வந்து விட்டதாகத் தெரிந்தது. ஆணியை விழுங்கின நாலாம் நாள் ஆஸனத்வாரத்தின் வழியாக ஜலம் பீர்ச்ச ஆணி ஸுலபமாய் வெளியே வந்துவிட்டது. ஸர்ஜன்கள் ஆணியை வெளியே எடுக்க ஆபரேஷன் செய்யாவிட்டால் ஏதாவது கெடுதல்கள் நேரிடுமோ என்று பயப்பட்டார்கள்.

### Strange Twins.

ஓர் அபூர்வ இரட்டையர்கள்.—அமெரிக்காவிலுள்ள ஒஹியோ நகரில் ஸமீபத்தில் ஓர் இரட்டையர்கள் இறந்தார்கள். இவர்களுக்கு மில்லீ—க்ரீஸ்டைன் என்று பேர். இரண்டு தலைகளும், இரண்டு ஜோடி கால்களும் ஒரே உடலும் உள்ளவர்களாய் இவர்கள் இருந்தார்கள். இவர்கள்ஸ்த்ரீகள். ஒருத்தி இறந்த பிறகு மற்றொருத்தி சில மணிநேரம் உயிருடன் இருந்து பிறகு அவளும் இறந்துபோனாள், இவர்களுக்குச் சுமார் 60 வயதிருக்கலாம். அமெரிக்காவில் அடிமை வர்த்தகம் நடந்த காலத்தில், இவர்களை ஒருவர் 8000—பவுன் கொடுத்து வாங்கி உலகமெல்லாம் கொண்டுபோய் கண்காட்சியாகக் காண்பித்து வந்தார். பிலடல்பியா நகரில் இவர்களைக் காட்டிக்கொண்டிருக்கையில், இவர்களை யாரோ திருடிக்கொண்டு போய்விட்டான். பிறகு பல வருஷங்களாயும் இவர்களைப் பற்றி ஸொந்தக்காரனுக்கு ஒரு ஸமாசாரமும் தெரியவில்லை. முடிவாய் இவர்களை லண்டனில் கண்டுபிடித்து கைப்பற்றிக் கொண்டு, மறுபடியும் அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் காட்டிவந்தான்.

# HINTS AND RECIPES.

## யுக்திகளும் முறைகளும்.

### Reducing the Brittleness of Glass.

கண்ணாடியின் உடையும் தன்மையைக் குறைத்தல்.—சூடாயிருக்கும் கண்ணாடியை திடீரென்று குளிர வைப்பதால் அது உடைய ஹேதுவாகிறது. கொஞ்சம் உப்புக்கரைத்த ஜலத்தில் கண்ணாடியைப் போட்டுக்கொதிக்கவிட்டால் கண்ணாடிக்கு உறுதி ஏற்படுகிறது. திடீரென்று சுடவைத்தாலும் அதற்கு அதிக கெடுதி உண்டாவதில்லை. லாப ரெட்டரிகளில் அதாவது சாஸ்த்ரசாலைகளிலுள்ள கண்ணாடி ஸாமான்களையும், விளக்குகளின் சிம்ணி, க்ளோப் முதலியவைகளையும் மேலே சொன்னபடி உப்பு ஜலத்தில் போட்டுக் காய்ச்சினால் அவைகளுக்கு உறுதி ஏற்படும். அதிக சேதம் ஏற்படாது.

### Lifting Pig Iron with a Magnet.

இரும்புப் பாளங்களை காந்தத்தால் தூக்குதல்.—உலைக்களத்தில் இரும்புப் பாளங்களைத்தூக்குவதற்கு தூக்கும் காந்தத்தை உபயோகிப்பதுண்டு. ஸாதாரணமாய் இரும்புப்பாளங்களை பூமியில் படுக்கப் போட்டு ஒன்றன் மேலொன்றாய் அடுக்கி வைப்பது வழக்கம். இதனால் காந்தம் அநேக பாளங்களைத் தூக்க முடிவதில்லை. இப்படிச் செய்வதால் 1000-ராத்தல் நிறையுள்ள பாளங்களைத் தூக்கும். அவைகளை செங்குத்தாய் அடுக்கிவைத்தால் காந்தமானது அநேக பாளங்களை எட்ட முடிகிறது. ஒரு காந்தம் இப்பொழுது 2000-ராத்தல் நிறையுள்ள பாளங்களைத் தூக்கமுடிகிறதாம்.

### Hot Water in Glass.

கண்ணாடிப் பாத்ரத்தில் வெந்நீர் விடுதல்.—கண்ணாடிப் பாத்ரத்தில் வெந்நீரை விட்டால் கண்ணாடி உடைந்து போவதுண்டு. ஆனால் பாத்ரத்தில் ஒரு வெள்ளி ஸ்பூனை (கரண்டி) ப்போட்டிருந்தால் கண்ணாடி உடைவது அரிது. இதற்குக் காரணம் என்ன? கண்ணாடியில் வெந்நீரை ஊற்றினவுடன் கண்ணாடியின் ஒரு பாகம் திடீரென்று ரொம்ப உஷ்ணமடைந்து போகிறதால் உடைந்துபோகிறது. ஆனால் அதில் வெள்ளி ஸ்பூனைப் போட்டால் ஸ்பூன் உஷ்ணத்தின் பெரும்பாகத்தை சீக்ரம் க்ரகித்துவிடுவதால் கண்ணாடிக்கு ரொம்ப அதிர்ச்சி ஏற்படுகிறதில்லை. வெள்ளிக்கு உஷ்ணத்தை க்ரகிக்கும் குணம் அதிகம் உண்டு.

### Preserved Bananas.

வாழைப்பழத்தைக் கோடாமல் பத்ரப்படுத்தல்.—வாழைப்பழத்தைக் கெட்டுப்போகாதபடி பத்ரப்படுத்தவேண்டுமானால் பின்வருமாறு செய்ய வேண்டும். வாழைப்பழம் நன்றாய் பழுத்தவுடன் அதன் தோலை உரித்துவிட்டு பழத்தை நீளப்போக்கில் நாலாக நறுக்கி வலை போலிருக்கும் தட்டிகளிலாவது அல்லது தட்டிபோன்ற முக்காலி அல்லது கட்டில்களிலாவது போட்டு வெயிலிலாவது, ரொட்டி சுடும் அடுப்பின்மேலாவது வைக்கவும். பழத்தின் சாற்றிலிருந்து வெண்மையான சர்க்கரைப்பொடி பழத்தின் மேல் படியும். பிறகு பழத்தை எடுத்து பத்ரமாய் வைத்துக் கொள்ளவும். அநேக வருஷங்களானாலும் பழம் கொடாமலிருக்கும்.

### To Get Rid of Caterpillars

கம்பளிப் பூச்சிகளைத் தொலைக்க.—செடிகளை அரித்துக் கெடுதல் செய்யும் கம்பளிப்பூச்சிகளைத் தொலைக்க ஒருவழி கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. (சல்லாது) லெட்யூஸ் கீரையை அவைகளுக்குத் தீனியாகப்போட்டால் அவைகள் வெகு ஸுலபமாக ஒழிந்து போகின்றனவாம். நாம் செய்ய வேண்டியதெல்லாம் என்னவென்றால் கம்பளிப்பூச்சிகளில் இரண்டொன்றைப் பிடித்துக் கொண்டு வந்து நாலு நாள் ஜலத்தில் ஊறவைத்திருந்த லெட்யூஸ் கீரையை அவைகளுக்குத் தீனியாகப் போடவேண்டியதே. கீரையை வேண்டிய அளவு தின்றவுடன் ஷை கம்பளிப்பூச்சிகளை மற்றவைகளோடு கலக்க விட்டுவிட வேண்டும். பாக்கி கார்யம் தானகவே ஆகிவிடும். இதற்குக் காரணம் என்னவென்றால் கம்பளிப்பூச்சிகள் ஜலத்தில் ஊறவைத்த லெட்யூஸ் கீரையைத் தின்றால் அவைகளுக்கு காலரா உண்டாகிறது; காலராகண்ட கம்பளிப்பூச்சி அந்த வ்யாதியை மற்ற பூச்சிகளுக்கும் பரவச செய்கிறது. "கம்பளிப்பூச்சி காலரா" கண்ட கம்பளிப்பூச்சி தீனி தின்பதை சீக்ரம நிறுத்தி விடுகிறது. அது பலஹீனமும் சோம்பலுமடைகிறது. பிறகு அது மரம், வேலி, சுவர், அல்லது ஏதாவது செங்குத்தான இடத்தில் ஏறி அங்கேயே நகராமல் தங்கி விடுகிறது. கொஞ்ச நேரத்துக்கெல்லாம் அதன் வாயிலிருந்து ஒருகருப்பு நிறமுள்ள த்ரவப்பொருள் வெளிப்படுகிறது. வரவர அதற்கு பலம் குறைந்து அதன் தேகம் தளர்ச்சி யடைந்து அதன் கால்களால் பிடித்துக் கொள்ள முடியாமல் போகிறது. பிறகு ஒன்றிரண்டு கால்களால இருக்குமிடத்தைப் பிடித்துக்கொண்டு, கருப்புத் தோல் சுருங்கிப் போய் இறந்து தொங்குகிறது.

# TAML LITERATURE.
## தமிழ்க் கல்வி.

### Essays and Lectures

வியாசங்களும் உபந்நியாசங்களும்.—மகிபாலன் பட்டி எம். சின்னையா செட்டியார் எழுதியது. இந்தப் புஸ்தகத்தில் கல்வி, ஆசார சீர்திருத்தம், பொதுவான பல நீதிகள் முதலியவைகள் எடுக்துக்கூறப் பட்டிருக்கின்றன. ஆசிரியர் தமது முகவுரையில் கூறியபடி நாட்டுக்கோட்டையார் வகுப்பில் அநேக சீர்திருத்தங்கள் செய்ய வேண்டுமென்னும் நோக்கத்துடன் இந்தப் புஸ்தகம் எழுதப்பட்டிருக்கிறது. அவர்களுக்கு மிகவும் ப்ரயோஜனப்படுமென் றெண்ணுகிறோம். இதன் விலை 12-அணா. வேண்டுவோர் ஆசிரியருக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளவும்

### A Practical Manual of Palmyra Leaf work

பனையோலை வேலை.—இது மோஸஸ் இஸ்ரேல் அவர்கள் எழுதியது. பள்ளிக்கூடங்களில் சிறுவர்களுக்கு கற்பிக்கப்படும் பனையோலை வேலையை விவரமாய்க் கூறுகிறது. ஆசிரியர் இதில் கூறப்படும் வேலைகளுக்கு பனையோலையைத் தயாரிக்கும் விதத்தைக் கூறிவிட்டு, தாம் எடுத்துக் கொண்ட 29 பொருள்களை பனையோலையால் எப்படிச் செய்கிற தென்பதை விவரித்துச் சொல்லுகிறார். இதில் ஸுமார் 80 'கருப்புப் பலகைச்' சித்ரங்கள் இருக்கின்றன. புஸ்தகம் தளமான காகிதத்தில் நன்ருய் அச்சிடப்பட்டிருக்கிறது. எலிமென்டரி ஸ்கூல் உபாத்யாயர்களுக்கு மிகவும் பயன்படுமே என்றெண்ணுகிறோம். இதன் விலை அணா-8. வேண்டுவோர், மோஸஸ் இஸ்ரேல், 21 பாதாள பொன்னியம்மன் கோவில் தெரு, வெப்பேரி, சென்னை, என்றெழுதிப் பெற்றுக் கொள்ளவும்.

### Kumara Sambava.

குமார ஸம்பவம்.—இந்தப் புஸ்தகம் பேர்பெற்ற ஆசிரியராகிய காலஞ்சென்ற பண்டிதர் எஸ். எம். நடேச சாஸ்த்ரியார் எழுதியது. வடமொழிக் கவிகளில் மிக மேன்மை பெற்றவராகிய காளிதாஸர் எழுதிய குமார ஸம்பவத்தில் முதல் எழு ஸர்க்கத்தின் மொழிபெயர்ப்பாகும். இதில் உமாதேவி உற்பவம் முதல் அவருடைய விவாகம் முடியசொல்லப்பட்டிருக்கின்றன. சாஸ்த்ரியார் தாம் எழுதிய மற்ற புஸ்தகங்களைப் போலவே இந்த நூலையும் ஸுலபமான நடையில் எழுதியுள்ளார். ஸதார நாட்டில் ஆந்து நிலத்தின் அதிபதியாகிய பாலஸாகிப் பண்டித ப்ரதிநிதி அவர்களால் வரையப்பட்ட ஆறு அழகான சித்ர படங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. பெதர் வெய்ட் பேபர் என்னும் உயர்ந்த கடிதத்தில் நன்ருக அச்சிடப் பட்டிருக்கிறது. இந்தப் புஸ்தகம் வாசிக்க இனிமையாயிருக்கிறது. யாவரும் வாசித்து ஆனந்திக்கலாம். வேண்டுவோர், ஜி. வி. லோகநாதம் ப்ரதர்ஸ், பௌண்ட்ரோட், மதராஸ், என்றெழுதிப் பெற்றுக் கொள்ளவும். விலை அணா 12.

### A Co-operative Hand Book

கூட்டுறவு நூல்.—கோவாபரேஷன் முயற்சி நமது நாட்டில் ஸுமார் 8-வருஷகாலமாக நடந்து வந்தும் அம்முயற்சியைப்பற்றி ஒரு புஸ்தகங்கூட இதுவரை வெளிவராதது ஒரு பெருங் குறையே. கூட்டுறவு நூல் என்று ஒருபுஸ்தகம் வெளிவந்ததால் அந்தக் குறை ஒருவாறு நீங்கிற்று என்னலாம். இந்தப் புஸ்தகம் மெஸ்ஸர்ஸ், டி. எஸ். ஸுப்ரமண்யன், பி.ஏ, பி.எல்., கே. எஸ். ஸ்ரீநிவாஸன், பி. ஏ., இவர்களால் இயற்றப்பட்டது. இது ஸுமார் 80 பக்கம் கொண்டது. இந்தப் புஸ்தகத்தில் ஆசிரியர்கள் கோவாபரேஷனைப்பற்றிப் பொது விவரங்களைக் கூறிவிட்டு இந்தியாவில் கோவாபரேஷன் எப்படி ஏற்பட்டதென்றும், கூட்டுறவு பாங்கிகளின் மூன்று பிரிவுகளையும் அவைகளின் தாரதம்யங்களையும் விவரிக்கிறார்கள். 5-வது, 6-வது அத்யாயங்களில் நகரபாங்கிகளையும் க்ராம ஸங்கங்களையும் பற்றிச் சொல்லப்படுகிறது. இந்தப் புஸ்தகத்தில் ஐக்ய நாணய ஸங்கங்களைப்பற்றிச் சொல்வதோடு, சரக்குகள் விற்பனை செய்யும் ஸங்கங்கள், மொத்தத்தில் வாங்கி மெம்பர்களுக்கு விற்கும் ஸங்கங்கள் முதலிய வேறு பலமுயற்சிகளையும் பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. இந்தப் புஸ்தகம் யாவருக்கும் பயன்படும் என்று நம்புகிறோம். இதன் விலை 6-அணா. வேண்டுவோர், ஸௌத் இண்டியன் ப்ரெஸ், 18, லிங்கி செட்டித்தெரு, ஜார்ஜ் டௌன் சென்னை, என்றெழுதிப் பெற்றுக் கொள்ளவும்.

# DIARY OF THE MONTH.

## மாஸ வர்த்தமானம்.

பிப்ரவரி௴ 13-தேதி.—

தோட்டக் கச்சேரி.—எச். எச். புதுக்கோட்டை ராஜா இன்று சென்னைப்பட்டணத்தில் ஸாயந்திரம் ஒரு தோட்டக்கச்சேரி செய்தார். எச். இ. கவர்னரும் லேடி பெண்ட்லண்டும் வந்திருந்தார்கள்.

14-தேதி.—

இந்து விவாக சீர்திருத்த ஸங்கம்.—ஷை ஸங்கத்தில் உழைத்துவரும் மிஸ் டென்னண்ட் என்பவர் இன்றையதினம் மைஸூரில் ஒரு பொதுஜனக் கூட்டத்தில் விவாகசீர்திருத்த விஷயமாய்ப் பேசினர். மீட்டிங்கின் முடிவில் ஷை ஸங்கத்தின் கிளை ஒன்று மைஸூரில் ஏற்படுத்தப்பட்டது.

16-தேதி.—

ரெட்டி கான்பரேன்ஸ்.—இன்றையதினம்கூடலூரில் முதல் ரெட்டி கான்பரென்ஸ் கூடிற்று. ஸுமார் 300 டெலிகேட்டுகள் வரையில் வந்திருந்தார்கள். ஆனரபில் ராவ்பகதூர் ஸுப்பராயலு ரெட்டியார் ப்ரெஸிடெண்டாக இருந்து ப்ரஸங்கம்செய்தார்.

பம்பாய் யூனிவர்ஸிடி.—பம்பாய் யூனிவர்ஸிடியின் கான்வகேஷன் இன்றையதினம் நடைபெற்றது. பம்பாய் கவர்னர் லார்ட் ஸைடென்ஹாம் அக்ராஸனம் வகித்து கான்வகேஷன் ப்ரஸங்கம் செய்தார்.

மெக்ஸிகோ கலகம்.—மெக்ஸிகோ குடியரசின் ப்ரெஸிடெண்டாகிய மாடீரோ இன்றையதினம் அரண்மனையில் கைதி செய்யப்பட்டார். ஜெனரல் ஹ்யூர்டா ப்ரெஸிடெண்டாக நியமிக்கப்பட்டார்.

18-தேதி.—

ப்ரான்ஸின் ப்ரேஸிடேண்ட்.—ப்ரான்ஸ் குடியரசின் ப்ரெஸிடெண்டாகத் தெரிந்தெடுக்கப்பட்டிருந்த மான்ஷ்யர் ரேமண்ட் பாய்ன்கரே இன்றையதினம் தமது உத்யோகத்தை வகிக்கத் தொடங்கினர்.

19-தேதி.—

மெக்ஸிகோ கலகம்.—ப்ரெஸிடெண்ட் மாடீரோ தமது ஸ்தானத்தை ராஜிநாமா செய்துவிட்டார்.

லாய்டுஜார்ஜின் வீடு.—நமது சக்ரவர்த்தியின் மந்த்ரிகளில் ஒருவராகிய மிஸ்டர் லாய்ட்ஜார்ஜின் க்ராமத்து வீடு வெடிகுண்டினல் நாசமடைந்தது. வீட்டுக்கு நேர்ந்த நஷ்டம் 7500-ரூபா யிருக்குமென்று மதிப்பிடப்படுகிறது. இது ஸ்த்ரீ ஸ்வதந்தரவாதிகள் செய்தகாரியம்என்றுசொல்லப்படுகிறது.

21-தேதி.—

வித்யாவிஷய தீர்மானம்.—இந்தியா கவர்னமெண்டார் வித்யா விஷயமாக ஒரு தீர்மானத்தை வெளியிட்டிருக்கிறார்கள்.

பாலகாட்டில் மீட்டிங்கு.—பாலகாட்டைச் சேர்ந்த சித்தூரில் வேத சாஸ்த்ர பாடசாலையில் ஒரு பொது ஜன மீட்டிங்கு நடந்தது. காலம் சென்ற ஜகத்குரு ஸ்ரீருங்கேரி ஸ்வாமிகள் முடிக்காமல் விட்டுப் போன தர்மகாரியங்களை முடிப்பதற்காக பணம் வேண்டுமென்று மடத்து ஏஜெண்டு ஸ்ரீகண்ட சாஸ்த்ரிகள் கேட்டுக்கொண்டார். கொல்லங்கோட்டுராஜா அக்ராஸனம் வகித்தார்.

ஒரு பொருள் காட்சி.—சென்னை அக்ரி ஹார்டிகல்சரல் ஸொஸைடியார் இன்றையதினம் புஷ்பம், பேர்ன்ஸ், பழங்கள், காய்கறிகள் இவைகளின் வருஷாந்தரக்காட்சியை நடத்தினார்கள்.

22-தேதி.—

புதுக்கோட்டைராஜாவின் வெள்ளி ஜூபிலி.—

இன்றையதினம் புதுக்கோட்டையில் எச். எச். ராஜாவினுடைய வெள்ளி ஜூபிலிக் கொண்டாட்டம் நிறைவேறிற்று. ப்ரஜைகளின் பேரால் ராஜாவுக்கு ஒரு அட்ரெஸ் வாசிக்கப்பட்டது. இன்று மாலையில் ராஜா அவர்கள் திருக்கோகரணத்துக்குப் பவனி சென்றார்.

23-தேதி.—

மெக்ஸிகோ கலகம்.—பழைய ப்ரெஸிடெண்டாகிய மாடீரோவும் அவருடன் கூட இருந்தவர்களும் நாஷனல் அரண்மனையிலிருந்து ஜெயிலுக்குக்கொண்டு போகப்பட்டபோது தப்பியோட ப்ரயத்தனப் பட்டதில் சுட்டுக் கொல்லப்பட்டார்கள் என்று மெக்ஸிகோவிலிருந்து வந்த தந்தி யொன்று தெரிவிக்கிறது.

25-தேதி.—

வைஸ்ராய்.—இன்றையதினம் வைஸ்ராய் டெல்லிக்கு வந்தார். அவர் தேகம் மெலிந்திருந்தாலும் தீவிரமாக ஸௌக்ய மடைந்து வருகிறார். இன்றையதினம் குதிரைக்காட்சியைப் போய்ப் பார்த்தார்.

26-தேதி.—

சக்ரவர்த்தியின் ஸெக்ரேடரி.—ஜார்ஜ் சக்ரவர்த்தியின் ஸெக்ரெடெரியாகிய லார்ட் நிாலிஸுக்குப் பதி

லாக ஸர் சார்ல்ஸ் கஸ்ட் ஸெக்ரெடரியாவர் என்று தெரிகிறது.

28-தேதி.—

**பப்ளிக் ஸர்விஸ் கமிஷன்.**—பப்ளிக் ஸர்விஸ் கமிஷன் மெம்பர்கள் இன்றையதினம் பம்பாய்க்கு வந்தார்கள். நாளையதினம் விசாரணை தொடங்குவார்கள்.

மார்ச்சுமீ 2-தேதி.—

**தீவிபத்து.**—இன்றையதினம் காலையில் ரங்கூனில் ஒரு பெரிய தீவிபத்து நேர்ந்தது. மரங்கள் விற்பனைக்கு வைத்திருந்தவை தீப்பட்டுப் போயின. நஷ்டம் ஸுமார் $2\frac{1}{2}$-லக்ஷம் ரூபாய் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது.

3-தேதி.—

**ஸ்வதேச ராஜாக்களின் கான்பரென்ஸ்.**—டெல்லியில் இன்றையதினம் ஸ்வதேசராஜாக்களின் கான்பரென்ஸ் நடந்தது. வைஸ்ராய் லார்ட்ஹார்டிஞ் கான்பரென்ஸைத் திறந்து வைத்தார். தேசமன்னச் சிறுவர்களுக்கு கல்வி ரொம்ப அவச்யமென்றும், அதை அவர்கள் பெறுவதற்கு ஏற்பாடுகள் செய்வதைப்பற்றி இந்தக் கான்பரென்ஸ் யோசிக்கவேண்டும் என்றும் சொன்னார். விந்திய மகாராஜா வந்திருந்த ராஜாக்களின் பேரால் ராஜப்ரதிநிதிக்கு நன்றி செலுத்தினார்.

4-தேதி

**ப்ரெஸிடெண்ட் வில்ஸன்.**—அமெரிக்காஐக்யமாகாணங்களின் ப்ரெஸிடெண்டாகத் தெரிந்தெடுக்கப்பட்டிருந்த டாக்டர் வில்ஸனும்,வைஸ் ப்ரெஸிடெண்டாகத் தெரிந்தெடுக்கப்பட்ட மிஸ்டர் மார்ஷலும் தங்கள் ஸ்தானங்களை வகிக்கத் தொடங்கினார்கள்.

**ஹிந்து விவாக சீர்திருத்த ஸங்கம்.**—இந்த ஸங்கத்தின் முதல் வருஷாந்தர மீட்டிங்கு இன்றையதினம் ஸாயங்காலம் சென்னை பச்சையப்பன் காலேஜ் ஹாலில் நடைபெற்றது. ஆனரபிள் மிஸ்டர் டி. ஸதாசிவய்யர் அக்ராஸனம் வகித்தார். வருஷாந்தர ரிபோர்ட் வாசிக்கப்பட்டது.

**திபேத்து.**—சில காலமாய் திபேத்திலில்லாமல் ப்ரிடிஷ் இந்தியாவில் தங்கியிருந்த டலாய் லாமா அவர்கள் சென்ற ஜனவரிமீ 23-தேதி திபேத்தின் முக்யபட்டணமாகிய லாஸாவுக்குள் நகரப்ரவேசம் செய்தாரென்றும், அந்த தேசத்தின் அரசாட்சியை நடத்தி வருகிறார் என்றும் இன்றையதினம் ஸமாசாரம் எட்டுகிறது.

6-தேதி.—

**பூகம்பம்.**—இன்றையதினம் ரங்கூனில் ஒரு பூகம்பம் உண்டாயிற்று. ஐந்தாறு ஸெகிண்டு வரையிலும் பூகம்பம் இருந்ததாம்.

7-தேதி.—

**பார்லிமெண்ட்.**—இன்றையதினம்முதல் பார்லிமெண்டின் மீட்டிங்குகள் சிலநாட்களுக்கு லீவாக நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றன.

10-தேதி.—

**பார்லிமெண்ட் திறக்கப்பட்டது.**—இன்றையதினம் பார்லிமெண்ட் திறக்கப்பட்டது. சக்ரவர்த்தி பார்லிமெண்ட் ஸபையைத்திறந்து வைத்து ப்ரஸங்கம் செய்தார். அதில் இந்தியாவைப் பற்றிப் பேசிய போது டெல்லி விபத்தைக்குறித்து அந்த சதியாலோசனை கடவுள் க்ருபையால் முற்றிலும் நிறைவேறாவிட்டாலும் வீணாக உயிர்ச்சேதம் நேர்ந்ததைப் பற்றி வருத்தப்படுவதாகவும், வைஸ்ராயும், லேடி ஹார்டிஞ்சும் தைர்யமாயிருந்ததைப் பற்றியும், மற்ற உத்யோகஸ்தர்கள் தங்கள் கார்யங்களை பதராமல் நிதானமாய்ச்செய்து முடித்ததை பற்றியும் ச்லாகிப்பதாகவும், அந்தக் கொடுஞ்செயலைக் கண்டித்தும், வைஸ்ராய்க்கு அனுதாபம் காட்டியும் ராஜாக்களும், ஜனங்களும் பேசினதையும் பற்றி ஸந்தோஷப்படுவதாகவும் சொன்னார்.

13-தேதி.—

**லெஜிஸ் லேடிவ் கௌன்ஸில்.**—இன்றையதினம் சென்னை லெஜிஸ் லேடிவ் கௌன்ஸில் கூடிற்று. சென்னை ராஜதானியின் 1913-14-ம் வருஷத்து வரவு செலவு கணக்கு ஸபையில் கொடுக்கப்பட்டது.

15-தேதி.—

**கல்கத்தா யூனிவர்ஸிடி.**—கல்கத்தா யூனிவர்ஸிடியின் வருஷாந்தரக் கான்வகேஷன் இன்றையதினம் கல்கத்தாவில் நடந்தது. வங்காளத்து கவர்னர் லார்ட் கார்மிகேல் அக்ராஸனம் வகித்தார். ஸுமார் 600-பேர்களுக்குப் பட்டங்கள் கொடுக்கப்பட்டன.

17-தேதி.—

**லார்ட் ஸைடன்ஹாம்.**—லார்ட் ஸைடன் ஹாம் பம்பாய் கவர்னராயிருந்த காலத்தில் அவர் செய்த நன்மைகளுக்கு அவருக்கு நன்றி செலுத்தும் பொருட்டு பம்பாயில் ஒரு பொது மீட்டிங் கூடிற்று. பம்

பாயில் ஏற்படுத்தப்போகிற வ்யாபாரக் காலேஜை அவர் பெயரால் ஏறபடுத்த வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது.

17-தேதி.—

வைஸ்ராய்.—வைஸ்ராய் முற்றும் சொஸ்தமடைந்ததை உத்தேசித்து அவருக்கு ஸந்தோஷம் காட்டுவதற்காக இன்று டெல்லியில் வைஸ்ரீகல் மாளிகையில் லெஜிஸ் லெடிவ் கௌன்ஸில் உத்யோகஸ்தர்களல்லாத மெம்பர்கள் கூடினார்கள். மெம்பர்களுக்காக ஆனரபில் ஸர். ஜி. எம். சிட்னுவிஸ் பேசினார். வைஸ்ராய் அவர்கள் தக்கவாறு பதிலளித்தார்.

வெடிமருந்துள்ள கடிதங்கள்.—இன்றையதினம் காலையில் கல்கத்தா ஜெனரல் போஸ்டாபீஸில் கடிதங்களுக்கு தேதி முத்ரைகுத்தும்போது இரண்டு கவர்களுக்குள்ளே மருந்து இருந்ததனால் வெடித்தன. ஸிம்லாவிலும் ஒரு கடிதம் இப்படியே வெடித்து ஒரு ஸார்ட்டருடைய கைகளும், முகமும் வெந்து போயினவாம். கல்கத்தா "ஸ்டேட்ஸ்மன்" ஆபீஸிலும் வெடிமருந்துள்ள ஒரு கடிதம் வந்தது. அதன் எடிடர் இது விஷயமாய் எச்சரிக்கை செய்யப்பட்டிருந்தால் கடிதங்களை ஜாக்ரதையாய்ப் பிரித்துப் பார்த்தார். ஒரு கடிதத்திற்குள் மெல்லிய டிஷ்யூ கடிதத்தில் மடித்து வைத்திருந்த வெடி மருந்தைக் கண்டு அதை ஸி. ஐ. டி. க்கு (குற்ற விசாரணை இலாகா) சோதனை செய்ய அனுப்பிவிட்டார்.

16-தேதி.—

ராமக்ருஷ்ணபரமஹம்ஸர்—இவருடைய 78-வது வருஷம்பிறந்த நாள் கொண்டாட்டம் இன்றையதினம் சென்னை மைலாப்பூரில் நடைப்பெற்றது. ஆனரபில் மிஸ்டர் பி. எஸ். சிவஸ்வாமி அய்யர் அக்ராஸனம் வகித்தார்,

18-தேதி.—

க்ரீஸ் அரசர்.—இன்றையதினம் மத்யானம் க்ரீஸ் அரசர் சுட்டுக்கொல்லப்பட்டார். சுட்ட அரைமணி நேரத்தில் அரசர் இறந்து போனார். சுட்டவன் உடனே கைதி செய்யப்பட்டான்.

கம்பெனி மசோதா.—இன்றையதினம் இந்திய கம்பெனி மசோதா இம்பீரியல் லஜிஸ்லெடிவ் கௌன்ஸிலில் ஆக்டாகச் செய்யப்பட்டது.

மங்கோலியா.—சீனதேசம் மங்கோலியாவை தன் ஸ்வாதீன மாக்குவதற்கு மங்கோலியாமேல் படையெடுப்பதின் நிமித்தம் ப்ரயத்னங்கள் செய்வதாகத் தெரியவருகிறது. இதனால் மங்கோலியாவை ஆதரிக்க எண்ணியிருக்கிற ரஷ்யாவுக்கும் சீனாவுக்கும் யுத்தம் நடக்கக்கூடும் என்று ப்ரஸ்தாபமாயிருக்கிறது.

19-தேதி.—

சதியடக்கு மசோதா.—இன்றையதினம் ராஜப்ரதிநிதி சட்ட ஸபையில் சதியடக்கு மசோதா சட்டமாக நிறைவேறிற்று.

20-தேதி.—

கை ப்ளீட்வுட் வில்ஸன்.—இம்பீரியல் லெஜிஸ் லெடிவ் கௌன்ஸிலின் வைஸ் ப்ரெஸிடெண்டும் வரவு செலவு மெம்பருமான ஸர் கை ப்ளீட்வுட் வில்ஸனின் உத்யோககாலம் சீக்ரம் முடிந்துபோகிறது. அவருடைய உத்யோக காலத்தை இன்னம் அதிகப்படுத்தும்படி ஷை கௌன்ஸிலின் உத்யோகஸ்தர்களல்லாத மெம்பர்கள் ஒன்றுகூடி ஒரு விண்ணப்பம் கொடுத்திருக்கிறார்கள் என்று தெரியவருகிறது.

22-தேதி.—

கோதாவரி டிஸ்ட்ரிக்ட் கான்பரேன்ஸ்.-இன்றையதினம் ஷை கான்பரென்ஸ் காக்கினாடாவில் கூடிற்று. ஆனரபில் மிஸ்டர் வி. எஸ். ஸ்ரீனிவாஸ சாஸ்த்ரியார் அவர்கள் அக்ராஸனம் வகித்தார். அக்ராஸனாதிபதியவர்கள் கோதாவரி ஜில்லாவையும் தஞ்சாவூர் ஜில்லாவையும் ஒப்பிட்டுக் கல்வி, கூட்டுறவு முதலிய விஷயங்களைப்பற்றி விஸ்தாரமாய்ப் பேசினார்.

தியாஸாபிகல் பெடரேஷன்.—இதன் பதினேராவது வருஷாந்தரமீட்டிங் திருநெல்வேலியில் நடைபெற்றது. அடையாற்றிலுள்ள எச். பி. வாடியா அக்ராஸனம் வகித்து, தியாஸபியைப்பற்றி ப்ரஸங்கம் செய்தார்.

ஐக்யநாணயக் கான்பரேன்ஸ்.—மதுரை—ராமநாதபுரம் ஜில்லா ஐக்ய நாணய கான்பரென்ஸ் இன்றையதினம் மதுரையில் கூடிற்று. ஆனரபில் மிஸ்டர் பி. எஸ். சிவஸ்வாமி அய்யர் அவர்கள் அக்ராஸனம் வகித்து ஒரு நேர்த்தியான ப்ரஸங்கம் செய்தார். அநேக வ்யாஸங்கள் வாசிக்கப்பட்டன. பல தீர்மானங்கள் செய்யப்பட்டன.

23-தேதி.—

கிருஷ்ணாடிஸ்ட்ரிக்ட் கான்பரேன்ஸ்.—க்ருஷ்ணா

டிஸ்ரிக்ட் கான்பரென்ஸ் 22-வது தடவையாகமஸூலிப்பட்டணத்தில் கூடிற்று. மிஸ்டர் பி. நாசபூஷணம், எம்.ஏ, பி.எல்., அவர்கள் அக்ராஸனம் வகித்தார். அவர் தமது ப்ரஸங்கத்தில் டெல்லி சதிச் செயலைப்பற்றிச் குறித்துவிட்டு, க்ருஷ்ண கான்பரென்ஸ் செய்திருக்கும் கார்யங்களையும், க்ருஷ்ண பத்ரிகா செய்துவரும் நன்மையையும் கூறி, ஆந்தர ஜாதிய கலாசாலையானது தன்னயம் பாராட்டாத தேசாபிமானத்தின் பயனுக இருக்கிறதென்றும் கூறினர். இன்னம் ஆந்த்ரா முயற்சியைப்பற்றியும் க்ராமக்கோர்ட்டுகள், பஞ்சாயத்துகள், கல்வி, விவஸாயம் முதலியவைகளைப்பற்றியும் பேசினர்.

கோதாவரி ஜில்லா கான்பரென்ஸ்.—டிகான்பரென்ஸ் இரண்டாவதுநாள்கூடிற்று.பலதீர்மானங்கள் செய்யப்பட்டன. பெத்தாபுரத்துக்குக் குடி நீர்வஸதி வேண்டுமென்றும், வாய்கால்களுச்கும் வடிகால்களுக்கும் மதகுகள் கட்டவேண்டியது அவச்யமென்றும், கோதாவரி நீராரம்பத்தில் வடிகால் வஸதி செய்ய வேண்டுமென்றும், சில தாலூக்கா போர்டுகளுக்கு உத்யோகஸ்தர்களல்லாத ப்ரெஸிடெண்டு நியமிக்கப் படவேண்டுமென்றும், இன்னம் பல தீர்மானங்களும், செய்யப்பட்டன.

தோட்டக்கச்சேரி.—இன்றையதினம் மதுரையில் ஆனரபில் மிஸ்டர் பி. எஸ். சிவஸ்வாமி அய்யர் அவர்களுக்காக மதுரை முனிஸிபல் கௌன்ஸிலரும் திருவாலே ஜமீன்தாருமாகிய மிஸ்டர் பி. வி. முத்துசெட்டியார் ஒரு தோட்டக்கச்சேரி நடத்தினர். அநேக உத்யோகஸ்தர்களும் ஜன ப்ரமுகர்களும் வந்திருந்தார்கள். மதுரையில் ப்ரபலபலிஷ்டராகிய மிஸ்டர் ஸுப்ரமண்ய அய்யர், தம்மார்புமேல் கல்லை வைத்து சம்மட்டியால் அடித்தல்,சங்கிலி யறுத்தல், முதுகின்மேலும், தொடைமேலும் வண்டியை ஒட்டச்செய்தல் முதலிய வேடிக்கைகளைச் செய்து காட்டினர்.

25-தேதி.—

**வி. க்ருஷ்ணஸ்வாமி அய்யர்:**—இன்றையதினம் நமது கவர்னர் லார்டு பெண்ட்லண்ட் அவர்கள் விக்டோரியாபப்ளிக்ஹாலில் காலஞ்சென்ற வி. க்ருஷ்ணஸ்வாமி அய்யரின் படம் ஒன்றைத்திறந்து வைத்தார். காலஞ்சென்ற வி. க்ருஷ்ணஸ்வாமி அய்யர் 5 வருஷ காலமாக ஸுகுண விலாஸ ஸபையின் ப்ரஸிடெண்டாக இருந்ததால் அந்தஸபையார் அவருடைய படத்தை விக்டோரியா பப்ளிக்ஹாலில் வைக்கும்படி ஏற்பாடுசெய்தார்கள். ஆனரபில் ஜஸ்டிஸ், பி. ஆர். ஸுந்தரய்யர் க்ருஷ்ணஸ்வாமி அய்யருடைய குணதிசயங்களைப்பற்றிப் பேசினர்.

துருக்கிபால்கன் யுத்தம்.—அட்ரியானேபிலில் சிலடாகங்கள் பல்கேரியர்களால் பிடிக்சப்பட்டிருக்கின்றன என்று ஸமாசாரம் எட்டுகிறது.

26-தேதி.—

துருக்கி பால்கன்யுத்தம்.—அட்ரியானேபிலை முழுவதும் பல்கேரியர்கள் பிடித்துவிட்டார்கள். துருக்க ஸேனாதிபதி கோட்டையை பல்கேரியர் வசம் விட்டுவிட்டார்.

அமெரிக்காவில் வெள்ளம்.—அமெரிக்கா ஐக்ய மாகாணங்களில் பெருங்காற்றடித்து வருகிறது. வெள்ளம் மிகுதியாயிருக்கிறதாம். அநேகபட்டணங்கள் வெள்ளத்தில் மூழ்கியிருக்கின்றனவாம். ஸுமார் 10 0 ஜனங்கள் வெள்ளத்துக் கிரையானார்களாம். ஒஹியோ ப்ரதேசத்தில் ஒரு ஏரி உடைந்து போய் அநேகர் மாண்டுபோய் விட்டார்களாம்.

28-தேதி.

துருக்கி பால்கன்யுத்தம்.—இன்றையதினம் பல்கேரிய அரசர் அட்ரியனேபில் நரகத்தில் ப்ரவேசம் செய்தார். சுக்ரிபாஷா தமது வாளை அரசரிடம் கொடுத்தார். அரசர் ஸ்துத்யமான வார்த்தைகள் சில பேசிவிட்டு வாளைத் திருப்பிப் பாஷாவினிடம் கொடுத்தார்.

துருக்கி பால்கன் யுத்தம்.—யுத்த ஸமாதானவிஷயமாய் வல்லரசுகள் அறிவித்தது பால்கன் அரசுகளுக்கு த்ருப்திகரமா யில்லையாம். துருக்கி ஸமாதான உடன்படிக்கைக்கு கையெழுத்திடும்வரையில்பல்கேரியாயுத்தம் நடத்தி வரவேண்டுமென்று தீர்மானித்திருக்கின்றனவாம்.

31-தேதி.

ஸர். நாராயண சந்தாவர்க்கர்.—பம்பாய் ஹைகோர்ட்டில் ஜட்ஜான ஸர் நாராயண சந்த்ரவர்க்கர் அவர்கள் இந்தூர் ஸமஸ்தானத்து ப்ரதம மந்த்ரியாகப்போவதால் இன்றையதினம் தமது ஜட்ஜிவேலையை விட்டு நீங்கினர். அவருக்குப்பதிலாய் மிஸ்டர் லல்லுபாய் ஆஸ்ட்ராம் ஷா அவர்கள் ஜட்ஜாய் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

## SEASON.

## காலஸ்திதி.

**Rainfall.**

மழை.—1912ஞு எப்ரல்மீ 11உயிலிருந்து 1913ஞு மார்ச்சுமீ 31உவரையில் பெய்த மழையின் அளவும், இந்தக் காலத்தில் ஸராஸரியில் பெய்திருக்க வேண்டிய மழையின் அளவும், கீழே அங்குலம் ஸெண்டுகளாகக் குறிக்கப்பட்டிருக்கின்றன.

| மழை பெய்த ஊரின் பெயர். | பெய்த மழை அங்குலம். | பெய்திருக்க வேண்டிய மழை அங்குலம். |
|---|---|---|
| கோபால்பூர் | 37·41 | 41·87 |
| வால்டேர் | 32·23 | 37·16 |
| காக்கிஞடா | 26·23 | 38·96 |
| மசூலிப்பட்டணம் | 42·91 | 40·00 |
| நெல்லூர் | 44·58 | 34·97 |
| மதராஸ் | 44·00 | 49.47 |
| கூடலூர் | 47·88 | 50 89 |
| நாகப்பட்டணம் | 40·99 | 53·56 |
| பாம்பன் | 30·19 | 37·19 |
| கொழும்பு | 115·02 | 84·51 |
| திருவநந்தபுரம் | 92·75 | 63·35 |
| கொச்சி | 145·51 | 113·84 |
| கள்ளிக்கோட்டை | 139·64 | 116·91 |
| மங்களூர் | 144·71 | 127·08 |
| மெர்க்காரா | 133·12 | 126·88 |
| ஐதராபாத் | 23·71 | 31·32 |
| பல்லாரி | 22·41 | 19·98 |
| கர்நூல் | 19·17 | 26·91 |
| கடப்பை | 28·22 | 31·59 |
| ஹாஸ்ஸான் | 40·65 | 35·82 |
| பெங்களூர் | 41·35 | 35·51 |
| கொடைக்கானல் | 69·39 | 61·65 |
| உதகமண்டலம் | 53·14 | 56·28 |
| கோயம்புத்தூர் | 29·60 | 22·10 |
| வேலூர் | 42·26 | 45·35 |
| சேலம் | 32·86 | 40·20 |
| திருச்சிஞப்பள்ளி | 32·08 | 32·86 |
| புதுக்கோட்டை | 36·81 | 33·70 |
| மதுரை | 33·38 | 34·30 |
| திருநெல்வேலி | 26·42 | 27·29 |

## SELLING LANDS and AGRICULTURAL PRODUCE.

## நிலங்களேயும் விவஸாயப் பொருள்களேயும் விற்பனே செய்தல்.

விவஸாய ஸம்பந்தமாய் டிபார்ட்மெண்டாரும், பத்ரிகைகளும், ஸங்கங்களும் எடுத்துக்கொண்ட முயற்சியால் விவஸாயிகள் நூதன பயிர்களே பயிர் செய்யத் தொடங்கி யிருக்கிறார்கள். ஆனல் அவர்கள் உற்பத்தி செய்யும் பொருள்களே ஸரியானபடி விற்பனே செய்து லாபமடைவதில் கஷ்டமடைந்து வருகிறார்கள் என்று தெரியவருகிறது. அவர்கள் எப்படிக் கஷ்டப்படுகிறார்கள் என்பதற்கு ஒரு உதாரணம் கொடுக்கிறோம். 'கிருஷிகன்' பத்ரிகையில் ஒரு நிருபர் தாமும் தமது நண்பரும் இந்த வருஷம் 10-எகருக்குமேல் கம்போடியாப் பருத்தி ஸாகுபடி செய்திருப்பதாகவும், சென்ற வருஷம் எடுத்த பருத்தி இன்னம் விலேயாகாமல் இருக்கிறதென்றும் சொல்லுகிறார். மேலும் இதை விற்பதைப் பற்றி விவஸாய டிரெக்டருக்கு எழுதிக் கேட்டதில் அவர் பின்னி கம்பெனிக்கு அனுப்பச் சொன்னதாகவும், அவர்கள் போட்டது விலே, இட்டது சட்டமா யிருக்கிறதென்றும் சொல்லுகிறார். இவர்கள் பொருளே உற்பத்தி செய்து விலேப்படுத்த முடியாமல் கஷ்டப்படுவது விஸனிக்கத்தக்கதே. ஆனல் வ்யாபாரத்தில் ஆரம்பத்தில் இப்படிப்பட்ட கஷ்டங்கள் உண்டாவது ஸஹஜமே. மற்றவ்யாபாரிகளும் மற்றவர்களும் இதேமாதிரி கஷ்டமடைகிறார்கள். இவர்கள் வ்யாபார ஸம்பந்தமான பத்ரிகைகளில் தங்கள் சரக்குகளே விளம்பரம் செய்வது ரொம்பவும் நல்லது. இந்த மாஸம் இந்தப் பத்ரிகையில் ஒருவர் தமது நிலங்களில் சிலவற்றை விற்பனே செய்வதாக விளம்பரம் செய்திருக்கிறார். மற்ற விவஸாயிகளும் இப்படியே செய்வது நல்லது. இந்த பத்ரிகையின் சந்தாதார்களான விவஸாயிகளும் வ்யாபாரிகளும், மற்றவர்களும் தங்களுடைய விலேயுள்ள பொருள்களே இந்தப் பத்ரிகையில் ஸுலபமாய் விளம்பரம் செய்வதற்கு வேண்டிய ஸௌகர்யங்கள் செய்துகொடுக்க உத்தேசித்திருக்கிறோம். இன்னம் இப்படி விளம்பரம் செய்பவர்கள் அதிகமானல் அவர்களுக்கு விசேஷமான ஸௌகர்யங்களும் செய்து கொடுக்கப்படும். இது விஷயமாய் இன்னம் விவரம் வேண்டுவோர் மெஸ்ஸர்ஸ் ஜி. எ. வைத்யராமன் அண்ட் கம்பெனி (3, 4, சுங்குராமசெட்டி தெரு, ஜார்ஜ்டவுன், சென்னே) க்கு எழுதித்தெரிந்துகொள்ளவும். சந்தாதார்கள் அல்லாதவர்கள் பதிலுக்காக ஒரு அணு தபால் ஸ்டாம்பு அனுப்பவேண்டியது அவச்யம்.

# Calender—பஞ்சாங்கம்.

| சாலிசகம்-கஅகூடு கலியப்தம்-ருOகச | | | பால்குனம் சைத்ரம் | 46-பரிதாவிஷூ பங்குனிமீ உத்தராயணம் - சிசிரருது | கொல்லம்-கOஅஅ பஸலி - கூஉஉ | இங்கிலீஷ்-1913ஷூ மார்ச்சுமீ ஏப்ரல்மீ | | ஹிஜரி-கஙூக ரப்யூஸானி ஜமாதிலவல் |
|---|---|---|---|---|---|---|---|---|
| சிம | 4 11 | 2949 | 5 | 14 | 1 | வெ | | ஷஷ் 22-3, கிரு 9-16, விஷ் 21-14, கர 51-52, ரா 20-23, மீனசூன்யதி, சாந்திரஷஷ்டீதி, விருத்யர்க்கம், அப-ஆதி-17-53, அந்தம் 23-51, ஷஷ்டியுப |
| அசி | 3 | 51 | 6 | 15 | 2 | ச | | ஸப் 21-15, ரோ 10-23, பிரீ 17-50, பத் 50-15, தி 24-24, திதிதுவயம், அப-ஆதி 17-55 |
| சி | 3 54 | 53 | 7 | 16 | 3 | ஞா | | அஷ் 18-47, மிரு 9-53, ஆயு 13-6, பால 46 55, ரா 0-25, நவமீதி |
| சிஅ | 46 | 54 | 8 | 17 | 4 | தி | | நவ 14-39, திரு 7-44, ஸவு 7-2, உப 52-41, தை 42-0, ரா 6-10 |
| சி | 37 | 56 | 9 | 18 | 5 | செ | | தச 9-1, புன 4-3, உப 55-2, அதி 51-21, வணி 35-41, தி 22-30, ஸ்மார்த்த ஆமலக ஏகாதசி |
| சி | 29 | 57 | 10 | 19 | 6 | பு | | ஏகா 2-4, உப 52-3, ஆயி 53-4, சுக 42-3, பவ 28-11, தி 27-57, வைஷ்ணவ ஏகா, அவம |
| அசி | 21 | 2958 | 11 | 20 | 7 | வி | | திர 45-32, மக 46-24, திரு 32-12, கவு 19-52, தி 19-47, பிரதோஷ |
| சி | 12 | 30 0 | 12 | 21 | 8 | வெ | | சசி 36-36, பூர 39-26, சூல 22-1, கர 11-5, தி 4-5, ரா 25-21, மேஷாயனம் 10-8, ஹோலிப்பண்டிகை |
| உம | 4 | 2 | 13 | 22 | 9 | ச | | ○ 27-48, உத் 32-35, கண் 11-18 பத் 2-10, பால 53-35, ரா 21-17, பூர்ணிமாதி மன்வாதி, பங்குனி உத்திரம் |
| அசி | 56 | 3 | 14 | 23 | 10 | ஞா | | பிர 19-30, ஹஸ் 26-18, விரு 1-55, உப 50-45, தை 45-41, ரா 14-22, பால்குனபகுள, திதிதுவயம், |
| பிஅ | 47 | 5 | 15 | 24 | 11 | தி | | துவி 12-5, சித் 20-57, வியா 44-20, வணி 38-49, ரா 3-47, திருதீயாதி [இஷ்டி, ஆம்ரகுசுமாசன |
| சிம | 39 | 6 | 16 | 25 | 12 | செ | | திரி 5-57, சுவா 16-55, ஹர் 37-11, பவ 33-27, ரா 0-6, சங்கடசதுர்த்தி, பௌமசதுர்த்தி |
| சிஅ | 31 | 7 | 17 | 26 | 13 | பு | | சது 1-23, உப 57-18, விசா 14-32, வஜ் 31-31, கவு 29-17, தி 24-18, அவம |
| சிபி | 22 | 9 | 18 | 27 | 14 | வி | | ஷஷ் 57-58, அனு 14-0, வித் 27-18, கர 28-4, தி 28-9 |
| மஅ | 14 | 11 | 19 | 28 | 15 | வெ | | ஸப் 59-14, கேட் 15-26, விய 24 43, பத் 28-21, ரா 6-0, வியகிர [பிருக், காலாஷ்டமி |
| சி | 5 | 12 | 20 | 29 | 16 | ச | | அஷ் 60-0, மூல 18-47, வரீ 23-38, பால 30-34, தி 14-30, ரா 14-25, திரிதினஸ் |
| சிஅ | 1 57 | 14 | 21 | 30 | 17 | ஞா | | அஷ் 2-20, பூரா 23-49, பரி 23-54, தை 34-30, ரா 15-38 |
| மஅ | 49 | 15 | 22 | 31 | 18 | தி | | நவ 7-2, உரா 30-17, சிவ 25-17, வணி 39-49, ரா 11-13 |
| சி | 40 | 17 | 23 | 1 | 19 | செ | | தச 12-52, சிர 37-39, சித் 27-26, பவ 46-5, ரா 18-41, ஏகாதசீதி, சிரவண உப |
| பிசி | 32 | 18 | 24 | 2 | 20 | பு | | ஏகா 19-22, அவி 45-29, சாத் 29-59, கவு 52-42, அதிதி, ஸர்வஏகா |
| மசி | 24 | 20 | 25 | 3 | 21 | வி | | துவா 25-59, சத 53-17, சுப 32-35, கர 59-14, தி 5-50, துவாதசீதி, பிரதோஷ, வா |
| சி | 15 | 22 | 26 | 4 | 22 | வெ | | திர 32-20, பூட் 60-0, சுப் 34-58, வணி 32-20, தி 11-18, மாஸசிவரா [ருணீயோசம் |
| மசி | 7 | 23 | 27 | 5 | 23 | ச | | சசி 38-2, பூட் 0-39, பிரா 36-52, பத் 5-18, தி 27-24, |
| அ | 0 59 | 24 | 28 | 6 | 24 | ஞா | | ● 42-51, உட் 7-18, மா 38-5, சது 10-34, ரா 9-52, ஸர்வஅமா, பிண்டபிதிரு, மன்வாதி |
| சி | 50 | 26 | 29 | 7 | 25 | தி | | பிர 46-39, ரே 13-0, வை 38-30, கிம் 14-52, சைத்ரசுத்தம், இஷ்டி, வைசிரா சாந்திரசம்வத்ஸராதி, தேவீ |
| சி | 42 | 27 | 30 | 8 | 26 | செ | | துவி 19-17, அசு 17-41, விஷ் 3 85, பால 186, தி 9-59 ரா 12-49, சந்திரதர்சனம் [நவராத்ராம்பம், கல்பாதி |
| சிஅ | 33 | 28 | 1 | 9 | 27 | பு | | திரி 50-46, பர 21-16, பிரீ 36-47, தை 20-9, ரா 22-10, கிருத்திகை, ஆந்தோளன திரிதீயை, மன்வாதி |
| மஉ | 25 | 30 | 2 | 10 | 28 | வி | | சது 51-1, கிரு 23-41, ஆயு 34-34, வணி 21-2, சதுர்த்தீவிரு, சக்திகணபதிவிரு [பூஜை, கல்பாதி |
| மசி | 17 | 32 | 3 | 11 | 29 | வெ | | பஞ் 50-7, ரோ 24-56, ஸவு 31-23, பவ 20-42, தி 4-39 ரா 8-31, லக்ஷ்மீபஞ்சமி ஹயவிருத, அநந்தாதிநாக |
| சி | 0 8 | 3033 | 4 | 12 | 30 | ச | | ஷஷ் 48-1, மிரு 25-1, சோ 27-17, கவு 19-12, ரா 15-15, மேஷரவி 58-24, மீனஷஷ்டீதி, ஷஷ்டியுப, ஸ்கந்ததமனோரோப |

| | | | |
|---|---|---|---|
| ர-பு | ச | ச | |
| செ | 7குமப-செ | | |
| கு | | | கே |

# Calender—பஞ்சாங்கம்.

| அம்ருதாதி | லக்னசேஷ | அகர்மாந | துலு | இங் | தமி | வா | 47-பிரமாதீஷு சித்திரைமீ உத்தராயணம்-வஸந்தருது { சைத்ரம் வைசாகம் } கொல்லம்-1088 பஸலி-1322 ; இங்கி - 1913ஷு ஏப்ரல்மீ-மேமீ ; ஹிஜரி-1331 ரப்யூஸானி-ஜமாதிலவல் |
|---|---|---|---|---|---|---|---|
| சி | 4 32 | 30 34 | 5 | 13 | 1 | ஞா | ஸப் 44-44, திரு 23-58, அதி 22-15, கர 16-30, ரா 22-28, விஷுவத்புண்யகால, மேஷசூன்யதி, மித்ர ஸந்தானஸப்தமி, பாஸ்கரதமன, விருத்யர்ச்சகம். [பத்தி |
| அசி | 23 | 36 | 6 | 14 | 2 | தி | அஷ் 40-22, புன 21-48, சுக 16-21, பத் 12-41, ரா 10-14, மேஷசூன்யதிதி, அசோகாஷ்டமீ, பவான்யுத் |
| சி | 14 | 37 | 7 | 15 | 3 | செ | நவ 35-11, பூச 18-37, திரு 9-35, பால 7-50, ரா 17-54, ஸ்ரீராமநவமி, தேவீதமனம், மேஷநவமீதி |
| சி | 6 | 39 | 8 | 16 | 4 | புத | தச 28-42, ஆயி 14-31, சூல 2-2, உப 51-51 தை 1-57, வணி 55-23, ரா 11-32, தசமீதி |
| அசி | 3 57 | 40 | 9 | 17 | 5 | வி | ஏகா 21-53, மக 9-43, விரு 45-16, பவ 48-16, தி 27-58, திதிதுவயம், ஸர்வஜீவவார ஏகா, விஷ்ணுதமனம், கிருஷ்ணந்தோளனம், இராமா [யோதசி, திவாமா, கரிநாள் |
| சிசிஅ | 48 | 41 | 10 | 18 | 6 | வெ | த்வா 14-32, பூர 4-24, உப 54-24, துரு 36-21, கவு 40-45, தி 20-42, திரயோதசீதி, பிரதோஷம், மதனத்ர |
| ம | 39 | 43 | 11 | 19 | 7 | ச | த்ர 6-57, உப 52-35, ஹஸ் 53-17, வியா 27-21, சர 33-11, தி 17-19, தமனசதுர்த்தசி, அவம |
| சி | 30 | 44 | 12 | 20 | 8 | ஞா | ○ 52-33, சித் 48-11, ஹர் 18-36, பத் 27-57, தி 11-31, ரிஷபாயன 40-56, சித்ராபூர்ணிமா, ஸர்வதே |
| அம | 22 | 45 | 13 | 21 | 9 | தி | ப்ர 46-21, சுவா 43-50, வஜ் 10-18, பால 19-19, தி 1 5, ரா 26-12, சைத்ரபகுள, இஷ்டி [வதமனம், |
| மசி | 13 | 47 | 14 | 22 | 10 | செ | த்வி 41-18, விசா 40-39, விதி 2-45, உப 53-30, தை 13-40, சே 0-58, ரா 19-28, வியசிரா |
| அசி | 4 | 48 | 15 | 23 | 11 | புத | த்ரி 37-42, அனு 38-54, வரீ 51-0, வணி 9-18, ரா 21-58, சந்திர உதயம் 37-17, |
| பிசி | 2 55 | 50 | 16 | 24 | 12 | வி | சது 35-54, கேட் 38-54, பரி 47-10, பவ 6-35, ரா 28-29, சங்கடசதுர்த்தி |
| அபி | 46 | 51 | 17 | 25 | 13 | வெ | பஞ் 35-57, மூல 40-45, சிவ 44-54, கவு 5-42, சே 3-49 ரா 5-43, வராஹஜயந்தி |
| சி | 37 | 52 | 18 | 26 | 14 | ச | ஷஷ் 38-58, பூரா 44-29, சித் 44-3, கர 6-45, தி 6-2 |
| அ | 29 | 54 | 19 | 27 | 15 | ஞா | ஸப் 41-44, உரா 49-54, சாத் 44-36, பத் 9-39, தி 6-7, மித்ரஸப்தமி, கரிநாள் |
| அசி | 20 | 55 | 20 | 28 | 16 | தி | அஷ் 46-58, திருவோ 56-39, சுப 46-14, பால 14-13, தி 0-57, சிரவண உபவா |
| சி | 11 | 56 | 21 | 29 | 17 | செ | நவ 53-8, அவி 60-0, சுப் 48-37, தை 19-57, தி 7-52 [காலாஷ்டமி |
| பிசி | 2 | 57 | 22 | 30 | 18 | புத | தச 59-36, அவி 4-13, பிரா 51-14, வணி 26-21, தி 24-32, |
| மசி | 1 53 | 30 59 | 23 | 1 | 19 | வி | ஏகா 60-0, சத 12-0, மா 53-42, பவ 32-45, தி 30-1, திரிதினஸ் பிருக், |
| சி | 45 | 31 0 | 24 | 2 | 20 | வெ | ஏகா 5-47, பூட் 19-25, வை 55-42, கவு 38-37, ரா 15-13, வைசிரா ஸர்வஏகா [மத்ஸ்யஜயந்தி |
| சிபி | 36 | 1 | 25 | 3 | 21 | ச | த்வா 11-14, உட் 26-3, விஷ் 56-52, கர 43-32, ரா 27-54, சனிப்பிரதோஷ, அக்னிநாளாரம்ப 30-58, |
| அசி | 27 | 2 | 26 | 4 | 22 | ஞா | த்ர 15-30, ரே 31-28, பிரீ 57-1, பத் 47-9, சே 2-55, மாஸசிவரா, இராமா |
| சி | 18 | 4 | 27 | 5 | 23 | தி | சசி 18-26, அசு 35-35, ஆயு 56-4, சது 49-21, தி 25-0, ஸர்வஅமா, திவாமா, சிவஸ்ஞனம் [பிதிரு |
| சி | 9 | 5 | 28 | 6 | 24 | செ | ● 19-56, பர 38-16, ஸவு 54-5, கிம் 50-13, தி 0-49, பிரதமாதிதி, புஷ்களாபோதாயன இஷ்டி, பிண்ட |
| அசி | 0 | 6 | 29 | 7 | 25 | புத | ப்ர 20-8, கிரு 39-49, சோ 51-4, பால 49-45, தி 9-12, த்விதீயாதி, வைசாகசுத்த, இஷ்டிசந்திரதர்சன |
| உம | 0 52 | 7 | 1 | 8 | 26 | வி | த்வி 19-4, ரோ 40-8, அதி 47-7, தை 48-7, தி 20-8, ரா 22-56, பலராமஜயந்தி, [கிருத்திகை |
| சி | 43 | 8 | 2 | 9 | 27 | வெ | த்ரி 19-56, மிரு 39-27, சுக 42-25, வணி 45-32, அக்ஷயதிரிதிய, சதுர்த்திவிரு, கல்பாதி, திரேதாயுகாதி |
| சி | 34 | 9 | 3 | 10 | 28 | ச | சது 13-55, திரு 37-58, திரு 37-3, பவ 42-7, தி 0-1, லாவண்ய கௌரீவிருத, [பாதாள் அவதாரதினம் |
| சி | 25 | 10 | 4 | 11 | 29 | ஞா | பஞ் 10-11, புன 35-49, சூல 31-10, கவு 38-5, தி 6-58, ரா 23-48, ஷஹுடியுபவா, ஸ்ரீ சங்கரபகவத் |
| சி | 16 | 11 | 5 | 12 | 30 | தி | ஷஷ் 5-50, பூச 33-7, கண் 24-48, சர 33-28, மேஷஸப்தமீதி, கங்கோத்பத்தி |
| சி | 0 8 | 31 13 | 6 | 13 | 31 | செ | ஸப் 0-59, உப 54-45, ஆயி 29-58, விரு 17-54, பத் 28-24, தி 3-44, ரா 27-3, ரிஷபரவி 51-26, மேஷ அஷ்டமீதிதி, அவம, |

| | | | |
|---|---|---|---|
| பு ரா | ர-சு | ச | |
| செ | 16மீனசெ 25-மேபு | | |
| குரு | | | கே |

177

# சாஸ்திரீய உ ரங்கள்.

எங்கள் ராணிப்பேட்டை உரக்கிடங்கு.

## விசேஷ உர ங்கள்.

மேற்கூறிய விசேஷ உரங்களின் வி லைகள் எழுதித்தெரிந்து கொள்ளலா ம்.

இந்த தேசத்தில் இரஸாயன உரங்களில் உபயோகிக்கிற சரக்குகளின் விவரங்கள் பின் வருமாறு குறிக்கப்படுகின்றன. இந்த சர க்குகள் தனிபாகவும் உரங்களில் கலந்து கலப்பு உரங்களாகவும் வியவஸாயிகளுக்குத் தேவை யான பிராகரம் விற்கப்படுகின்றன.

நைட்ரஜன் உரங்கள் (Nit ogenous Manures.)

முத்துக்கோட்டைப் புண்ணுக்கு stor Poonac), மணிலாக்கோட்டைப் புண்ணுக்கு (Groundnut Poonac) புங்கை ண்ணுக்கு (Pungai Poonac), வேப்பம் புண்ணுக்கு (Neem Poonac) முதலிய புண் துகள் எங்கள் கிடங்கு இயந்திரத்தினால் சன்னமாய் தூள்படுத்தப்பட்டிருக்கிறபடியால், உட னே உரமாகத் தெளிக்கக்கூடிய நிலைமையில் விற்கப்படுகின்றன. இவைகள் கலப்பு உரங்களில் (Mixed manure) நாளடைவில் கொஞ்சம் கொஞ்சமாய் உபயோக மாகக்கூடிய நைட்ரஜனையும், இந்திரிய வஸ்துவையும் (Organic matter) கொடுக்கக்கூடியவைகள். இந்த நைட்ரஜன்.

முத்துக்கோட்டை புண்ணுக்கில் 100-ல் 5 முதல் 6 வரையிலும்.
மணிலாக்கோட்டைப் புண்ணுக்கில் 100-ல் 7 முதல் 8 வரையிலும்.
புங்கைப் புண்ணுக்கில் 100-ல் 4 முதல் 5 வரையிலும்.
வேப்பம் புண்ணுக்கில் 100-ல் 4 முதல் 5 வரையிலும், உத்தரவாதம் (Guarantee) செய்கிறோம்.

ஸல்பேட் ஆப் அமோனியா (Sulphate of Ammonia). இதைக் காட்டிலும் அதிக நைட்ரஜனுள்ள சரக்கு கிடையாது. இது தண்ணீரில் கரையக்கூடியது. இதில் 100-ல் 20 பங்கு நைட்ரஜன் உத்தரவாதம் செய்கிறோம்.


***The Presidency Manure Works, Ltd.,***
***Ranipet.***
***Managing Agents: Parry & Co., Madras.***

**ராஜதானி ரஸாயன உரக்கிடங்கு, ராணிப்பேட்டை.**
மானேஜிங் ஏஜண்டுகள்:—
பாரி அண்டு கம்பெனி,
மதராஸ்.

# KHADER AND YOUSUFF BROS

**Watch Dealers** P. L., MADRAS, E. C.

## "ஸிர்தார்"



மேல இதுள்ள சாவி யு[illegible]த்ததும், கனமா கண்ணடிட்ல் மூடிபேம்டதும் மிகல சரியான க[illegible]த்தைக் க[illegible]டக் கூடிய[illegible]ம்வெகு ந[illegible]க்கு ஓட[illegible]டியது ம[illegible] வெகு [illegible]த்தியான [illegible]கை கடியாரம். தென் இந்தியா ரயில்வே உத்தியோகஸ்தர்களுக்கு ஸப்ளை செய்யப்படுகிறது. மிகவும் சிறந்த "லீவர்" கடியாரம்.

விலை ரூ. 12.


## "உத்தியோகஸ்தர்"

இது உத்யோகஸ்தர்களுக்குஸ்பெஷலாக செய்யப்பட்ட கடியாரம். மேல்சாவியுள்ளது. ஒருபக்கம் கனத்த கண்ணடியால் மூடியுள்ளது. சரியா[illegible] காலம் காட்டும். முரட்டுத்தனமாயுபயோகித்தாலும்கெட்டுப்போகாது. கொஞ்சம் சிறிய சயிஸ். அழகாயும் திருப்திகரமாயு மிருக்கும்.



தபாற்கூலியுள்பட — விலை ரூ. 10

## கோல்ட் மெடல் "யாங்கீ" ஸிர்க்யூட் கட்டில்.



இது மிகவும் சிறந்த அமெரிக்கன் மரத்திஞல் செய்யப்பட்டு, வெளியே போகிறவர்களுக்கு மிகவும் உபயோகமானது. இது $6\frac{1}{2}$ அடி நீளம் $2\frac{1}{2}$ அடி அகலம் $1\frac{1}{2}$ அடி உயரம். அதனுடைய நிறை 15 பவுண்டுதான். 1000 பவுண்டு இடை தாங்கும், கோடை காலத்தில் நிலா வெளிச்சத்தில் மிகவும் லகுவாய்த் தூக்கிக்கொண்டுபோய், வேண்டுமான இடத்தில் போட்டுக்கொண்டு தூங்கலாம். சொசுவலை யுள்பட ரூ. 20 இதற்கு எழுதும்போது, சமீபத்திலுள்ள ரயில் ஸ்டேஷனை எழுதுவதுடன் ரூ.5 அட்வான்ஸ் அனுப்பவேணும்.

## காதர் அண்டு யூஸப் பிரதர்ஸ்,

கடியார வர்த்தகர்கள், கவர்மெண்டு ஸப்ளையர்கள்,

பி. எல். சென்னை, E. C.

MADRAS: Printed by Thompson & Co. at the Minerva Press
Published by G. A. VAIDYARAMAN & Co., Sunkurama Chetty Street, George Town, Madras.